REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ ThinakaranLk / ThinakaranLK

2023 ஒக்டோபர் 19 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

வருட. 91 இல. 248 | Thursday 19, October, 2023 | 20பக்கங்கள் | 50/-




காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளல்;

# வெப்ப வலய நாடுகளை மையப்படுத்தி திட்டம்

## பசுமை பட்டுப்பாதை" மாநாட்டில் ஜனாதிபதி தெரிவிப்பு

உலகில் வெப்ப வலய நாடுகளே, உயிரியல் பல்வகைத்தன்மையை அதிகமாக கொண்டுள்ளன. எனவே, அந்த நாடுகளை மையப்படுத்தி விசேட வேலைத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் பட்சத்தில், எதிர்கால காலநிலை அனர்த்தங்களுக்கு ஈடுகொடுப்பதற்கான பெரும் பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உலகின் 80% உள்ளூர் தாவரங்களும், 50% பவளப் பாறைகள் மற்றும் சதுப்புநிலங்களும் வெப்ப வலயத்திற்குள்ளேயே காணப்படுகின்றன. இதனை அடிப்படையாக கொண்டே காலநிலை மாற்றம் தொடர்பிலான பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியை இலங்கை ஆரம்பித்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.



மூன்றாவது "பெல்ட் அண்ட் ரோட்" சர்வதேச மாநாட்டிற்கு இணையாக (18) சீன சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற "இயற்கை இணக்கப்பாட்டுக்கான பசுமை பட்டுப்பாதை" என்ற உச்சி மாநாட்டிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இம்மாநாடு சீன மக்கள் குடியரசின் உப ஜனாதிபதி ஹன் ஷென்க் (Han Zheng) தலைமையில் ஆரம்பமாகியது.

இதில், பங்கேற்றிருந்த ஐ.நா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் (Antonio Guterres), ஏனைய நாடுகளின் தலைவர்களும் உரையாற்றினர்.

மூன்று முக்கிய புவிசார் நெருக்கடிகளாக கருதப்படும், காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் உயிர் பல்வகைத்தன்மை அழிவடைதல் போன்ற விடயங்கள் தொடர்பிலான அவசர நடவடிக்கையாக காலநிலை மாற்றம்

06

இலங்கை வியட்நாம் நாடுகளுக்கிடையே

## பொருளாதார, சமூக, கலாசார தொடர்புகளுக்கு முன்னுரிமை

வியட்நாம் ஜனாதிபதி Vo Van Thuong தெரிவிப்பு



தென் கிழக்காசியா மற்றும் இலங்கைக்கு இடையிலான தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்வதற்கான களமாக வியட்நாமை மாற்றியமைக்க தயாரெனவும், இலங்கை மற்றும் வியட்நாமுக்கிடையிலான பொருளாதார, சமூக, கலாசார தொடர்புகளைப் பலப்படுத்தும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை அளிப்பதாகவும் வியட்நாம் ஜனாதிபதி வோ வென் தோக் (Vo Van Thuong) தெரிவித்தார்

சீனாவில் நடைபெறும் பெல்ட் அண்ட் ரோட் முன்னெடுப்புத் திட்டத்தின் மூன்றாவது சர்வதேச மாநாட்டிற்கு இணையாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் வியட்நாம்

06

நீதிபதி சரவணராஜா விவகாரம்

## சட்ட மாஅதிபர் எந்தவிதமான அச்சுறுத்தலையும் விடுக்கவில்லை

பொய்ப்பிரசாரங்கள் குறித்து நீதி அமைச்சர் விளக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி டி.சரவணராஜாவுக்கு சட்டமா அதிபர் அச்சுறுத்தல் விடுத்ததாக தெரிவிக்கப்படும் தகவல்கள் அடிப்படையற்றன. மற்றும் இது,

06

## தேர்தலை நடத்தும் உறுதியான நிலைப்பாட்டில் அரசாங்கம்

சபையில் பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தேர்தலை நாம் இரத்து செய்யவில்லை. தேர்தல் நடத்துவது தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டிலேயே உள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

தேர்தலை இரத்து செய்யுமாறு ஆளும் கட்சி போன்று எதிர்க் கட்சியின் சிலரும் எம்மிடம் வேண்டுகோள் விடுத்தனர். பாராளுமன்றத்திலும் இதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

06

## தெளிவுபடுத்தல்

'அரசியலமைப்பு சபையினால் நீக்கப்பட்ட பொலிஸ் மாஅதிபரை ஜனாதிபதி மீண்டும் நியமித்துள்ளார்' என்ற தலைப்பில் 'தினகரன்' பத்திரிகையில் வெளியான பிரதான தலைப்பு செய்தியின் உள்ளடக்கத்தில் 'தேவையேற்பட்டால் 'போதைப் பொருள் கடத்தல்காரர்களை பாதுகாப்பதற்கான பின்னணி உருவாக்கப்படும் என்ற பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறதென சிரேஷ்ட அமைச்சர் கூறியதாக' திருத்தப்பட வேண்டும்.

முதலாவது செய்தியில் அது குறித்து வெளியிடப்பட்டுள்ள குறிப்பினால் அரசியலமைப்பு பேரவைக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியிருந்தால் எமது ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் சபையில் முன்வைக்கப்படாது



பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட மாட்டாதென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இச்சட்டமூலம் பாராளுமன்றத்தில்

06

மாணவர்கள், அன்றாட தொழிலாளர் அனைவருக்கும் பாதிப்பு

## வடக்கு, கிழக்கில் நாளை தேவையற்ற ஹர்த்தால்

புத்திஜீவிகள், கல்விமான்கள், சமூக ஆர்வலர்கள் விசனம்

**யாழ். மத்திய குறூப் நிருபர்**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தேவையற்ற ஹர்த்தால்களை நடத்தி பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களினதும், அன்றாடம் தொழில் புரிந்து தற்போதைய பொருளாதார சூழலில் தமது குடும்பங்களை காப்பாற்ற உழைக்கும் மக்களின் வாழ்வுடனும் விளையாட வேண்டாமென வடக்கு கிழக்கிலுள்ள புத்திஜீவிகள், சமயத் தலைவர்கள், கல்விமான்கள் மற்றும் சமூக ஆர்வலர்களும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

**அன்றாட அலுவல்களில் ஈடுபடுமாறு கூட்டாக கோரிக்கை**

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாகவும் நீதவானாகவும் கடமையாற்றிய சரவணராஜா, தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்ததாக கூறி நாட்டை விட்டு வெளியேறிய சம்பவம் தொடர்பில் நாளை வெள்ளிக்கிழமை வடக்கு கிழக்கில் ஹர்த்தாலுக்கு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன.

இது குறித்து ஊடகங்களுக்கு இவர்கள் கருத்து தெரிவித்தபோதே இதனை தெரிவித்துள்ளனர்.

வடக்கு கிழக்கில் எதற்கு எடுத்தாலும் உடனடியாக ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்து முழு கடையடைப்பு போராட்டத்தை நடத்துவதே தற்போதைய

06

## வடக்கு, கிழக்கில் நாளை பொது முடக்கத்துக்கு அழைப்பு

எட்டுக்கட்சிகள் கூட்டாக கோரிக்கை




**யாழ். விசேட நிருபர்**

வடக்கு கிழக்கில் நாளைய தினம் வெள்ளிக்கிழமை பொது முடக்கத்திற்கு, தமிழ் பேசும் மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் உரிமையுடன் கோரியுள்ளதாக எட்டு கட்சிகள் கூட்டாக

06

## வடக்கில் கடற்றொழிலுக்கென பிரத்தியேக முதலீட்டு வலயம்

சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு பல நிகழ்வுகளும் ஏற்பாடு



வடமாகாணத்தில் கடற்றொழிலுக்கு பிரத்தியேகமான முதலீட்டு வலயமொன்றை ஏற்படுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதன் மூலம் கடற்றொழில் தொடர்பான முதலீடுகளை கொண்டுவர முடியும் எனவும் கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.

இதனூடாக அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

06



16

## காசா மீதான தாக்குதல்கள்; அரபுலகெங்கும் ஆர்ப்பாட்டங்கள்

இராஜதந்திர முயற்சிகள் தோல்வி

## மின்சாரம், எரிபொருள், சுகாதாரம் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனம்

ஜனாதிபதியினால் அதிவிசேட வர்த்தமானி

மின்சாரம், எரிபொருள், சுகாதாரம் உட்பட பல முக்கிய துறைகளின் அத்தியாவசிய சேவைகள் பிரகடனத்தை நீடித்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார். ஒக்டோபர் 17 முதல் அமுலாகும் விதத்தில் இது நீடிக்கப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் பிரிவு 2 இன் பிரகாரம், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. மின்சார விநியோகத்துடன் இணைக்கப்பட்ட சகல சேவைகளும்,

06

## மாணவரிடையே கண் நோய் தீவிரமாக அதிகரிக்கிறது

Dr. தீபால் பெரேரா எச்சரிக்கை



பாடசாலை மாணவர்களிடையே தற்போது பரவிவரும் கண் நோய், வீரியமடைந்து வருவதாக குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார். கண் நோய்க்குள்ளான மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதை

06

## இராமேஸ்வரத்தில் மீனவர்கள் போராட்டம்

இலங்கையில் கைது செய்யப்பட்ட 27 இந்திய மீனவர்கள் மற்றும் அவர்களது விசைப்படகுகளை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இப்போராட்டம் இராமேஸ்வரம் தபால் சந்திக்கு முன்பாக நடைபெற்றுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்களின் உறவினர்களும், மீனவ சங்க அமைப்புகளும் இந்த போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டின்மீன், நெத்தலிக் கருவாடு விலை இன்று முதல் குறைப்பு

லங்கா சதொச நிறுவனம் 05 அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை குறைக்க தீர்மானித்துள்ளது. இதன்படி, இறக்குமதி செய்யப்படும் டின் மீன்களின் (425 கிராம்) விலை 35 ரூபாவினால் குறைப்பு, அதன் புதிய விலை 650 ரூபா.

உள்ளூர் டின் மீன்களின் (425 கிராம்) விலை 05 ரூபாவினால் குறைப்பு, அதன் புதிய விலை 545 ரூபா. ஒரு கிலோ

06

## குற்றச் செயல்கள் குறித்து முறையிட அவசர இலக்கம்

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகளை 118 என்ற குறுகிய தொலைபேசி இலக்கமூடாக முறையிட முடியுமென, பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சினூடாக இந்த அவசர இலக்கம் பேணப்படுவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தகவல் அளிப்பவரின்

06

பாராளுமன்ற உறுப்புரிமை தொடர்பான

## டயனா வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு



இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்வதற்கான உத்தரவை பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு, எதிர்வரும் 31ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி

06

## இந்திய வம்சாவளி தமிழ் மக்களை, 'இலங்கை தமிழர்' என அடையாளம்

அம்மக்களின் அடையாளத்தை அழிக்கும் செயல்



இந்திய வம்சாவளி தமிழ் மக்களை, 'இலங்கை தமிழர்' என அடையாளப்படுத்த முற்படுவது அம்மக்களின் அடையாளத்தை அழிக்கும் செயலாகும். எனவே, பதிவாளர் நாயகம் திணைக்களம் வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பிறப்பு சான்றிதழ் உட்பட பதிவாளர் நாயகம் திணைக்களத்துக்குரிய ஆவணங்களில் "இனத்தைக் குறிப்பிடும் போது இந்திய தமிழ் / சோனகர் என்பதை இலங்கைத் தமிழ்/ சோனகர் எனப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள்"

06

# நகர்வலம்



## ஹம்பாந்தோட்டையில் தொடர் மழையினால்

# சுமார் 15,000 ஏக்கரில் பயிரிடப்பட்ட பயறுச் செய்கை முழுமையாக பாதிப்பு

### நட்டஈட்டை பெற்றுத்தருமாறு விவசாயிகள் அமைச்சரிடம் கோரிக்கை

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டையெங்கும் கடந்த சில மாதகாலமாக பெய்துவரும் கடும் அடைமழையின் காரணமாக கிரிந்தி ஓய திட்டத்தின் கீழ் பிரதேச விவசாய நிலங்களில் மேலதிக பயிர்ச் செய்கையாக பயிரிடப்பட்ட 15,000 ஏக்கர் பயறுச் செய்கை அதிகமழையின் காரணமாக முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதோடு பாதிப்பிற்குள்ளான விவசாயிகளுக்கு நட்டஈட்டினைப் பெற்றுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பயறுச் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்களில் நீர் நிரம்பி வடிந்தோடாமல் தேங்கி இருந்ததன் காரணமாக பயறுச் செடிகள் முற்றாக நீரில் மூழ்கடிக்கப்பட்டு அழிவிற்கு உள்ளாகியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவ் வருடத்தில் ஒக்டோபர் மாதம் வரையில் மழை பெய்யாதென வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித்ததனைத் தொடர்ந்து பெரும் போகம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு மேலதிக பயிர்செய்கையாக விவசாயிகள் பயறுச் செய்கையினை மேற்கொண்டனர்.

இவ்வாறு திஸ்ஸமகாராம கிரிந்திஓய திட்ட பிரதேசங்களில் சுமார் 15,000 ஏக்கர் நிலப்பரப்பில் மேலதிக பயிர்ச் செய்கையாக பயறு பயிரிடப்பட்டு வந்தது. விவசாயிகள் ஒருகிலோ பயறு விதையினை 1600 ரூபாவிற்கு கொள்வனவு செய்திருந்தனர். விவசாயி ஒருவருக்கு ஒரு ஏக்கர் வயல் நிலத்தில் பயரினை பயிரிடுவதற்கு விதைக்கு 12,000 ரூபா உட்பட மொத்தம் ஐம்பதாயிரம் ரூபாவிற்குமேல் செலவாகியுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.



கடந்த காலங்களில் சந்தையில் பயறிற்கு அதிக விலை காணப்பட்டதினால் நீர் குறைந்தளவில் தேவைப்படுவதினாலும் விவசாயிகள் பயறை பயிரிட நடவடிக்கை எடுத்திருந்தனர். இருந்தாலும் முற்றிலும் எதிர்பாராத விதமாக பெய்த அதிகமழையின் காரணமாக பயிர் செய்கை முற்றாக பாதிப்படைந்துள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி பாதிப்பினால் நட்டமடைந்த விவசாயிகளுக்கு நட்டஈட்டை பெற்றுத்தருமாறு விவசாய அமைச்சரிடம் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

# பேருவளை பிரதேசத்திற்கு சேவையாற்றிய சாதனையாளர்கள் கௌரவிப்பு விழா

### எதிர்வரும் 22ஆம் திகதி 'செக்கு' விழா வரவேற்பு மண்டபத்தில்

பேருவளை, அம்பேப்பிட்டிய (gezelles) விளையாட்டுக் கழகம் பாக்கியதுஸ் ஸாலிஹாத் ஜும்ஆ பள்ளிவாசல் உப கமிட்டியுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சாதனையாளர் கௌரவிப்பு விழா எதிர்வரும் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00 மணிக்கு அம்பேப்பிட்டிய வீதியிலுள்ள 'செக்கு' விழா வரவேற்பு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம்.முக்தார் ஹாஜியார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும் முன்னாள் ஈரான் நாட்டுக்கான தூதுவருமான கலாநிதி முஹம்மத் சரீப் அனீஸ் பிரதம அதிதியாகவும் பேருவளை ஜாமியா நளீமிய்யா கலாபீட தலைவர் அல்ஹாஜ் யாகூத் நளீம் கௌரவ அதியாகவும் கலந்து கொள்வர்.

விசேட பேச்சாளராக ஜாமியா நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ் ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி) கலந்து சிறப்பிப்பார்.

பிட்டவளை மிர்அதுஷ் ஷாதுலிய்யா ஸாவியா பிரதம இமாம் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எம்.ஸெய்னுலாப்தீன் (பஹ்ஜி), அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை அதிபர் எம்.ஸி. இப்றாஹீம், நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி அதிபர் பஹீமா பாயிஸ், ஆரம்ப பாடசாலை அதிபர் எம்.வை.எப்.ஜெஸீலா, இக்ரா தொழில்பயிற்சி நிறுவன பணிப்பாளர் வை.ஐ.எம். ரமீஸ், சீனன் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம். ஷிஹாப் ஹாஜியார் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த வைத்தியர்கள், பொறியியலாளர்கள், பல்கலைக்கழக பட்டதாரிகள், பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள், உலமாக்கள், மௌலவியாக்கள், கா.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரம், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்கள், ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், பள்ளிவாசல்களில் கடமை புரியும் உலமாக்கள், முஅத்தின்மார்கள் மற்றும் பல்வேறு துறைகளில் உள்ளோர் 78 பேர் விழாவில் பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



டிஜிட்டல் மீடியா மற்றும் ஊடக நிறுவனம் ஒழுங்கு செய்த "போதைப் பொருள் விழிப்புணர்வை நோக்கிய பயணத்தில் மாணவர்கள்" எனும் கருத்தரங்கு நிகழ்வு அண்மையில் மருதானை அபே குணரத்ன சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் ஹாசிம் உமர் விஷேட அதிதிகளுக்கும் கருத்தரங்குகளில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கும் நினைவு சின்னங்கள் வழங்கி வைப்பதையும் நிறுவனத்தின் இயக்குநர் ஊடகவியலாளர் எம். உமைர் நவ்ஷாத் மற்றும் அங்கத்தினர்களையும் படங்களில் காணலாம்.

# உக்கிய நிலையில் மனித எலும்புக்கூடு மீட்பு!

### வெலிகந்த பொலிஸார் பல கோணங்களில் விசாரணை

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

வெலிகந்த குடாபொக்குண காட்டுப்பகுதியில் உக்கிய நிலையில் மனித எலும்புக்கூடு ஒன்றின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர். கிடைத்த தகவலொன்றுக்கமைய கடந்த 17 ஆம் திகதி குடாபொக்குண காட்டுப்பகுதிக்குச் சென்ற பொலிஸார், உக்கிய மனித எலும்புக்கூட்டினை மீட்டுள்ளதுடன் அதற்கு அருகிலிருந்த பெண் ஒருவருடைய ஆடைகள் மற்றும் தலைக்கவசமொன்று, உணவுப் பெட்டி கைபை ஒன்றையும் கண்டெடுத்துள்ளனர். இவை 2019.11.14 ஆம் திகதி சிங்கபுர வெலிகந்த பகுதியில் காணாமல் போன பெண்ணுடையது என சந்தேகிக்கப்படுவதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர். உக்கிய மனித எலும்புக்கூட்டினை இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பல கோணங்களிலும் வெலிகந்த பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.



சமீபத்தில் கோயம்புத்தூரில் சிவசேனா அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி விழாவில் கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினர் செல்வி காயத்திரி விக்கிரமசிங்க சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தார். அவருக்கு வேலு நாச்சியார் விருது (இந்திய சுதந்திர போராட்ட பெண்மணி) வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சிவசேனா மாநில செயல் தலைவர் திரு.க.சசிகுமார், மாநில தலைமை ஒருங்கிணைப்பாளர் மா.முருகன், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் ஆகியோர் உடன் காணப்படுவதை படத்தில் காணலாம்.

# நீர்கொழும்பில் கடும் மழை; பிரதான வீதிகளில் வெள்ளம்

**( நீர்கொழும்பு தினகரன் நிருபர்)**

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று (18) பி.ப. இரண்டு மணி முதல் நீர்கொழும்பில் கடுமையாக மழை பொழிந்தது.

இதனால் நீர்கொழும்பு சிலாபம் பிரதான வீதியின் கட்டுவ மற்றும் தழுபத்த ஆகிய பிரதேசங்களில் மழை நீர் தேங்கியது.

சிலாபம் மற்றும் குருநாகல் பிரதேசத்துக்கு பயணிக்கும் வாகனங்கள் மிகவும் சிரமத்துடன் குறித்த வீதி வழியே பயணிக்கின்றது. வீதியின் இரு மருங்குகளிலும் மழை நீர் தேங்கியுள்ளதால் துவிச்சக்கர வண்டிகளில் பயணிக்கும் பிரதேசவாசிகள், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் மோட்டார் கார்கள் உட்பட ஏனைய வாகனங்கள் மிகவும்



அவதானத்துடனேயே பிரதான வீதியின் வழியே பயணித்தன.

நேற்று பிற்பகல் முதல் தொடர்ச்சியாக பெய்து வருகின்ற மழை நடு இரவு வரையில் தொடருமாயின் தெபா எல ஓடை பெருக்கெடுத்துச் செல்ல வாய்ப்பு உள்ளது.

இதன் காரணமாக நீர்கொழும்பு, கட்டுவ மற்றும் தழுபத்த பிரதேசங்களிலுள்ள தாழ் நிலப்பரப்புக்கள் நீரில் மூழ்கும் அபாயம் உள்ளதெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கொழும்பு, மத்ரஸதுல் தாருல் உலூமின் 34ஆவது வருட பரிசளிப்பு விழா

**ருஸைக் பாரூக்**

கொழும்பு 10, மாளிகாவத்தையில் அமைந்துள்ள மத்ரஸதுல் தாருல் உலூம் பழைய மாணவர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் 34ஆவது வருட பரிசளிப்பு வைபவம் மத்ரஸா வளாகத்தில் தலைவர் எம். கே. அஹ்மட் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம். பௌஸி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் கொழும்பு முன்னாள் பிரதி மேயர் எம்.டி.எம். இக்பால், கொழும்பு பெரிய பள்ளிவாசல் சகாத் கமிட்டி தலைவர் எம்.எச்.எம். சமீர், சீனத் டிரேடிங் தலைவர் ஏ.எச்.எம். மாஹீர்,



சிரேஷ்ட ஊடகவியலாளர் மொஹமட் ரசூல்தீன், கொழும்பு மத்திய பிரதி பொலிஸ் பொறுப்பதிகாரி மினுர செனரத், மாளிகாவத்தை பொலிஸ் பொறுப்பதிகாரி எம்.பி. ஜயசிங்க விஜேயவர்தன, மாளிகாவத்தை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் செயலாளர் ஏ.எச். எம். இக்பால், உட்பட பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# அநு./ கடவத்ரத்மல முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆங்கிலம், கணித செயற்பாட்டு பிரிவு திறப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

கெப்பித்திகொல்லாவ கல்வி வலயத்திற்குட்பட்ட கடவத்ரத்மல முஸ்லிம் வித்தியாலயத்தில் ரூ. 55 இலட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஆங்கிலம் மற்றும் கணித செயற்பாட்டு பிரிவு வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத்தினால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அந்த செயற்பாட்டு பிரிவை நிர்மாணிப்பதற்கு சாதாரண கல்வி நவீன வேலைத்திட்டத்தின் (கெம்ப்) கீழ் நிதி வழங்கப்பட்டுள்ளது. குறித்த பாடசாலை 1951 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது தரம் 1 – 10 வரை 102 மாணவர்களுடனும் 12 ஆசிரியர்களுடனும் செயற்பட்டு வருகின்றன. அந்த பாடசாலையில் பாரிய குறைபாடாகவிருந்த ஆங்கில மற்றும் கணித செயற்பாட்டு பிரிவு இதன் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அந்த செயற்திட்டத்தின் மூலம் மாகாண பாடசாலைகளின் மேம்பட்ட கல்வித்தரத்தை உயர்த்துவதே இதன் நோக்கமாகும்.



இதன் போது மாகாண பிரதான செயலாளர் சந்திரசிறி பண்டார, மாகாண கல்வி மற்றும் பிரதான அமைச்சின் செயலாளர் லக்ஷ்மி ஹேவாபதிரன, பாடசாலை அதிபர் எச். றபியுதீன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# புத்தளம் – கொழும்பு முகத்திடலில் ஆணின் சடலம் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் கொழும்பு முகத்திடலில் இருந்து ஆண் ஒருவரின் சடலமொன்று நேற்று (18) மீட்கப்பட்டுள்ளது. புத்தளம் கொழும்பு முகத்திடலில் ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்படுவதை அவதானித்த பொதுமக்கள் புத்தளம் தலைமையகப் பொலிஸாருக்குத் தகவலை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொலிஸாரும் மற்றும் தடயவியல் பொலிஸாரும் சடலத்தைப் பார்வையிட்டதோடு பிரேத பரிசோதனைக்காக சடலத்தை புத்தளம் தள வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

# காட்டு யானைகளால் தென்னந்தோட்டங்கள் சேதம்

**ஓமந்தை விஷேட நிருபர்**

முல்லைத்தீவு கொக்குதொடுவாய் வடக்கு, கர்நாட்டுக்கேணி பகுதிகளில் யானைகள் உட்புகுந்து தென்னந் தோட்டங்களைதுவம்சம்செய்துள்ளன. இதனால் பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தோட்ட உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.இது குறித்து பிரதேச மக்களாள் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுக்கு தெரியப்படுத்தினர். சம்பவ இடத்திற்கு நேரில் சென்று அழிவடைந்த நிலங்களை அவர்,பார்வையிட்டதுடன் மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்திருந்தார். கடந்த இரண்டு மூன்று தினங்களாக கிராமங்களுக்குள் புகுந்த யானைகள், அப் பகுதியிலுள்ள தென்னந்தோட்டத்திற்குள் கூட்டமாக புகுந்து தென்னை மரங்களை அழித்து சேதப்படுத்தி உள்ளன. இப்பகுதியில் யானைகளின் அட்டகாசத்தை கட்டுப் படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் மக்கள் கோரியுள்ளனர்.

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்கும் அவசியம் இல்லை

## லசஷ்மன் எம்பிக்கு அமைச்சர் விஜேயதாச பதில்



**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டியத் தேவை அரசாங்கத்துக்கு கிடையாதென, நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். எதிர்க்கட்சி பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல முன்வைத்த குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தேர்தல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தும் தீர்மானத் தையே, அமைச்சரவையில் சமர்ப் பித்துள்ளோம்.

06

# நாட்டின் வலுவான உறவுக்கு Belt & Road பயனளிக்கும்

## சீனாவில் அமைச்சர் பந்துல தெரிவிப்பு

*Belt and Road Initiative* மாநாடு இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் விரைவான பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்குத் தேவையான சர்வதேச ஒத்துழைப்புக்கான உறுதியான அடித்தளமாகும்." இலங்கையுடனான வலுவான உறவு மற்றும் ஒத்துழைப்புக்கு இந்த நடவடிக்கை மிகவும் பயனுள்ளதாக இருக்குமென நம்புவதாக போக்குவரத்து நெடுஞ் சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஒத்துழைப்புக்கான *Belt and Road Initiative* மாநாட்டுடன் இணைந்ததாக சீனாவில் நடைபெற்ற 29 ஆவது உலக சம்மேளன அமைச்சர்கள் மாநாட்டில், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி பேசும் போதே அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர்,

(*Belt and Road Initiative* திட்டத்தின் கீழ், பல நாடுகளில் கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான பல திட்டங்களுக்கு பல தனித்துவமான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

உட்கட்டமைப்பு தேவைப்படும் நாடுகளுக்கு, புதிய ரயில்வே, சாலைகள், துறைமுகங்கள் மற்றும் பிற திட்டங்களில் முதலீடு செய்வதற்கு நாடுகளுக்கிடையேயான தொடர்பை மேம்படுத்துவதில் "ஒன் பெல்ட் ஒன் ரோடு" பாரிய பணியில் ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் போக்குவரத்து, நீர், மின்சாரம், துறைமுகங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பல திட்டங்களை



நிறைவேற்றி, நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு இதுவரை சீனா தனித்துவமான பங்களிப்பை வழங்கியுள்ளது. உதாரணமாக, கொழும்பை விமான நிலையத்துடன் இணைக்கும் கட்டுநாயக்க அதிவேக நெடுஞ் சாலை அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் விவசாய பொருட்கள் உள்ளிட்ட பொருட்களை விரைவாக கொண்டு செல்வதற்கு வசதியாக உள்ளது. உட்கட்டமைப்பு மேம்பாடு தொழில்முனைவோருக்கு விரைவாகவும் எளிதாகவும் சந்தையில் நுழைவதற்கு அதிக ஊக்கத்தை உருவாக்கும் திறனாகும்.

இலங்கை, சீனாவுக்கிடையிலான வலுவான உறவை மேலும் அபிவிருத்தி செய்ய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு அப்பால் செல்ல வேண்டும் என நான் நம்புகிறேன். கல்வி, அறிவியல், தொழினுட்பம், விளையாட்டு மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதன் மூலம் பொருளாதார உறவுகள், மனித உறவுகளை மேம்படுத்துவதை (*Belt and Road Initiative* கருத்தாக்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நோக்கத்துடன், 2015 ஆம் ஆண்டிலிருந்து, ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கு புலமைப்பரிசில்கள், பயிற்சி திட்டங்கள் மற்றும் பயிற்சிகளுக்கு 1,200க்கும் மேற்பட்ட வாய்ப்புகளை சீனா வழங்கி வருகிறது.

இலங்கை தனது மூலோபாய நிலை மற்றும்

06



முதலீட்டு ஊக்குவிப்பு சபைத் தலைவர் டாக்டர் வெங்கட் அண்மையில், இந்தியாவில் உள்ள இலங்கைக்கான துணை தூதுவரை சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பில், தொழினுட்ப நிறுவனங்களை நிர்மாணித்து பொருளாதாரத்துக்கு பங்களிப்புச் செய்வது பற்றி கலந்துரையாடப்பட்டது.
சுமார் நூறு தொழினுட்ப நிறுவனங்களை இலங்கையில் நிர்மாணிப்பது குறித்தும் இதில்,கவனம் செலுத்தப்பட்டது.

# துபாயிலிருந்து வந்தவரிடம் தங்கத்துகள் ஜெல் கொள்ளை

## 02 பொலிஸார் கைதாகி விசாரணை

துபாயிலிருந்து வந்த வர்த்தகர் ஒருவரை கடத்திச் சென்று தங்கத் துகள்கள் அடங்கிய எட்டு ஜெல் பொதிகளை பலவந்தமாக அபகரித்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளை விமான நிலைய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து இவரைக் கடத்திச் சென்றே, இந்த தங்கத்துகள்கள் அபரிக்கப்பட்டன.

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிஸ் சுற்றுலா பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட்கள் இருவரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களுடன் தங்கத் துகள்கள் கலந்த ஜெல் பொதிகளும் கைப்பற்றப்பட்டன.

நாத்தாண்டிய, கொஸ்வத்த கொட்டாரமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த முப்பது வயதுடைய வர்த்தகர் ஒருவர் செய்த முறைப்பாட்டையடுத்து, சந்தேகத்தின் பேரில் இரண்டு பொலிஸ் சார்ஜன்ட்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பலஸ்தீன மக்களின் சோதனைகள் நீங்க நோன்பு நோற்குமாறு கோரிக்கை

கடந்த சில தினங்களாக பலஸ்தீனில் நடைபெற்றுவரும் தாக்குதலின் காரணமாக ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம்கள் உயிரிழந்துள்ளதுடன் அதிகமானவர்கள் காயத்துக்குள்ளாகியிருப்பதையும் நாம் அறிவோம். அல்லாஹுத்தஆலா உயிரிழந்தவர்களுக்கு ஜன்னத்துல் ஃபிர்தௌஸையும் காயமுற்றவர்களுக்கு அவசரமாக சுகத்தையும் கொடுத்தருள்வானாக எனப் பிரார்த்திப்பதாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறான நெருக்கடியான சோதனைகள் ஏற்படும் பொழுது அவை நீங்குவதற்கு அல்லாஹ்வின் அடியார்களாகிய நாம் தொழுகை, நோன்பு, ஸதகா, தௌபா, இஸ்திஃபார் மற்றும் துஆ போன்ற நல்லமல்கள் மூலம் அவன் பக்கம் நெருங்க வேண்டும். வியாழன் மற்றும் திங்கட்கிழமை தினங்களில் நோன்பு நோற்பது சுன்னத்தாகும் எனவும் உலமா சபை தெரிவித்துள்ளது.

அவ்வகையில் பலஸ்தீன், காஸா மற்றும் உலக நாடுகள் அனைத்திலும் அமைதியும் சமாதானமும் நிலவவும் நீதி நிலைநாட்டப்படவும் வியாழக்கிழமை மற்றும் திங்கட்கி




ழமை தினங்களில் நோன்பு நோற்று துஆக்களில் ஈடுபடுமாறு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா இலங்கை வாழ் முஸ்லிம்களை வேண்டிக்கொள்கிறது.

அத்துடன் இதற்காக அனைத்து மஸ்ஜித்களிலும் ஐவேளைத் தொழுகைகளில் குனூத் அந் நாஸிலாவை ஓதி வருமாறு ஏலவே அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வழிகாட்டியிருந்ததும் குறிப்பிடத் தக்கதாகும்.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பதில் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஜே. அப்துல் ஹாலிக் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடக்கு, கிழக்கை முடக்குவதால் தமிழ் மக்களுக்கு கிடைப்பது என்ன?

## முடக்கத்தை எதிர்த்து துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்

அரசியல் கட்சிகளால் நாளை (20) வடக்கு, கிழக்கு மாகாணங்களை முடக்கி ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று யாழ். தென்மராட்சி பகுதிகளில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இந்தத் துண்டு பிரசுரங்கள் தென்மராட்சி மக்கள் உரிமை பாதுகாப்பு அமைப்பினால், விநியோகிக்கப் பட்டு வருகிறது.

நாட்டில் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் வடக்கு கிழக்கை முடக்கி ஹர்த்தால் செய்வதன் மூலம் பாதிக்கப்படுவது யார்...? இந்த ஹர்த்தால் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போகும் தீர்வு என்ன..?

காலம், காலமாக செய்யப்பட்ட ஹர்த்தால் மூலம் தமிழ் மக்கள் அடைந்த இலாபம் என்ன..?

தெற்கை முடக்கினால் வரவேற்கத்தக்கது. ஆனால் வடக்கு கிழக்கை முடக்கி மக்களை பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் செயற்படுவது வரவேற்கத்தக்கதன்று. நாட்டில் தொடரும் வங்குரோத்து நிலையில் வர்த்தகர்கள் வியாபாரம் இல்லாது அல்லாடி வருகின்றனர். இவ்வாறான கடையடைப்பின் மூலம் கிடைக்கப்போகும் நன்மை என்ன? என வியாபாரிகளும் விசனம் தெரிவித்து வருவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

கொரோனா தொற்று பரவல் காரணமாக பல்வேறு இடர்களைக் கடந்து மீண்டு வந்த மக்களுக்கு அடுத்த பேரிடியாக பொருளாதாரா நெருக்கடி ஏற்பட்டது. இதிலிருந்து மீள முடியாமல் மக்கள் திண்டாடி வரும் இச்சந்தர்ப்பத்தில் இவ்வாறான ஹர்த்தால் செய்வது எவ்வகையில் நியாயமானது?

ஒன்று சேர முடியாத தமிழ் கட்சிகள் தமிழர்களின் அபிலாசைகளை எப்போது நிறைவேற்றுவார்கள்?

தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் நாடகமாடும் இவர்களின் செயற்பாடு மக்களுக்கு எதையுமே பெற்றுக் கொடுக்கப் போவதில்லை என்பது திண்ணம்.

06

# ஹரக் கட்டா தப்பிச் செல்ல முயற்சி CID பொலிஸார் பலர் மீது விசாரணை

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் தடுப்பிலுள்ள சர்வதேச போதைப்பொருள் கடத்தல்காரராக கூறப்படும் நந்துன் சிந்தக அல்லது ஹரக் கட்டா தப்பிச் செல்ல உதவியதாக சந்தேகிக்கப்படும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் மேலும் பல பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சந்தேக நபர் தப்பிச் செல்ல உதவிய பொலிஸ் கான்ஸ்டபிள் தொடர்பில் எவ்வித தகவலும் இல்லையெனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் தடுப்புக் காவலிலுள்ள மற்றைய பொலிஸ் உத்தியோகத்தர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, அதனூடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் காணப்பட்ட உரிமையற்ற மோட்டார் சைக்கிள் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு மோட்டார் சைக்கிள் எவ்வாறு வந்தது என்பது தொடர்பிலும் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மின் கட்டண உயர்வு மக்களின் கருத்துக்களை கேட்டறிய நடவடிக்கை

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பான பொது கலந்தாய்வு நேற்றுக் காலை 09 மணி முதல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கை மின்சார சபை உட்பட 30 தரப்பினருடன் கலந்தாலோசித்ததாக, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள தரவுகள், இலங்கையின் நிலைமைக்கு ஒத்துப் போகவில்லையென PUCSL இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இதற்கு பதிலளிக்கும் வகையில் இலங்கை பொதுப் பயன்பாடுக்ள சங்கம் PUCSL க்கு ஆவணம் ஒன்றை கையளித்துள்ளது.

இலங்கை மின்சார சபையின் தலைவர் நளிந்த இளங்கோன் கூறுகையில், மின்சார சபை தற்போது 22% இயக்க இழப்பை சந்திக்கிறது.

# பிராந்திய வைத்தியசாலைகளை கண்காணிக்க நடவடிக்கைகள்

**பாலமுனை விசேட நிருபர்**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள 13 பிரதேச வைத்தியசாலைகளதும் செயற்பாடுகள் CCT கெமராக்களூடாக கண்காணிக்கப் படவுள்ளன. இதற்கிணங்க இந்த வைத்தியசாலைகள் கெமராக்கள் வலையமைப்பினூடாக பிராந்திய பணிமனையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

குறித்த வலையமைப்பினை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (17) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஐ.எம்.முஜீபினால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

# நாட்டுக்கு பொருத்தமற்ற சட்டங்களை எவரும் ஆதரிக்கக் கூடாது

## அலிஸாஹிர் மௌலானா எம்.பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் தற்போதைய நிலையில் மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள சட்டமூலங்கள் சில மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

தற்போது பெரிதாக பேசப்பட்டு வரும் நிகழ்நிலை காப்பு சட்டம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் போன்றவை நாட்டு மக்கள் மீது பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்துவதாக உருவாக்கப் பட்டுள்ளதுடன் அவை அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும் காணப்படுகின்றன.

இலங்கை போன்ற ஜனநாயக நாட்டிற்கு இத்தகைய சட்டங்கள் எவ்வகையிலும் பொருத்தமற்றவை. பல்லின மக்கள் வாழும் நாட்டின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காகவும் நாட்டின் இறைமையை பாதுகாப்பதற்காகவும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதை தடுப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மக்கள் நலன் மற்றும் நாட்டின் நலனையும் சிந்திக்க கடமைப்பட்டுள்ள உயரிய நிறுவனமான பாராளுமன்றம் அத்தகைய சட்டங்களை ஆதரிக்க இடமளிக்கக் கூடாது.

நாட்டிற்கு பொருத்தமில்லாத இரண்டு சட்ட மூலங்கள் தொடர்பில் சிலர் நீதிமன்றங்களில் மனுக்களை தாக்கல் செய்துள்ளதை நாம் வரவேற்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டு. இந்து கல்லூரியில் RMV யின் நடமாடும் சேவை

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ‘நடமாடும் சேவையை’ மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நடத்த ஏற்பாடு செய்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார். இந்த நடமாடும் சேவை (21) சனிக்கிழமை காலை 8:30 மணி முதல் மாலை 4:00 மணி வரை நடைபெறும்.மட்டக்களப்பு மாவட்ட மக்களே இதில், பங்கேற்க முடியும்.

மோட்டார் போக்குவரத்து திணைக்களம், கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் மட்டக் களப்பு மாவட்ட செயலகம் இணைந்து நடத்தும் இந்த "நடமாடும் சேவை" மூலம் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட திணைக்களத்தின் ஊடான சேவைகளை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 02ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 03

## குறள் தரும் சிந்தனை



அணிஅன்றோ நாணுடைமை சான்றோர்க்கு அஃதின்றேல்
பிணிஅன்றோ பீடு நடை

நடந்த தவறு காரணமாகத் தமக்குள் வருந்துகிற நாணம் எனும் உணர்வு, பெரியவர்களுக்கு அணிகலன் ஆக விளங்கும். அந்த அணிகலன் இல்லாமல் என்னதான் பெருமிதமாக நடைபோட்டாலும், அந்த நடையை ஒரு நோய்க்கு ஒப்பானதாகவே கருத முடியும்.

# பொருளாதார நன்மைகளுக்காக ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பு

சீனாவில் நடைபெறும் Belt & Road திட்டத்தின் 3ஆவது சர்வதேச ஒத்துழைப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பீஜிங்குக்கு இராஜதந்திர விஜயம் மேற்கொண்டுள்ளார். ஜனாதிபதிகள், உபஜனாதிபதிகள், பிரதமர்கள் உட்பட உயர்மட்ட தலைவர்கள் என 140 நாடுகளின் பிரதிநிதிகள் 30 சர்வதேச அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் 4000 பேர் பங்குபற்றியுள்ள இம்மாநாட்டில் ஜனாதிபதி இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார்.

இச்சர்வதேச மாநாட்டின் நிமித்தம் பீஜிங்குக்கு நான்கு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி பாகிஸ்தான், இந்தோனேசியா, வியட்நாம் உள்ளிட்ட பல நாடுகளது தலைவர்களையும் சந்தித்துள்ளதோடு இருதரப்பு நட்புறவுகளை மேலும் மேம்படுத்துவது குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

இந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்தை அடிப்படையாகக் கொண்டு, பீஜிங்கில் உள்ள இலங்கைத் தூதரகம் முதலீடு, வர்த்தகம் மற்றும் சுற்றுலா தொடர்பான அமர்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது. இவ்வமர்வில் இலங்கையில் முதலீடு செய்துள்ள மற்றும் முதலீடு செய்யவிருக்கும் சீன முதலீட்டாளர்களும் வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகளும், இலங்கையின் முன்னணி வர்த்தகர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இவ்வமர்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி, போட்டி நிறைந்த பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி கட்டம் கட்டமாக முன்னேறி வரும் இலங்கையை எதிர்கால வர்த்தக வாய்ப்புகளுக்கான தளமாகப் பயன்படுத்திக்கொள்ள முன்வருமாறு சீன முதலீட்டாளர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை சீன முதலீட்டாளர்களும் வர்த்தகர்களும் சாதகமாகப் நோக்கும் நிலைமை உருவாகியுள்ளது. இலங்கையானது வர்த்தக மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளுக்கும் சுற்றுலாத் துறைக்கும் மிகவும் சாதகமான சூழலைக் கொண்டுள்ள நாடாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. இந்து சமுத்திரத்தில் முக்கிய இடத்தில் அமையப்பெற்றுள்ள இந்நாடு நாலாபுறமும் கடலால் சூழப்பட்டுள்ள போதிலும், சர்வதேச கப்பற் போக்குவரத்து பாதைக்கு மிகவும் அருகாமையில் அமைந்திருக்கிறது. அதிலும் இந்நாட்டின் புவிசார் அமைவிடத்தை உரியமுறையில் பயன்படுத்திக் கொள்ளும் போது ஆசிய பிராந்தியத்தில் மேற்கு சந்தையை வெற்றி கொள்ள முடியும். அதற்கான விஷேட வாய்ப்புக் காணப்படுகிறது.

முதலீடுகளை மேற்கொண்டு இவ்வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளும் போது மேற்கு சந்தையை நிச்சயம் வெற்றி கொள்ளலாம். அதன் ஊடாக இலங்கையும் பொருளாதார ரீதியில் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும். குறிப்பாக பொருளாதார ரீதியில் இந்நாட்டைக் கட்டியெழுப்புவதற்கும் இம்முதலீடுகள் பக்கத்துணையாக அமையும்.

கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான இந்நாடு பலவிதமான அசௌகரியங்களையும் பாதிப்புக்களையும் தாக்கங்களையும் எதிர்கொண்டிருந்தது. பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் வீழ்ச்சியடைந்திருந்த இந்நாடு கட்டம் கட்டமாக மீட்சி பெற்று தற்போது மறுமலர்ச்சி பாதையில் பிரவேசித்திருக்கிறது. இதன் ஊடாக இந்நாட்டின் பொருளாதாரம் சாதமான முறையில் முன்னேற்றப் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறான சூழலில்தான் சீனாவிலுள்ள இலங்கைத் தூதரகம் முதலீட்டார்கள், வர்த்தகர்களுக்கான அமர்வை ஏற்பாடு செய்திருந்தது. அந்த அமர்வில் பங்குபற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றிய போது விடுத்துள்ள அழைப்பு நாட்டுக்கு பொருளாதார ரீதியில் நிச்சயம் நன்மைகளைக் கொண்டு வரவே செய்யும். அது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கும் பக்கத்துணையாக அமையும் என்பதுதான் பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

துறைமுகநகர் உட்பட பல துறைகளில் சீன முதலீட்டாளர்கள் ஏற்கனவே இந்நாட்டில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளனர். அதன் ஊடாக இலங்கை தொழில்வாய்ப்புக்களையும் அந்நியச் செலாவணியையும் பெற்றுக் கொண்டுள்ளது. இந்நிலையில் ஜனாதிபதியின் இந்த அழைப்பு இலங்கையை நோக்கி முதலீடுகள் மேலும் வந்து சேர வழிவகுக்கும்.

இன்றைய காலகட்டத்தில் எந்தவொரு நாட்டையும் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புவதற்கு வெளிநாட்டு முதலீடுகள் இன்றியமையாதவையாக விளங்குகின்றன.

ஆகவே ஜனாதிபதி விடுத்துள்ள இந்த அழைப்பு இலங்கையின் பொருளாதார மேம்பாட்டில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என்றால் அது மிகையாகாது.

editor.tkn@lakehouse.lk

# அறுபது வருட காலமாக இலக்கியப்பணி புரிந்த இலங்கைக் கலைஞர் நவாலியூர் நாயகி

## எதிர்வரும் ஞாயிறன்று முதலாவது நினைவுதினம்



'நவாலியூர் நாயகி' என்ற புனைபெயருடன் கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் கவிதைகளையும் ஏனைய ஆக்கங்களையும் எழுதி வந்த ஈழத்தின் புகழ்பூத்த கவிஞரும், பாடகியும், ஓய்வுநிலை ஆசிரியரும், அதிபருமாகிய திருமதி மேரி நாயகி மரியதாஸ் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் எதிர்வரும் 22.10.2022 அன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

நவாலியூர் நாயகி 22.08.1940 அன்று நவாலியில் பாரம்பரிய கலைக்குடும்பத்தில் பிறந்தார். இனிமையான குரல் வளம் கொண்ட இவர், சிறுவயதில் இருந்தே பாடல்களைப் பாட வல்லவராகவும், எழுத்தாற்றல் மிக்கவராகவும் விளங்கினார். 500 இற்கு மேற்பட்ட கவிதை, கட்டுரைகளை அவர் எழுதி உள்ளார்.

உலகெங்கிலும் கத்தோலிக்க தேவாலயங்களில் பயன்படுத்தவல்ல பல பாடல்களையும் அவர் இயற்றியுள்ளார். குறிப்பாக 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வின் பின்னர் அவர் எழுதிய 'கண்ணீர் சிந்துகிறோம் கொஞ்சம் கருணை காட்டுமையா' என்ற மன்னிப்பு பஜனை உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் திருப்பலி வேளைகளில் பாடப்படுகின்றது.

தனது கற்பித்தல் திறனால் சிறந்த ஆசிரியராகப் பாடசாலைகளில் கடமை ஆற்றி உள்ளார். நாடகம், கவியரங்கம், பட்டி மன்றம், குழுப்பாடல், தனிநடிப்பு என்று பலவற்றை எழுதி மாணவர்களைப் பயிற்றுவித்து ஊக்கப்படுத்தி வந்துள்ளார். பல போட்டிகளில் மாணவர்கள் தேசிய நிலையில் முதலிடம் பெற அவரின் ஆக்கங்கள் உதவியுள்ளன.

நவாலி சென் பீற்றர் பாடசாலை, மானிப்பாய் சென். ஆன்ஸ் பாடசாலை ஆகியவற்றின் பாடசாலை கீதங்களும் இவராலேயே எழுதப்பட்டன. லண்டனில் உள்ள அகில உலக தமிழ் விளையாட்டுப் பாடசாலையின் கீதம் இவராலேயே எழுதப்பட்டது. இலங்கை வானொலியிலும் பல பாடல்களையும் நாடகங்களையும் எழுதி உள்ளார்.

வெறுமனே எழுதுவது மட்டுமமல்ல சமகால வாழ்நிலைகளில் ஏழை எளியவர்களின் துன்பங்கள், துயரங்களில் தனது உணர்வலைகளை வெளிப்படுத்தும் படைப்பாளி ஆகவும் இருந்துள்ளார். அவரது கவிதைகளில் பெரும்பாலானவற்றில் தீமைகளைச் சாடுகின்ற அறச்சீற்றம் ஓங்கி ஒலிப்பதைக் காணலாம்.

புரட்சிக்கவிஞர் பாரதி கூறிய 'நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும்' கொண்ட ஈழத்தின் பெண் கவிஞராய், படைப்பாளியாய், பாடகியாய், பல்வேறு பணிகளை ஆற்றினாலும் தன்னடக்கத்துடன் எல்லாப்புகழும் இறைவனுக்கே என்று ஆர்ப்பாட்டமில்லாமல் வாழ்ந்து மடிந்த அன்னை தனது படைப்புக்கள் வழியாக இன்றும் எம்முடன் வாழ்கின்றாள்.

**எட்வேட் மாஸ்டர்...**

# தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட வேண்டுமென்பதே வடக்கு முஸ்லிம்களின் கனவு



## வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 33 வருடங்கள் பூர்த்தி

1990ஆம் ஆண்டு வடக்கிலிருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் 33 வருடங்கள் கடந்தும் மீள்குடியேற்றத்திற்காக ஏக்கத்தில் வாழ்ந்து வருகின்றனர். வடமாகாண முஸ்லிம்களுக்கு வாழ்நாளில் மறக்க முடியாத கரிநாளாக 1990ஆம் ஆண்டு ஒக்டோபர் மாத இறுதிப் பகுதி அமைந்திருந்தது.

தமது சொத்துக்கள், வீடுகள், தொழில் துறைகள், காணி, பூமிகள் என அனைத்தையும் கைவிட்டு வடக்கு முஸ்லிம்கள் வெளியேற வேண்டியிருந்தது. முஸ்லிம் சமூகம் வேதனையடைந்தது.

இந்த செயற்பாடு வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களை கண்ணீரில் ஆழ்த்தியது. புலிகளால் வடமாகாண முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை முஸ்லிம்களால் என்றும் மறக்க முடியாத ஒரு துன்பகரமான நிகழ்வாகும்.

இவ்வருடம் (2023) ஒக்டோபர் மாதத்துடன் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 33 வருடங்களைத் தாண்டியுள்ளது. இம்மக்களின் அவலநிலை இன்னும் தொடர்கின்றது. யுத்தம் முடிவுற்று 14 ஆண்டுகள் நிறைவடைந்தும் வடமாகாண முஸ்லிம்கள் விடயத்தில் உரிய கவனம் செலுத்தப்படவில்லை என்றே கூற வேண்டியுள்ளது. தம்மை தமது சொந்த மண்ணில் மீள்குடியேற்ற மாட்டார்களா? என்ற கனவுகளுடனேயே வடமாகாண முஸ்லிம்கள் உள்ளனர்.

மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து 1990 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட போது பல ஆயிரமாக காணப்பட்டவர்கள் இன்று பல குடும்பங்களாக பெருகியுள்ளனர்.

வடமாகாண முஸ்லிம்களுக்கு சொந்த இடத்தில் வாழ்வதற்குப் பொருத்தமான வசதிகள் செய்து கொடுக்கப்படாத நிலையில் அவர்கள் கவலையுடனேயே வாழ்ந்து வருகின்றனர். அரசியல் தலைமைகளால் அவர்கள் கண்டுகொள்ளப்படவில்லை.

2009 இன் யுத்த வெற்றி முஸ்லிம் மக்களுக்கு பூரண மீள்குடியேற்றத்தை தரும் என்ற கனவு முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை கைகூடவில்லை. யுத்தவெற்றி இடம்பெற்று 14 வருடங்கள் கடந்தும் மீள்குடியேற்றம் எட்டாக்கனியாகவே இருக்கிறது. இந்த விடயத்தில் சர்வதேசமும் உரிய கவனம் செலுத்தவில்லை.

வடக்கு, கிழக்கு யுத்தத்தால் முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில் தமது வாழ்வியலை முன்னெடுக்க வேண்டிய நிலையிலேயே இருந்து வருகின்றனர். தேர்தல் காலங்களில் மட்டும் அரசும், அரசியல்வாதிகளும் தமது வாக்குவேட்டைக்காக அந்த மக்களிடம் வருவதுண்டு. எனினும் அவர்கள் வழங்குகின்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில்லை.

பாதிக்கப்பட்ட மக்கள் இன்று கல்வி, சுகாதாரம், தொழில் உள்ளிட்ட பல தேவைப்பாடுகளுடன் உள்ளனர். இந்த மக்கள் பூரணமான மீள்குடியேற்றத்தையே விரும்புகின்றனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் வடமாகாண முஸ்லிம்கள் அவல வாழ்விற்கு உட்பட்ட ஒரு சமூகமாக வாழ வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளனர். அவர்களது துயர்துடைக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் உள்ளது.

**சத்தார் எம்.ஜாவித்...**

# பேத்தாழை பொதுநூலகம், விபுலானந்தர் வாசகர் வட்டம் ஏற்பாட்டில் அமரர் ஆ.மு.சி.வேலழகன் நினைவஞ்சலி




கடந்த 23.09.2023 அன்று இயற்கை எய்திய இலங்கையின் புகழ்பூத்த மூத்த எழுத்தாளர் அமரர்.ஆ.மு.சி.வேலழகன் அவர்களை கௌரவப்படுத்தும் முகமாக அன்னாருக்கான அஞ்சலி மற்றும் நினைவுப் பகிர்வு நிகழ்வு பேத்தாழை பொது நூலகம் மற்றும் விபுலானந்தர் வாசகர் வட்டம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிழக்குப் பல்கலைகழகத்தின் முன்னைநாள் பேராசிரியர் சி.மௌனகுரு, மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் வி.ரஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு தமிழ்ச் சங்க உறுப்பினர் திருமதி சுந்தரமதி வேதநாயகம் ஆகியோர் கலந்து கொண்டு நினைவுரையாற்றினர்.

விபுலானந்தர் வாசகர் வட்ட உறுப்பினரும் கவிஞருமான தமிழ்க்கீரன் த.கி.ஷர்மிதனின் கவிதாஞ்சலியுடன் ஆரம்பமான இந்நிகழ்வில், அமரர் வேலழகன் வாழ்க்கை அறிமுகத்தினை வாசகர் வட்ட ஆலோசகரும் ஆசிரியரும் எழுத்தாளருமான திருமதி ஸோபா ஜெயரஞ்சித் நிகழ்த்தியிருந்தார்.

அதனைத் தொடரந்து வேலழகன் அவர்களின் நினைவுகள் நினைவுரைஞர்களால் பகிரப்பட்டன. அன்னாரின் பன்முக ஆளுமை, தமிழ்ப் பற்று, பண்பொழுக்கம், சேவை முதலானவை பற்றிய அனுபவங்கள் பகிரப்பட்டன.

அன்னாரது ஆக்கங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும். அதுதான் நாம் அவருக்குச் செய்யும் உபகாரம் என்று அங்கு உரையாற்றிய பலரும் எடுத்துக் கூறியிருந்தனர்.

**த. சர்மிதன்...**
விபுலானந்தர் வாசகர் வட்ட உறுப்பினர்

# அட்டாளைச்சேனை அக்-அந்நூர் ம.வியில் பணிநயப்பு விழா, ஆசிரியர் தின நிகழ்வு

பணிநயப்பு விழாவும், ஆசிரியர்தின நிகழ்வும் அட்டாளைச்சேனை அக் அந்நூர் மகா வித்தியாலயத்தில் சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றன. பாடசாலை அதிபர் ஏ.எம்.அஸ்மி த லைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆசிரியர்களினால் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகள் நடந்தேறின.

அதனைத் தொடர்ந்து ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெறும் பிரதி அதிபர் எஸ்.எம்.ஹனீபாவை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. குறித்த பணிநயப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேஹ் ஏ.எம். றஹ்மத்துல்லா, சிறப்பு அதிதியாக உதவிக் கல்விப்பணிப்பாளர் ஏஎம்.நௌபர்டீன் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை விசேட அம்சமாகும்.

அக் / அந்நூர் மகாவித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்களினால் பிரதி அதிபர் எஸ்.எம்.ஹனிபாவுக்கான மிகப்பெரிய கௌரவம் வழங்கி வைக்கப்பட்டது. ஆசிரியச் சமூகத்தினால் பொற்கிளி வழங்கப்பட்டது. அத்துடன் பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு, பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றினால் அவர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதுடன், பரிசுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் எஸ். றஹீம் (பொதுச்சுகாதார பரிசோதகர்) மற்றும் அதிபரும், உறுப்பினருமான எம்.ஐ.எம்.றியாஸ், எஸ்.எம்.இத்ரீஸ், எம்.பி.கியாஸ், றிம்சான் புகாரி ஆகியோருடன் பழைய மாணவர் சங்க செயலாளர் றிசாத் ஏ காதர் உட்பட பலரும் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்திருந்தனர்.

**ஒலுவில் மத்திய விசேட நிருபர்...**







# முன்னணி ஹெரிடேஜ் ஹோட்டலுக்கான SATA விருதை வென்றது ஃபாக்ஸ் யாழ்ப்பாணம்

இந்தியாவின் பெங்களூரில் அண்மையில் நடைபெற்ற 7ஆவது வருடாந்த தெற்காசிய பயண விருதுகள் (SATA) விழாவில், யாழ்ப்பாணத்தின் மையப்பகுதியில் அமைந்துள்ள ஒரு அற்புதமான பாரம்பரிய ஹோட்டலான ஃபாக்ஸ் யாழ்ப்பாணம், தெற்காசியாவின் முன்னணி ஹெரிடேஜ் ஹோட்டல்/ரிசோர்ட்டுக்கான மதிப்புமிக்க விருதைப் பெற்றது.

1908 ஆம் ஆண்டு முதலில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு புகழ்பெற்ற குடும்பத்தினரால் கட்டப்பட்ட ஃபாக்ஸ் யாழ்ப்பாணம், அதன் கடந்த காலத்தை நவீன ஆடம்பரத்தின் நேர்த்தியுடன் தடையின்றி ஒருங்கிணைத்துள்ளது, மேலும் பிராந்தியத்தின் வளமான கலாசாரம் மற்றும் பாரம்பரியத்துக்கான ஒரு வாழும் சான்றாக மாறியுள்ளது. கெபிட்டல் மஹாராஜா குழுமத்தினால் நடத்தப்படும் இந்த



ரிசோர்ட், யாழ்ப்பாணத்தின் வரலாற்றை உள்ளடக்கி, அதன் பெருமைமிகு நாட்களின் சாட்சியாக விளங்குகின்றது, இலங்கையின் புகழ்பெற்ற '43 குழுவின் மறுஉருவாக்கம் செய்யப்பட்ட தலைசிறந்த படைப்புகளை காட்சிப்படுத்தும் ஆடம்பர பூட்டிக் ரிசோர்ட், மற்றும் கலைக் கண்காட்சிக் கூடமாகவும் அது மாற்றப்பட்டுள்ளது.

"இந்த மதிப்பிற்குரிய SATA 2023 அங்கீகாரம், ஃபாக்ஸ் ரிசோர்ட்ஸில் உள்ள அனைவரும் பகிர்ந்து கொள்ளும் மிகச் சிறந்த அர்ப்பணிப்புக்குச் சான்றாகும், இது எங்கள் ஹோட்டலை எங்கள் விருந்தினர்களுக்கு இது மறக்க முடியாத அனுபவத்தைத் தருகின்றது. உபகண்டத்தில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் பெறப்பட்டுள்ள இந்த அங்கீகாரம் எமது உண்மையான விருந்தோம்பல் மற்றும் எமது பாரம்பரிய ஹோட்டலின் தனித்துவமான குணாதிசயங்களை உறுதிப்படுத்துவதாகும், மேலும் இது எமது நிறுவனத்திற்கு பெருமிதத்தைத் தருகின்றது" என Capital Maharaja குழுமத்தின் GD/COO திருமதி நேத்ரா வீரசிங்க தெரிவித்தார்.

## தினகரன் வர்த்தக உலா

அரலகன்வில வெலயாய

## தேசிய பாடசாலையில் நடைபெற்ற டிக்கிரி சந்தை



நாட்டின் விருப்பத்திற்குரிய சிறுவர் சேமிப்பு வர்த்தக நாமமான செலான் டிக்கிரி, அண்மையில் அரலகன்வில வெலயாய தேசிய பாடசாலையுடன் இணைந்து இளம் சிறுவர்களுக்கு நிதிசார் கல்வியறிவு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டது. பாடசாலை வளாகம், பாரம்பரிய இலங்கைச் சந்தையின் எண்ணக்கருவில் உதித்த செலான் டிக்கிரி சந்தையால் களை கட்டியது.

செலான் டிக்கிரி சந்தை, மாணவர்களுக்கு நிதி, சேமிப்பு, வாடிக்கையாளர்கள், பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பான நடைமுறை அனுபவத்தை பெற்றுக் கொள்ளவும் அதனுடன் இணைந்த சிக்கல்களை புரிந்துகொள்வதற்குமான தளத்தை வழங்கியது. இந்த முயற்சி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடமிருந்து பாராட்டைப் பெற்றுக் கொண்டதுடன் அவர்கள் அனைவரும் இளைய தலைமுறையினருக்கு மதிப்புமிக்க நிதி அறிவை வழங்க ஆர்வமாக இருந்தனர்.

டிஜிட்டல் கவனச்சிதறல்கள் மற்றும் கல்வித் தேர்ச்சிகளில் ஆதிக்கம் செலுத்தும் உலகில், செலான் டிக்கிரி சந்தை, அனைத்து மாணவர்களதும் வரவேற்பை பெற்றது. இந் நிகழ்வு பிள்ளைகளுக்கு நடைமுறை நிதிக் கல்வியை வழங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி சிறு வயதிலிருந்தே நிதி முகாமைத்துவம் மற்றும் சேமிப்பின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு எடுத்துக் காட்டியது.

## மக்கள் வங்கி, கொழும்பு வெளிப்புறம் II பிராந்திய தலைமை அலுவலகம் திறந்துவைப்பு



மக்கள் வங்கியின் 25 ஆவது பிராந்திய தலைமை அலுவலகம், மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பொது முகாமையாளருமான கிளைவ் பொன்சேகாவினால் அண்மையில் பிலியந்தலையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட மட்டத்திலான கவனிப்பை வழங்குவதற்காகவும், செயல்பாடுகளை ஒருமுகப்படுத்துவதற்காகவும் கொழும்பு வெளிப்புறம் II பிராந்தியம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்டுள்ள கொழும்பு வெளிப்புறம் II பிராந்தியம் ஆனது 14 கிளைகள் மற்றும் 20 சேவை மையங்களை உள்ளடக்கியுள்ளது. மக்கள் வங்கியின் நிர்வாகப் பணிகளை எளிதாக்கும் வகையில் 1973 ஆம் ஆண்டில் பிராந்திய தலைமை அலுவலகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், தற்சமயம் நாடு முழுவதும் 25 பிராந்திய தலைமை அலுவலகங்கள் உள்ளன. நளின் பெரேரா, உதவிப் பொது முகாமையாளர் (வழங்கல் முகாமைத்துவம்), எஸ்.எல்.எம்.ஏ.எஸ். சமரதுங்க, பிராந்திய முகாமையாளர் (கொழும்பு வெளிப்புறம் II), புத்திக ரணதுங்க, பிராந்திய முகாமையாளர் (கொழும்பு தெற்கு), நாளிகா லியனகே, பிராந்திய முகாமையாளர் (கொழும்பு வெளிப்புறம் I) ஆகியோர் அடங்கலாக, பல்வேறு சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

## வாடிக்கையாளர்களின் நலனுக்காக கொமர்ஷல் வங்கியுடன் கைகோர்க்கிறது யூனியன் அஷ்யூரன்ஸ்

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவை வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், கொமர்ஷல் வங்கியுடன் கைகோர்த்து வங்கியின் பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் யூனியன் அஷ்யூரன்ஸ் ஆயுள் காப்புறுதித் திட்டங்களுக்காக சௌகரியமான இலகு தவணை முறை கொடுப்பனவு திட்டமொன்றை வழங்க முன்வந்துள்ளது. இந்த கைகோர்ப்பினூடாக, கொமர்ஷல் வங்கி அட்டைதாரர்களுக்கு தற்போது தமது யூனியன் அஷ்யூரன்ஸ் ஆயுள் காப்புறுதி திட்டங்களுக்காக 12 மாதங்கள் வரை 0% வட்டியில்லாத தவணைமுறை கொடுப்பனவு வசதியை அனுபவிக்க முடியும்.

இந்த சவால்கள் நிறைந்த காலப்பகுதியில் வாடிக்கையாளர்களுக்கு நிவாரணங்கள் அவசியமாக காணப்படும் சூழலில், இந்த சலுகையை வழங்க யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் கொமர்ஷல் வங்கி ஆகியன முன்வந்துள்ளன.

தமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களின் நலன் மற்றும் நிதி உறுதித்தன்மையை பேணுவதில் இரு நிறுவனங்களும் காண்பிக்கும் அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக இந்தப் பங்காண்மை அமைந்துள்ளது.

ஆயுள் காப்புறுதி கொடுப்பனவுகளை இலகு தவணைமுறை கொடுப்பனவு திட்டங்களாக




மாற்றிக் கொள்வதற்கு காப்புறுதிதாரர்களுக்கு யூனியன் அஷ்யூரன்ஸ் Clicklife App ஐ பயன்படுத்தி கொடுப்பனவு முறையை மாற்றிக் கொள்ளலாம். அல்லது கொமர்ஷல் வங்கி ஹொட்லைன் இலக்கமான 0112 353 353 உடன் கொடுக்கல் வாங்கல் நடைபெற்று ஏழு வேலை நாட்களுக்குள் தொடர்பு கொண்டு மாற்றிக் கொள்ள முடியும்.

## ஊழியர்கள் மத்தியில் hackathon நடத்திய கொமர்ஷல் வங்கி



கொமர்ஷல் வங்கியின் மத்திய கணக்குப் பிரிவை (Central Accounts) பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு குழுவினர் டயலொக் என்ரபிறைஸ் நிறுவனத்துடன் இணைந்து வங்கி நடத்திய முதலாவது hackathon போட்டியில் வெற்றியீட்டி உள்ளனர்.

பிரச்சினைகளுக்கான தீர்வு புத்தி கூர்மையை தனது ஊழியர்கள் மத்தியில் மேம்படுத்தும் வகையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. Tableau Dashboard on 'Impairment Analysis' ஐ மத்திய கணக்குப் பிரிவு ஊழியர்கள் சமர்ப்பித்திருந்தனர். திட்டமிடல் திணைக்களம் (Planning Department) மற்றும் மத்திய பொறிமுறை ஆதரவு திணைக்களம்; (Central System Support Department) முற்பணம் மற்றும் வைப்பு மதிப்பீடு திட்டத்துக்காக இரண்டாம் இடத்தையும், 'Crosssell Ratio Analysis' திட்டத்துக்காக மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. கொமர்ஷல் வங்கியின் கூட்டாண்மை பிரிவு பிரதிநிதிகளும், சிரேஷ்ட முகாமைத்துவ பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்தப் போட்டியில் பங்கேற்ற பத்து குழுக்களும் கூட்டாண்மை முகாமைத்துவ உறுப்பினர் ஒருவரிடம் இருந்து வழிகாட்டல்களைப் பெற்றுக் கொண்டன. பெறுமதி மிக்க உள்ளீடுகளை அவர்கள் வழங்கியதோடு தமது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். ஆக்கபூர்வமான பின்னூட்டல்களும் வழங்கப்பட்டன.

வெற்றிபெற்ற குழுக்கள் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க மற்றும் பிரதான செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர் ஆகியோரிடம் இருந்து பணப் பரிசில்களைப் பெற்றுக் கொண்டனர்.

## சிறுவர் சேமிப்புகளுக்கான வெகுமதிகள் அனுபவத்தை மேம்படுத்த முன்வந்துள்ள அமானா வங்கி மற்றும் Daraz



அமானா வங்கி, இலங்கையின் முன்னணி இலத்திரனியல் வணிக சந்தைப்பகுதியான Daraz உடன் கைகோர்த்து, வங்கியின் சிறுவர் சேமிப்பு கணக்குதாரர்களுக்கு புத்தாக்கமான அன்பளிப்பு அனுபவத்தை வழங்க முன்வந்துள்ளது. இளம் சேமிப்பாளர்களுக்கு வெகுமதிகளை வழங்குவதற்காக இலத்திரனியல் வணிக கட்டமைப்பை பயன்படுத்தப்படுவதால் இந்த பங்காண்மை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. சிறுவர் சேமிப்புகளில் புதிய பரிணாமத்தை ஏற்படுத்துவதாகவும் இந்த பங்காண்மை அமைந்துள்ளது.

இந்தப் பங்காண்மையினூடாக, தகைமை வாய்ந்த சிறுவர் சேமிப்பு கணக்குதாரர்களுக்கு ஒன்லைன் அன்பளிப்பு வவுச்சர்கள் பரிசாக வழங்கப்படும். இவற்றை Daraz அப்ளிகேஷனில் அல்லது இணையத்தளத்தில் பயன்படுத்தி கொள்வனவுகளை மேற்கொள்ள முடியும். இந்த புதிய வெகுமதித் திட்டத்தினூடாக, சுமார் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பொருட் தெரிவுகளைக் கொண்ட கட்டமைப்பிலிருந்து சிறுவர்களுக்கு தமக்கு பிடித்த தெரிவுகளை மேற்கொள்ளும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டம், சில பொருட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட பாரம்பரிய அன்பளிப்பு முறைகளுக்கு அப்பால் சென்று, பிரத்தியேகமான அனுபவத்தை அவர்களுக்கு வழங்குகின்றது. வாடிக்கையாளர்களுக்கு தமது வீட்டில் சௌகரியமாக இருந்தவாறே, தமக்கு தேவையான பொருட்களை தெரிவு செய்து பெற்றுக் கொள்ளும் வசதி வழங்கப்படுவதுடன், வெகுமதிகளைப் பெற்றுக் கொள்ள வங்கிக் கிளைக்கு விஜயம் செய்ய வேண்டிய தேவையையும் இல்லாமல் செய்துள்ளது.

தகைமை வாய்ந்த சிறுவர் சேமிப்பு கணக்குதாரர்களுக்கு Daraz ஒன்லைன் அன்பளிப்பு வவுச்சர்களை ரூ. 1000 முதல் ரூ. 80000 வரை அமானா வங்கி வழங்கும். வாடிக்கையாளர்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில் நியமிக்கப்பட்ட சேமிப்பு தொகையை எய்தும் போது இந்த வெகுமதிகள் தீர்மானிக்கப்படும். தகைமை தொடர்பில் வாடிக்கையாளர்களுக்கு SMS வாயிலாக அறிவிக்கப்படும்.

## 5 முக்கிய வரலாற்று வழிபாட்டுத் தலங்களை ஒளிரச் செய்த சுதேசி கொஹொம்ப



முன்னணி மூலிகை, தனிநபர் பராமரிப்பு பொருட்கள் உற்பத்தியாளரான Swadeshi Industrial Works PLC, வருடாந்த எசல திருவிழாவின் போது, 'சுதேசி கொஹொம்ப ஆலோக பூஜா சத்காரய' எனும் தொனிப்பொருளின் கீழ், அலுத்நுவர ஸ்ரீ தெடிமுண்ட மகா தேவாலயம், தெவுந்தர உத்பரவர்ண ஸ்ரீ விஷ்ணு மஹா தேவாலயம், சப்ரகமுவ மஹா சமன் தேவாலயம், தெரணியகல சமன் தேவாலயம், தம்பதெனிய ரஜா மகா விகாரை ஆகிய ஐந்து முக்கியமான இடங்களை, மீண்டுமொருமுறை ஒளியூட்டி செய்து, 'ஆலோக பூஜையை' மேற்கொண்டது.

முழுமையாக இலங்கைக்கு சொந்தமான நிறுவனம் என்ற வகையில், இந்த வருடாந்த ஒளியூட்டும் பூஜை (ஆலோக பூஜா) போன்ற செயற்பாடுகளுக்கு ஆதரவளித்து இலங்கையின் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாப்பதை கடமையாக கருதுவதாக, சுதேசியின் தலைவி திருமதி அமாரி விஜேவர்தன தெரிவித்தார்.

## முன்னணி ஹெரிடேஜ் ஹோட்டலுக்கான SATA விருதை வென்றது ஃபாக்ஸ் யாழ்ப்பாணம்

2023 ஆம் ஆண்டு தேசிய அச்சுத் துறைசார்ந்த விருதுகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சியை மற்றும் வர்த்தக கண்காட்சி 2023 எதிர்வரும் அக்டோபர் 26 முதல் 28 ஆம் திகதி வரை பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தினமும் காலை 09.00 மணி முதல் மாலை 07.00 வரை அதிநவீன தொழில்நுட்பத்துடன் பிரமாண்டமான நிகழ்வாக இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு கல்வியமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த, கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார் .

இதேவேளை தேசிய அச்சுத்துறை விருதுகள் 2023 இம் மாதம் 27ஆம் திகதி மாலை கொழும்பு 3 இல் அமைந்துள்ள மரினா பீச் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பிரதமர் தினேஸ் குணவர்த்தன கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைப்பார் என இலங்கை அச்சக சங்கத்தின் பொதுச் செயலாளரும் எக்ஸ்பிரஸ் நியுஸ் பேப்பர் பணிப்பாளருமான எம்.செந்தில்நாதன் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வுகள் பற்றி விசேட ஊடகவியலாளர்கள் மாநாடு கொழும்பில் நடைபெற்றபோதே செயலாளர் மேற்கண்ட தகவல்களைத் தெரிவித்தார். இந் நிகழ்வில் இச் சங்கத்தின் தலைவர் அனில் காரியவாசம், மற்றும் உறுப்பினர்களான நிசாந்த பெரேரா, தேசாந்த சில்வா, சயனக விக்கிரமசிங்க மற்றும் வசந்த பண்டார அவர்களுடன் இலங்கை அச்சக சங்க நிகழ்வின் முகாமையாளர் லொனார்ட் எட்வட் ஆகியோர்களும் ஊடக மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இந்த கண்காட்சியில் 44 உள்ளூர் தொழில் வல்லுனர்கள் மற்றும் 06 சர்வதேச வல்லுனர்களும் பங்கேற்கின்றனர்.

## புதிய வடிவமைப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட 'தீவா' கலவை அறிமுகம்




இலங்கையில் சலவை மற்றும் தனிநபர் பராமரிப்புத் துறையை மீள்வரையறை செய்யும் வகையில், புத்துணர்ச்சி மற்றும் புத்துயிர் பெற்ற தீவா ஃப்ரெஷ், தீவா பவர், தீவா சோப் ஆகிய தயாரிப்புகளை மீள் அறிமுகப்படுத்துவதில் தீவா பெருமிதம் கொள்கிறது. அதன் செயற்பாட்டு பண்புகள் மற்றும் மதிப்பை மேம்படுத்தும் வகையில் கவனம் செலுத்தி, ஒரு புதுப்பிக்கப்பட்ட வர்த்தகநாம மாற்றத்துடன் தீவா தற்போது வெளிவருகிறது. இதன் மூலம் வளர்ந்து வரும் சந்தையில், அதிகரித்து வரும் நுகர்வோர் தேவைகளைப் புரிந்துகொண்டு அவற்றை நிவர்த்தி செய்கிறது.

இந்த மாற்றமானது, தீவாவின் வர்த்தகநாம அர்ப்பணிப்பு மற்றும் அதன் நோக்கத்துடன் இணைந்தவாறான நவீன மற்றும் எழுச்சியூட்டும் தோற்றத்தை காண்பிக்கிறது. இவை தீவாவின் முக்கிய தயாரிப்புகளான தீவா ஃப்ரெஷ், தீவா பவர், தீவா சோப் ஆகியவற்றிற்கு வர்த்தகநாம மதிப்பை சேர்க்கின்றன. Hemas Consumer Brands இனது சலவைப் பராமரிப்பு பிரிவின் தலைவி, திருமதி அனுஷ்கா சபாநாயகம், இந்த புதிய தோற்றம் மற்றும் நுகர்வோர் எதை எதிர்பார்க்கலாம் என்பது பற்றி தெரிவிக்கையில், "விசேடத்துவம் மற்றும் புத்தாக்கங்கள் ஆகியவற்றின் மூலம் தீவாவின் பயணம் தொடர்கிறது. எமது புதுப்பிக்கப்பட்ட தயாரிப்புகள் இலங்கையில் சலவை பராமரிப்புப் பிரிவில் தெளிவான வேறுபாடாக அமைகின்றன. புதிய தீவா ஃப்ரெஷ், தீவா பவர், தீவா சோப் உற்பத்திகள், விசேடத்துவம், பாதுகாப்பு, செயற்றிறனுக்கான அர்ப்பணிப்பை காட்டுகிறது. இந்த மாற்றங்கள் எமது வாடிக்கையாளர்களுக்கு புதிய சலவை அனுபவங்களைப் பெற உதவுகிறது." என்றார்.

## MMCA இலங்கை அதன் முதல் சர்வதேச நிகழ்வை நடத்துகிறது

நவீன மற்றும் சமகாலக்கலைக்கான இலங்கை அருங்காட்சியகம் (MMCA இலங்கை) அதன் முதலாவது சர்வதேச கலை நிகழ்வை நடத்தவுள்ளது. MMCA இலங்கையானது, இலங்கை கலைஞர்களின் கலைப்படைப்புகளை சிறப்பாக தொகுத்து, இந்நிகழ்வு லண்டனில் நடைபெற்றது. கலை உலக நாட்காட்டியின் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றான London's Frieze வாரத்துடன் (11–15 ஒக்டோபர் 2023) நடந்த இந்த நிகழ்வில், MMCA இலங்கை தற்போது நடத்தும் 'அந்நியர்' என்ற தலைப்பிலான கண்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காணொளி படைப்புகள் காண்பிக்கப்பட்டன. அவற்றைத் தொடர்ந்து தேர்ந்த குழுவுடனான கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

'அந்நியர்' கண்காட்சியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட காணொளி திரையிடல்களில் டினெல்க லியனகே, ஹனியா லுதுாபி, இமாத் மஜீத், நீனா மங்களநாயகம் மற்றும் சுமுதி சுரவீர ஆகியோரின் படைப்புகள் உள்ளடங்கும்.

ஹன்டி இந்நிகழ்ச்சியைப் பற்றி பேசுகையில், "Frieze வாரத்தில் 'அந்நியர்' கண்காட்சியின் ஒரு பகுதியை லண்டனுக்கு எடுத்துச் செல்வது குறிப்பிடத்தக்கது, ஏனெனில், அந்நியத்துவத்தின்



சிக்கிய அனுபவங்களை கண்காட்சியில் உள்ள படைப்புகள் பல்வேறு வழிகளில் எடுத்துக்காட்டுகின்றன. இடம்பெயர்வு, காலநிலை மற்றும் புகலிடம் பற்றி உலகம் முழுவதிலும் நடைபெறும் கலந்துரையாடல்களில் இது முன்னணியில் உள்ள ஒரு விடயமாகும்" என்று கூறினார். "MMCA இலங்கையின் 'அந்நியர்' கண்காட்சி ஒக்டோபர் 22ம் திகதியன்று நிறைவுபெறும்.

# "பசுமை பட்டுப் பாதை" மாநாட்டில் கலந்து கொண்ட உலகத் தலைவர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க...



## வெப்ப வலய நாடுகளை...

தொடர்பான சர்வதேச பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ வேண்டும் என்ற யோசனையையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்தார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "மேற்படி பல்கலைக்கழகத்தின் ஊடாக மூன்று முக்கிய விடயங்களை அடைந்துகொள்ள நாம் எதிர்பார்த்துள்ளோம். முதலாவதாக பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு இணைப்பு மற்றும் நடவடிக்கைகள் தொடர்பிலான ஆய்வாகும். இரண்டாவதாக தெரிவுகளை பகிர்ந்துகொள்வதையும், மூன்றாவதாக செயன்முறைக் கல்வியையும் எதிர்பார்க்கிறோம். அதேபோல் இப் பல்கலைக்கழகத்தின் உதவியோடு காலநிலை மாற்றங்களை குறைந்த அளவில் பேணிச் செல்வதற்கான ஆய்வுகளை முன்னெடுத்தல், உரிய முகவர் நிலையங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள், சர்வதேச ஒத்துழைப்புக்கள் உள்ளிட்ட துறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து ஆராயவும் எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், புவி வெப்பமடைதலை 1.5 செல்சியஸ் அளவிற்கு மட்டுப்படுத்துவதற்கான தெரிவு, ஆய்வுகளின் ஊடாக தீர்வுகளை பெற்றுக்கொள்ளலாம் . காலநிலை அனர்த்தங்களுக்கு எதிரான போராட்டத்தில் இந்த பல்கலைக்கழகம் முக்கிய பங்கு வகிக்கிறது.

உலக நாடுகள் பலவும் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியே, காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுப்பதற்கான போராட்டத்திற்கு தடையாக அமைந்திருக்கிறது. நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளதால் காலநிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் பங்கெடுப்பது கடினமானதாக மாறியுள்ளது. அதனால், உலகின் ஒட்டுமொத்த சமூகமும் ஒன்று திரண்டு தீர்வுகளை தேடுவதே பொருத்தமானதாக அமையும். அது தொடர்பிலான 03 யோசனைகளையும் நான் முன்வைக்க விரும்புகிறேன். முதலாவதாக குறைந்த வருமானம் ஈட்டும் நாடுகளுக்கு கடன் சலுகைகளை பெற்றுக்கொடுக்க வேண்டும்,.அடுத்ததாக உயர் வருமானம் ஈட்டும் நாடுகளிலிடத்திலிருந்து சலுகைக் கடன்களை பெற்றுக்கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். மூன்றாவதாக, ஆசிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீட்டு வங்கி உள்ளிட்ட பல்துறைசார் அமைப்புக்கள் ஊடாக மேலதிக நிதியங்களை வழங்க வேண்டும். நான் இதற்கு முன்னதாக 150 வெப்ப வலய நாடுகள் தொடர்பில் குறிப்பிட்டுள்ளேன். அவற்றில் 88 நாடுகள் "பெல்ட் அண்ட் ரோட்" வேலைத்திட்டத்தின் பங்குதாரர்களாக உள்ளன என்றார்.

## சட்ட மாஅதிபர் எந்தவிதமான...

உண்மைக்கு புறம்பானது என்றும் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார். அவ்வாறு எந்த வித அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை என்பதை நீதியமைச்சர் என்ற வகையில் பொறுப்புடன் குறிப்பிட முடியும் என்றும் அவர் தெரிவித்தார். நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கவில்லை என நீதிச்சேவை ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. நீதிபதியின் பதவி விலகல் கடிதம் இதுவரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும் அவர் சபையில் வலியுறுத்தினார். அதேவேளை,நீதிச்சேவை ஆணைக்குழு இது தொடர்பில் உரிய தீர்மானத்தை எடுக்கும். என்றும், அதில் தாம் தலையிடப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நீதித்துறைச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி டி.சரவணராஜா 2023.09.23 ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி தனது பதவி விலகலை அறிவுவித்துள்ளார். 'உயிரச்சுறுத்தல் மற்றும் மன உளைச்சல் காரணமாக தாம் பதவி விலகுவதாக 'நீதிபதி அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதிகளுக்கு மன உளைச்சல் இருப்பது இயல்பானதே, மன உளைச்சலால் பதவி விலகுவதானால் சகல நீதிபதிகளும் பதவி விலக நேரிடும். நீதிபதிகளுக்கு மாத்திரமல்ல சட்டத்தரணிகளுக்கும் மன உளைச்சல் உள்ளன.

உயிரச்சுறுத்தல் காரணமாக பதவி விலகுவதாக நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.தனக்கு உயிரச்சுறுத்தல் காணப்படுமாயின் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் நீதிபதிக்கு முழுமையாக வழங்கப்பட்டுள்ளது. உயிரச்சுறுத்தல் விடுத்த நபருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கலாம்.

பொலிஸ்மா அதிபருக்கும் அறிவிக்கலாம்.ஆனால் அவர் எந்த அதிகாரத்தையும் பயன்படுத்தவில்லை. இது தொடர்பில் செயற்படவுமில்லை.

பதவி விலகல் தொடர்பான கடிதத்தை நீதிபதி டி.சரவணராஜா 2023.09.23 ஆம் திகதி எழுதியுள்ளார்.எனினும், கடிதத்தை 2023.09.27 ஆம் திகதியே நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இடைப்பட்ட காலத்தில் அவர் கொழும்பில் தங்கியுள்ளார், இக்கலத்தில்,இரண்டு வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்துள்ளார்.

தனது காரை விற்பனை செய்துள்ளார், அத்துடன் வெளிநாட்டுப் பயணத்துக்கான விமானச்சீட்டை அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட தொலைபேசி ஊடாக பதிவு செய்துள்ளார். இவ்விடயங்கள் தொடர்பில் பல சந்தேகங்கள் காணப்படுகின்றன.

## தேர்தலை நடத்தும் உறுதியான...

இவ்விடயத்தில் உண்மைத் தன்மையுடனேயே செயற்படுவதாகவும் பிரதமர் சபையில் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்தில் சில வார்த்தை பிரயோகங்களை மேற்கொள்வது தொடர்பில் சிக்கல்கள் எழுந்துள்ளன. என்னைப்பற்றி எவரும் விமர்சனம் செய்யலாம். ஆனால் அரசாங்கம் உண்மை தன்மையுடனேயே செயற்படுகிறது.

நாடு வங்குரோத்து நிலையில் இருந்த போதே உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் நிதியமைச்சின் செயலாளர் போதியளவு நிதியை வழங்க முடியாதென தெரிவித்திருந்தார். தனிப்பட்ட ரீதியில் தேர்தலுக்கு செலவிடுவதற்கு நிதி கிடைக்கலாம். ஆனால், அரசாங்கம் என்ற வகையில் இதற்கான நிதியை விடுவிக்க முடியாத நிலையிலேயே தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது. பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதால் தேர்தல் முறையை மாற்றுவது தொடர்பில் நாட்டு மக்கள் அனைவரும் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். சில பகுதிகளுக்கு உறுப்பினர்கள் இல்லாமலாகும் நிலைமை தொடர்பிலும் அனைவரும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டு அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடலில் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்ள வேண்டும்.

மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொள்ளப் போவதில்லை என எதிர்கட்சித் தலைவர் நேற்று சபையில் தெரிவித்த கூற்றுக்குப் பதில் அளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவித்த பிரதமர்,

எதிர்க்கட்சித் தலைவர்அவசரமாக எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்க வேண்டியது எனது பொறுப்பு. பாராளுமன்ற தேர்தல் முறைமையில் திருத்தம் மேற்கொண்டு கலப்புத் தேர்தல் முறைமை ஒன்றைக் கொண்டு வருவதாக தெரிவித்தே ,மக்கள் ஆணையை நாம் பெற்றோம்.

இது தொடர்பில், எமது அரச தலைவர்கள் பாராளுமன்றத்தில் பல தடவைகள் தெரிவித்திருந்தனர்.

நாம் வரவு செலவுத் திட்டத்திற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் போதும், தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பிலும் பாராளுமன்றத்தில் இரு தரப்பினரும் கேட்டுக் கொண்டதாக சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதனை செயற்படுத்துவது தொடர்பில் பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை கலப்பு முறையில் நடத்துவது தொடர்பான யோசனைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## வடக்கில் கடற்றொழிலுக்கென...

கடற்றொழிலுக்கு மட்டுமன்றி நுகர்வோருக்கும் பாரிய நஷ்டத்தை ஏற்படுத்தும் வகையில், இடைத்தரகர்கள் குழுவொன்று முறையற்ற இலாபம் ஈட்டும் கடற்றொழில் மாபியாவை முடிவுக்குக் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (18) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் கூறியதாவது: கடந்த காலங்களில், கடற்றொழில் கூட்டுத்தாபனம் நேரடியாக சட்ட முறைகளின் கீழ் மீன்களை இறக்குமதி செய்ய ஆரம்பித்ததால், அதிக இலாபம் ஈட்டி வருகிறது.

ஆனால், கடற்றொழிற்றுறையில் காணப்படும் ஏகபோக உரிமையை உடைப்பது எளிதான காரியம் அல்ல. எங்கள் பணிகளைக் குழப்ப அவர்கள் நிறைய முயற்சி செய்தனர். கூட்டுத்தாபனத்தில் இருந்தும் அதற்கு ஆதரவு இருப்பதாக அறியக்கிடைத்தது. இந்த சூழ்நிலையால், மீனவர்கள், நுகர்வோர் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு பெரும் நட்டம் ஏற்பட்டது. எனவே, சவால்களுக்கு மத்தியிலும் அந்த மாபியாவை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

விநியோகஸ்தர்களிடமிருந்து ஒரு கிலோ மீன் ரூ.1,750க்கு கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் நேரடியாக இறக்குமதி செய்கையில், ஒரு கிலோ 1,250 ரூபாய்க்கு வாங்கலாம். கூட்டுத்தாபனத்தின் மாதாந்த மீன் தேவை 50,000 டொன்களை விட அதிகமாகவுள்ளது. இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் கூட்டுத்தாபனம் நட்டத்தையே சந்திக்க நேரிடுகிறது.

அத்துடன், வடமாகாணத்தில் கடற்றொழிலுக்கு பிரத்தியேகமான முதலீட்டு வலயமொன்றை நிறுவுவதற்கான ஏற்பாடும் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. அதன் மூலம் கடற்றொழில் தொடர்பான முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டு வந்து பெருமளவிலான மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க முடியும்.

## வடக்கு, கிழக்கில் நாளை பொதுமுடக்கத்துக்கு...

தெரிவித்துள்ளன. யாழ். ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலே, இக்கட்சிகள் இதனைத் தெரிவித்தன.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நாடு சுதந்திரமடைந்து 75 வருடங்கள் கடந்தும்,தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டே வருகின்றன.

போர் முடிந்து 14 வருடங்கள் கடந்துள்ளபோதும்,எமக்கு நீதி கிடைக்கவில்லை.இதையே கோரி நிற்கிறோம்.

வடக்கு,கிழக்கில் தமிழர்களின் பெரும்பான்மை பலத்தை சிதைக்கும் வகையிலான செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது.முல்லைத்தீவு,குருந்தூர்மலை,தையிட்டி மற்றும் கன்னியா போன்ற தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களில் பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிராக வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புக்களும் மீறப்பட்டுள்ளன.குருந்தூர்மலை ஆலய வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி சரவணராஜாவும் அச்சுறுத்தலுக்கஞ்சி நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்.

திருகோணமலையில் இலுப்பைக்குளத்தில், விகாரை ஒன்றுக்கான முன் நடவடிக்கைகள், ஆளுநரின் கட்டளையையும் மீறி. மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காணிகள் மீளக் கையளிக்கப்படும் என்று அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

மயிலத்தை மடு மேய்ச்சல் காணிகளில்,பெரும்பான்மை இனத்தவர் குடியமர்த்தப்படுகின்றனர்.

இவ்வாறான அநீதிகளுக்கு நீதி கோரியும்,சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்க்கவுமே இந்த ஹர்த்தாலை ஏற்பாடு செய்துள்ளதாக எட்டு கட்சிகளும் கூட்டாக தெரிவித்தன.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ் மக்கள் கூட்டணி , ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி , ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகம் ஆகியன இணைந்து இந்த அறிக்கை வெளியிட்டுள்ளன

## இந்திய வம்சாவளி தமிழ் மக்களை...

எனும் தலைப்பின்கீழ் பதிவாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் தொடர்பிலே, அமைச்சர் தனது கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தாக ஜனாதிபதி மற்றும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரான, பிரதமர் ஆகியோருடனும் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

" பதிவாளர் நாயகத்தின் யோசனையுடன் நாம் உடன்படவில்லை. எமது மக்களுக்கு 200 வருடகால அடையாளம் உள்ளது. 200 ஆவது வருடத்தில் எமது அடையாளத்தை அழிப்பதற்கு முற்படுகின்றனர். இதனை ஏற்க முடியாது. இது சம்பந்தமாக ஜனாதிபதி, பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வை பெற முற்படுவோம்.

எமது மக்கள் போரிடவும் இல்லை, தனி நாடு கோரவும் இல்லை. தனி அடையாளத்தைதான் கோருகின்றனர். அதனையும் அழிக்க முற்படுவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல. இலங்கை தமிழர் என பதிவு செய்தால் அது பெரும் அநீதியாக அமைந்துவிடும். முப்பது வருடங்கள் பிரஜா உரிமை இல்லாமல் வாழ்ந்தோம், எமது தொழிலாளர்கள் அடிமைகள்போல் வழிநடத்தப்படுகின்றனர், தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கான நகர்வுகளும் இல்லை. எமக்கு எமது அடையாளம் வேண்டும். எனவே, மேற்படி இந்த யோசனையை ஆதரிக்க முடியாது. அதனை எதிர்ப்போம்." என்றார்.

## பொருளாதார, சமூக, கலாசார...

ஜனாதிபதி வோ வென் தோக் (Vo Van Thuong) ஆகியோருக்கிடையிலான இருதரப்பு சந்திப்பு (18) பீஜிங் நகரில் நடைபெற்றது. இருநாடுகளிலும் தாக்கம் செலுத்தும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இருநாட்டு தலைவர்களும் கலந்தாலோசித்த அதேவேளை, இலங்கை மற்றும் வியட்நாமுக்கு இடையிலான இருதரப்பு தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்ளும் நோக்கில் இரு நாடுகளினதும் வெளிவிவகார அமைச்சர்களின் தலைமையில் செயல்திட்டம் ஒன்றை உருவாக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இலங்கையின் பொருளாதார நிலைமை மற்றும் எதிர்கால எதிர்பாப்புக்கள் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இதன்போது விளக்கமளித்தார். சரிவடைந்திருந்த வியட்நாம் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பப் பின்பற்றிய செயன்முறைகள் தொடர்பிலும் அதன்போது எதிர்கொண்ட சவால்கள் தொடர்பிலும் வியட்நாம் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இருநாடுகளுக்கும் இடையில் பொருளாதார மற்றும் வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்திக்கொள்வது தொடர்பிலும், இலங்கையில் விவசாய துறையை நவீனமயப்படுத்துவது தொடர்பிலும் இருநாட்டு தலைவர்களும் கலந்தாலோசித்தனர்.

## வடக்கு, கிழக்கில் நாளை...

தமிழ்த் தேசிய தலைமைகளின் வாடிக்கையாக்கி விட்டது. எனவே, இந்த ஹர்த்தாலை வடக்கு கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்கள் புறக்கணித்து பகிஷ்கரிக்க வேண்டும்.

முல்லைத்தீவு நீதிபதியின் செயற்பாடுகள் தன்னிச்சையாக அவரினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சம்பவம். அவருக்கு எவ்விதமான உயிர் அச்சுறுத்தலும் இருக்கவில்லை. அரசாங்கத்துக்கும் நீதித்துறைக்கும் அவமானத்தை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டமை, குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. சில அரசியல் தலைவர்களும் அரசியல் கட்சிகளும் தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக இத்தகைய செயல்பாடுகளை செய்து, சர்வதேசத்தில் அரசாங்கத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்த முயற்சி செய்கின்றன. எனவே பொதுமக்கள் இந்த சுயநல அரசியல்வாதிகளின் செயற்பாடுகளுக்கு மயங்கி இடம் கொடுக்காது, தமது அன்றாடக் கடமைகளில் ஈடுபட வேண்டும் என்றும். வடக்கு கிழக்கில் ஹர்தாலை மேற்கொள்ளும் தமிழ் அரசியல் தலைமைகள், கொழும்பில் சுகபோக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டு வெறுமனே வடக்கு கிழக்கில் உள்ள அப்பாவி மக்களை தமது தேவைகளுக்கு அடகு வைப்பதாகவும் சமய தலைவர்களும் கல்விமான்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

## டின்மீன், நெத்தலிக் கருவாடு...

பயறு விலை 20 ரூபாவினால் குறைப்பு, அதன் புதிய விலை 1,100 ரூபா. ஒரு கிலோ நெத்தலிக்கருவாடு விலை 10 ரூபாவினால் குறைப்பு, அதன் புதிய விலை 1090 ரூபா. ஒரு கிலோ கொத்தமல்லி 10 ரூபாவினால் குறைப்பு, அதன் புதிய விலை 540 ரூபா.

இந்த புதிய விலை குறைப்புகள் இன்று19ஆம திகதி முதல் அமலுக்கு வருமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டயனா வழக்கின்...

நிஸங்க பந்துல கருணாரத்ன, ஸ்வர்ணாதிபதி மற்றும் ஏ. மரிக்கார் உள்ளிட்ட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் இது தொடர்பான தீர்ப்பை நேற்று (18) அறிவிப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இது தொடர்பான தீர்மானம் எதிர்வரும் 31ஆம் திகதி அறிவிக்கப்படுமென மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன தெரிவித்தார்.இந்த மனுவை சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் சமர்ப்பித்திருந்தார்.

டயானா கமகே ஒரு பிரிட்டன் பிரஜை என மனுதாரர் கூறியிருந்தார்.

## இன்றைய பலன்கள்



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)



**மேஷம்:** உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம்.தள்ளி வைத்த வேலையை செய்ய நேரலாம். சொந்த தொழிலி புதிய ஒப்பந்தங்கள் மூலம் வேலைப்பளு அதிகரிக்கும்.



**ரிஷபம்:** உத்தியோகத்தில் சிலருக்கு எதிர்பாராத இட மாற்றமும் சம்பள உயர்வும் கிடைக்கலாம். அலுவலகம் பற்றி யாரிடமும் விமர்சிக்காமல் இருப்பது நல்லது.



**மிதுனம்:**உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புக்களில் கவனமாக இல்லாவிட்டால் உயர் அதிகாரிகளின் கோவப்பார்வைக்கு இலக்காக நேரிடும்.



**கடகம்:**சில விஷயங்களில் கூட்டு முயற்சி பயன் தரும். பயணங்களின்போது கவனமாக இருப்பது பயன் தரும். உத்தியோகத்தில் பதவி,சம்பள உயர்வுக்காக செய்த முயற்சி பயன் தரும்.



**சிம்மம்:**வெற்றியடையாத காரியங்களுக்காக தக்க நண்பர்களின் உதவியோடு மீண்டும் முயற்ச்சிப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் விடுமுறையில் உள்ள சக பணியாளர்களின் வேலையையும் சேர்த்து செய்யும் நிலை ஏற்படலாம்.



**கன்னி:**சில செயல்களில் தளர்வு ஏற்பட்டு மனதில் கலக்கம் ஏற்படலாம்.நண்பர்களின் உதவியை பெற முற்படுவீர்கள்.உத்தியோகத்தில் வழக்கத்திற்கு மாறான வேலைப்பளுவால் அவதிப்படலாம்.



**துலாம்:**உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயரதிகாரிகளிடம் சுமுகமாக நடந்துகொள்ளாமல் பிரச்சினைகள் உருவாகலாம். சொந்த தொழிலில் புதிய நபர்களின் வருகையும் அவர்களால் பண வரவும் உண்டாகும்.



**விருச்சிகம்:**தர்ம காரியங்களிலும் புண்ணிய செயல்களிலும் நாட்டம் அதிகமாகும். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் விருப்பப்படி பணியை செய்துகொடுக்க நேரிடும்.



**தனுசு:**முக்கிய ஆண்மீக நிகழ்ச்சிக்கு பண உதவி செய்யும் சந்தர்ப்பம் ஏற்படும்.உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள பொருட்களா பாதுகாப்பாக வைத்துக்கொள்வது அவசியம்.



**மகரம்:**உத்தியோகத்தர்கள் தங்கள் பொறுப்புக்களில் கவனம் செலுத்தாவிட்டால் உயரதிகாரிகளின் பார்வையில் தென்படும் குறைகளுக்கு பதில் சொல்ல வேண்டியதிருக்கும்.



**கும்பம்:**சிலருக்கு அலுவலகத்தில் முக்கிய பொறுப்பு வந்து சேரும். சொந்த தொலில் முன்னேற்றமான போக்கு காணப்படும்.புதிய வாடிக்கையாளர்களால் தொழில் ரீதியான முன்னேற்றம் கிடைக்கும்.



**மீனம்:**பண விவகாரங்களில் ஒரு முறைக்கு இரு முறை நிதானமாக யோசித்து செய்வது நன்மை தரும். உத்தியோகத்தர்கள் சிலருக்கு அலுவலகத்தில் கிடைக்க வேண்டிய கடன் தொகை கிடைக்கும்.

## நாட்டின் வலுவான... (03ஆம் பக்கத் தொடர்)

இணைப்பை மேம்படுத்துவதன் மூலம் இந்தியப் பெருங்கடலில் ஒரு பொருளாதார மையமாக தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முயற்சிக்கிறது. இது கடல்சார் பட்டுப்பாதையின் வளர்ச்சி இலக்குடன் ஒத்துப்போகிறது." (Belt and Road " என்ற பொருளாதார மையமாக இலங்கை மாறும் வாய்ப்புள்ளது. தற்போது, இலங்கையின் முக்கிய துறைமுகமான கொழும்பு துறைமுகம், 145 சர்வதேச துறைமுகங்களில் 30ஆவது இடத்தில் உள்ளது. Colombo Port City இதில் முக்கிய இடத்தை வகிக்கிறது.

## நிறைவேற்று அதிகாரத்தை... (03ஆம் பக்கத் தொடர்)

ஆனால், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாது செய்ய நாம் நடவடிக்கை எடுத்துள்ளதாக ஊடகங்களில் தெரிவிக்கப்படுகிறது.இது முற்றிலும் பொய்யான ஒரு விடயமாகும். எமக்கு அப்படி செய்ய வேண்டிய தேவையும் கிடையாது.

நாம் செய்ய முடியுமான செயற்பாடுகளை மட்டும்தான் செய்வோம்" எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கு, கிழக்கை முடக்குவதால்... (03ஆம் பக்கத் தொடர்)

இவ்வாறு அந்த துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகள் தங்களது இருப்புக்கும் வாக்கு வங்கியை சரிய வீடாமல் காப்பாற்றுவதற்குமே இவ்வாறான வேலைத்திட்டங்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். சிந்தித்து செயற்படுங்கள்... என்றும் துண்டுப்பிரசிரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## பயங்கரவாத எதிர்ப்பு...

முன்வைக்கப்படவுள்ளதாக கடந்த (03) வெளியான பாராளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.எனினும், இந்த விடயம் ஒழுங்கு புத்தகத்திலிருந்து தற்போது நீக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் பாராளுமன்றத்திற்கு அறிவித்தார்.

## மின்சாரம், எரிபொருள்...

பெற்றோலிய பொருட்கள் மற்றும் எரிபொருள் விநியோகம் என்பனவும் அத்தியாவசிய சேவைகள் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளன. மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள் மற்றும் பிறவற்றில் உள்ள நோயாளிகளின் பராமரிப்பு, வரவேற்பு, உணவு பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பான சேவைகள், வேலைகள் அல்லது உழைப்பு என்பவை, அவசியமான அல்லது செய்ய வேண்டிய சேவைகளென வர்த்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மாணவரிடையே கண் நோய்...

தவிர்த்துக்கொள்ளுமாறு அவர் பெற்றோரை அறிவுறுத்தியுள்ளார். இதன் மூலம் கண்நோயை கட்டுப்படுத்த முடியுமென அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். கண்கள் சிவத்தல், கண்களிலிருந்து தொடர்ந்தும் கண்ணீர் வெளியேறுதல், கண்களில் அரிப்பு ஏற்படுதல், காய்ச்சல் மற்றும் தலைவலி போன்றவை கண் நோய்க்கான அறிகுறிகளாக காணப்படுவதாக குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

## குற்றச் செயல்கள் குறித்து...

அடையாளத்தை அறிவிக்காமல் இந்த எண்ணின் மூலம் உரிய தகவல்களை வழங்கவும் முடியும்.

நாட்டின் எந்த பகுதியில் இடம்பெறும் பல்வேறு குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் தொடர்பான தகவல்களையும் இந்த இலக்கத்தின் ஊடாக வழங்க முடியும்.




# மத்திய மலைநாட்டில் அடை மழை; நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வு

**மஸ்கெலியா தினகரன் விசேட, ஊவா சுழற்சி நிருபர்கள்**

மத்திய மலைநாட்டில் நேற்று புதன்கிழமை (18) காலை முதல் கனத்த மழை பெய்து வருவதினால், நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளது.

மவுசாகலை, காசல்ரீ, மேல் கொத்மலை, கென்யோன், லக்ஷபான, நவலக்ஷபான, பொல்பிட்டிய, கலுகல உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளதாக, அந்தந்த நீர்த்தேக்கங்களுக்கு பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், கென்யோன் நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் மூன்று அங்குலத்துக்கு திறந்துவிடப்பட்டு உள்ளதாகவும் மவுசாகலை நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை எட்டும் நிலையில் இருந்ததாகவும், நீர்மின் நிலைய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சாமிமலைஓயா, சியத்த கங்குல ஓயா, மறேஓயா, காட்மோர்ஓயா உள்ளிட்ட சிற்றாறுகள் அனைத்திலும் மழைநீர் நிரம்பியுள்ளது.

ஆகையினால், களனி கங்கையை அண்டி வசிக்கும் மக்களையும் தாழ்நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களையும் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு, அந்த அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.



மேலும், பதுளை மாவட்டத்தில் தொடரும் மழை காரணமாக பல்வேறு இடங்களில் மண்சரிவு ஆபத்தும் வெள்ள அபாயமும் ஏற்பட்டுள்ளது. அத்துடன், வீதிகளில் தாழ் இறக்கமும் கற்பாறை சரிவுகளும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கினிகத்தேனை நுவரெலியா வீதியில் பனி மூட்டம் காணப்படுவதினால் மிகுந்த அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு சாரதிகளிடம் ஹட்டன் போக்குவரத்து பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## கண்டியில் வலம்புரி சங்கை விற்க முயன்ற சிற்பக்கலைஞர் கைது

**அக்குறணை குறூப் நிருபர்**

கண்டியைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமானதாக கருதப்படும் பெறுமதி வாய்ந்த வலம்புரிச் சங்கொன்றை விற்பனை செய்ய முற்பட்ட சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (17) பொலிஸார் கைது செய்ததுடன், சந்தேக நபரிடமிருந்து வலம்புரிச் சங்கையும் கைப்பற்றினர். இந்த வலம்புரிச் சங்கின் பெறுமதி 30 கோடி ரூபாவென்று மதிப்பிடப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். இந்த வலம்புரிச் சங்கை விற்பனை செய்வதற்கு இடைத்தரகராக சிற்பக் கலைஞர் ஒருவரே முற்பட்டதுடன், இந்தச் சிற்பக் கலைஞர் மாலம்பே பிரதேசத்தைச் சேர்ந்தவரென்று விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2023.10.17
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5270
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 34,013,784.00
ஆங்கில எழுத்து D
வெற்றி இலக்கங்கள் 9 9 4 5 5 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3512
சீட்டிழுப்பு திகதி 2023.10.17
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,323,849.20
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 17 20 28 52
விசேட எழுத்து E
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 51436

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1618
2023.10.17
19218
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 411,274,948.00
ஆங்கில எழுத்து F
சுப்பர் இலக்கம் 24
வெற்றி இலக்கங்கள் 28 31 50 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லகி 7 Lucky லக்கி
திகதி 2023.10.17
சீட்டிழுப்பு இலக்கம் 0096
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 1 1 4 6 5 8
L7 இலக்கம் 2 7
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,710,505.28

ராசி சுப பலன்
திகதி 2023.10.17
சீட்டிழுப்பு இலக்கம் 579
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,036,814.40
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 01 02 29 54
விசேட இலக்கினம் கன்னி

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1300
2023.10.17
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 115,826,220.00
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 10 14 45 70
விசேட எழுத்து I
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 15763


## கஹவத்தயில் புதையல் தோண்டிய மூவர் கைது



கஹவத்த பிரதேசத்தில் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் மூவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (17) பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக விசே அதிரடிப் படையினரின் கஹவத்த முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து கஹவத்த நம்பி மலைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, இச்சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சந்தேக நபர்களிடமிருந்து உபகரணங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கஹவத்த மற்றும் அட்டகலன் பத்த பிரதேசங்களைச் சேர்ந்த 34, 45 மற்றும் 50 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைக்காக இச்சந்தேக நபர்கள் கஹவத்த பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## கந்தப்பளை, கொங்கோடியா தோட்டத்தில் பாரிய மண்சரிவு

**ஆ.ரமேஸ்**



நுவரெலியா மாவட்டத்தின் கந்தப்பளை பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை (18) அதிகாலையிலிருந்து தொடர்ச்சியாக கடும் மழை பெய்து வருவதுடன், பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கந்தப்பளையின் கொங்கோடியா தோட்டத்தில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது. கந்தப்பளை நகரிலிருந்து கொங்கோடியா, கல்லாலவத்தை தோட்ட வழியாக இராகலை நோக்கிப் பயணிக்கும் பிரதான வீதியிலேயே மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த மண்சரிவு காரணமாக மேற்படி வீதியினூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. ஆகையினால், இந்த வீதியினூடாக விவசாயக் காணிகள் மற்றும் குடியிருப்புகளுக்கு பயணிக்கும் மக்களை மாற்றுவழியை பயன்படுத்துமாறு கந்தப்பளை பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

# சலங்கந்தை ஒட்டரி பிரதேசத்தில் மதுபானசாலை அமைக்க எதிர்ப்பு




**ஹற்றன் சுழற்சி, மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்கள்**

நோர்வூட் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட டிக்கோயா, சலங்கந்தை ஒட்டரி பிரதேசத்தில் மதுபானசாலை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, அப்பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை (18) ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடைபெற்றது.

ஆன்மிகத் தலைவர்கள், பொதுமக்கள், இளைஞர்கள் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றதுடன், மதுபானசாலை அமைக்கப்படுவதற்கு தமது எதிர்ப்பையும் வெளியிட்டனர்.

"தற்போது மலையக சமூகம் புதிய மாற்றத்துடன் முன்னேறிக்கொண்டு வரும் நிலையில், எமது சமூக மாற்றத்துக்கு மதுபானசாலைகள் பெரும் தடையாக அமையும். எனவே, எமது பகுதியில் மதுபானசாலை வேண்டாம்" என ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர்.

'மதுபானசாலைக்கான அனுமதியை இரத்துச் செய்', 'வேண்டாம், வேண்டாம் மதுபானசாலை வேண்டாம்' ஆகிய கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டோர் ஒட்டரி பிரதேசத்திலிருந்து டிக்கோயா நகர்வரை சென்றனர்.

## தமிழ்மொழி தினப் போட்டியில் மாகாணமட்டத்தில் எல்வட்டன் தமிழ் பாடசாலை மாணவன் முதலாமிடம்




**பதுளை நிருபர்**

அகில இலங்கை தமிழ்மொழி தினப் போட்டிக்கான மாகாணமட்டப் போட்டியில் ப/ எல்வட்டன் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த து.கிரிஷாந்தன், முதலாம் பிரிவு ஆக்கம் எழுத்துப் போட்டியில் முதலாமிடத்தை பெற்று தேசியமட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

வலயமட்டப் போட்டியில் ஆக்கம் எழுத்துப் போட்டியில் து.கிரிஷாந்தன் முதலாமிடத்தையும் வாசிப்புப் போட்டியில் சு.பிரணவி முதலாமிடத்தையும் பேச்சுப் போட்டியில் ஞ.ஜஸ்வின்யா இரண்டாமிடத்தையும் ஆக்கத்திறன் வெளிப்பாடு போட்டியில் ரு.இரோஷினி இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

கோட்டமட்டப் போட்டியில் 6 போட்டிகளில் பங்குபற்றி முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களையும் இப்பாடசாலை மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.

குறைந்த வளங்களுடன் இயங்கிவரும் இப்பாடசாலையில் தமிழ் தினப் போட்டியில் மாணவனொருவன் வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்கு தெரிவாகியமை இதுவே முதன் முறையாகுமென, அப்பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

## உலோக ரவையை பயன்படுத்தி 'சீதா' யானை சுடப்பட்டது

**பேராதனை மிருக வைத்திய பீட பேராசிரியர் தகவல்**

**அக்குறணை குறூப் நிருபர்**

மஹியங்கனை பெரஹராவுக்காக அழைத்துச் செல்லப்பட்ட 'சீதா' எனும் வளர்ப்பு யானையை உலோக ரவையை பயன்படுத்தி சுடப்பட்டமை தெரியவந்துள்ளதாக, பேராதனை பல்கலைக்கழகத்தின் மிருக வைத்திய பீடத்துக்கான பேராசிரியர் அசோக்க தங்கொல்ல தெரிவித்தார்.

'சீதா' எனும் இந்த யானையை காட்டு யானையெனக் கருதி வனப் பாதுகாப்பு அதிகாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த யானை மரமொன்றில் கட்டப்பட்டிருந்த போதே, அதன் மீது இரவு வேளையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்த யானைக்கு இறப்பர் ரவையை பயன்படுத்தி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாக வனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்த போதும், துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த யானைக்கு மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சையின் போது, உலோக ரவையை பயன்படுத்தி சுடப்பட்டமை தெரியவந்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார். கண்டி, யட்டிநுவர பிரதேசத்தில் இந்த யானைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வரப்படுகின்றது. இந்த யானையின் உடலில் மூன்று சென்ரி மீற்றர் ஆழத்தில் இந்த ரவை இருந்ததாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.


விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

பெறுகை அறிவித்தல்

**விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான வளாகங்களுக்கு பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக விலைமனுக்கள் கோரல் – 2023/2024**

கொழும்பு -7, பிலிப்குணவர்தன மாவத்தை, இல. 09இல் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சொந்தமான கொழும்பு -7 நிதஹஸ் மாவத்த, இல. 33இல் அமைந்துள்ள பழைய விடுதி விளையாட்டு சங்க கட்டிடம், டொரிங்டன் மைதானம், டொரிங்டன் விளையாட்டரங்கு இல. 100/10இல் அமைந்துள்ள ஹொக்கி பார்வையாளர் அரங்க இல. 100/08இல் அமைந்துள்ள ரீட் அவனியூ விடுதி, ரீட் அவெனியூ விடுதி அருகில் வாகன நிறுத்துமிடம், பெலியத்த டி.ஏ. ராஜபக்ஷ விளையாட்டு கட்டிடத் தொகுதி, மாத்தறை கொட்டவில மாவட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதி, பொலன்னறுவை மாவட்ட விளையாட்டு கட்டிடத் தொகுதி, களுத்துறை பண்டாரகம மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, இரத்தினபுரி மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, மாத்தளை மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, பிங்கிரிய மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி,, கம்பஹா மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, நுன்வத்த விளையாட்டுக் கட்டிடத் தொகுதி மற்றும் வவுனியடி மாவட்ட விளையாட்டுக் கட்டிடத் தொகுதி, ஆகிய இடங்களுக்கு பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய போட்டி கேள்விகோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. விளையாட்டு அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் கணக்குப் பிரிவு காசாளரிடம் மீளளிக்கப்படாத ரூ. 2500.00 தொகையை செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்கு சமர்ப்பித்து 2023.10.19 முதல் 2023.11.07 வரை (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00) அலுவலக நாட்களில் குறித்த பெறுகை ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) சகல கேள்விதாரர்களும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதித்த எந்த வர்த்தக வங்கியில் இருந்து பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பெயரில் பெற்றுக் கொண்ட ரூ. 250,000.00 பெறுமதியான கேள்விப் பிணையொன்றை இணைப்பு 01 இல் குறிப்பிடப்படும் மாதிரிக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும். இக்கேள்விப் பிணை கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 119 நாட்கள் (2023.11.08 - 2023.03.05) வரை செல்லுபடியாதல் வேண்டும்.

04. குறித்த மாதிரிப் பத்திரத்தில் சமர்ப்பிக்க வேண்டிய விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியாக இரு பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அக்கேள்விப்பத்திரங்கள் 2023.11.08 பி.ப. 2.30 வரை ஏற்கப்படுவதுடன் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் கேள்விப் பத்திரங்கள் பணிப்பாளர், பெறுகை, விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல. 09, பிலிப் குணவர்தன மாவத்த, கொழும்பு -07 என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கையோடு கொண்டு வந்து ஒப்படைக்கும் கேள்விப்பத்திரங்கள் விளையாட்டு அமைச்சின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பாதுகாப்பு சேவையைப் பெற்றுக் கொள்ளல் 2023/2024 இற்கான விலைமனுக்கள்' என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவது 2023.11.08 பி.ப. 2.30 அத்துடன் அன்றே உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

06. கேள்விகள் திறக்கப்படும் தினத்தில் இருந்து 91 நாட்கள் கேள்வி செல்லுபடியாதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்,**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்த,**
**கொழும்பு -07.**
**தொ.பே. இல. 011-2697934**
**பெக்ஸ்: 011-2695822**

## எதிர்வரும் 21ஆம் திகதி

# மோட்டார் போக்குவரத்து திணைக்கள நடமாடும் சேவை மட்டக்களப்பில்

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 'நடமாடும் சேவை' மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நடத்த ஏற்பாடு செய்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நாளை மறுதினம் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8:30 மணி முதல் மாலை 4:00 மணி வரை மட்டக்களப்பு மாவட்ட மக்களை இலக்காகக் கொண்டு இந்த நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களம், கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் இணைந்து நடத்தும் இந்த 'நடமாடும் சேவை' மூலம் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட திணைக்களத்தின் ஊடான சேவைகளை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

### அனைத்து வகையான சேவைகளும் ஒரே நாளில்



- 2014/2015 இல் அரச அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள்களின் நிபந்தனைகள் நீக்கப்பட்டு உரிய அதிகாரிகளிடமே உரிமம் ஒப்படைக்கப்படுதல்,
- வாகனப் பதிவுச் சான்றிதழில்களில் திருத்தங்களைச் செய்தல்.
- புதிய சாரதி அனுமதிபத்திரங்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது,
- சாரதி அனுமதிபத்திரம் அல்லது வாகனத்தின் தகவல் அடங்கிய Extract சாற்றை வழங்குதல்,
- அனைத்து ரக வாகனங்களுக்கான பணிகளையும் பதிவு செய்தல்,
- வாகனத்தைச் சரிபார்த்து எடைச் சான்றிதழ் அல்லது அடையாளச் சான்றிதழை வழங்குதல்,
- சிலிண்டர் கொள்ளளவு 50க்கும் குறைவான மோட்டார் சைக்கிள்களின் பதிவு,
- மோட்டார் போக்குவரத்து துறையில் சேவைக்கு விண்ணப்பித்து, இதுவரை தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குதல்,
- வாகன வருவாய் உரிமம் பெற முடியாமல் நீண்டகாலமாக தடுப்புப்பட்டியலிலுள்ள வாகனங்களுக்கு மீண்டும் வருவாய் உரிமம் பெற பரிந்துரை கடிதங்கள் வழங்குதல்,
- எழுத வாசிக்க தெரியாத நபர்களுக்கு சாரதி அனுமதி பத்திரம் பெற சிறப்பு பரீட்சை நடத்துதல்,
- மாற்றுத்திறனாளிகளுக்கு சாரதி அனுமதி பத்திரம் வழங்க மருத்துவ தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைகளை வழங்குதல்,
- மோட்டார் சைக்கிள்களுக்கு மட்டும் நிறமாற்றம் செய்யப்பட்ட அடிச்சட்டகம் மற்றும் என்ஜின் எண்களை உள்ளூரில் அச்சிடுதல்,
- வீதிப்பாதுகாப்பு குறித்து சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்,

தரகர்கள், மோசடியாளர்களுக்கு இரையாவதைத் தடுக்கும் வகையில், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலிருந்தே தேவையான சேவைகளைப் பெறுவதற்கு, நாளை மறுதினம் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8:00 மணி முதல் மாலை 4:00 மணி வரை மட்டக்களப்பு இந்துக் கல்லூரிக்கு வருகை தருமாறும் மட்டக்களப்பு மக்களை மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

# மண்முனை தென்எருவில்பற்று பிரதேசத்தில் காடு வளர்ப்பு திட்டம்



(துறைநீலாவணை நிருபர்)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தின் ஒழுங்கமைப்பில் காடு வளர்ப்பு திட்டத்தின் நான்காவது செயற்றிட்டம் கடந்த திங்கட்கிழமை பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் எருவில் கிராம சேவகப்பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. உலகிலேயே அதிக எண்ணிக்கையான காடுகளை உருவாக்கியதன் மூலம் நோபல் பரிசுக்கு சமமான 'புளூபிளானட்' எனும் விருதை பெற்றவர் ஜப்பான் நாட்டு இயற்கை விஞ்ஞானி மியோவாக்கியா. இதன் காரணமாகவே இவரின் பெயரின் மூலம் இக்காடு வளர்ப்புதிட்டம் அழைக்கப்படுகின்றது. இது குறுகிய நிலப்பரப்பில் காடுகளை உருவாக்கும் ஒரு அற்புதமான செயற்பாடாகும். கடந்த 2019ஆம் ஆண்டளவில் களுவாஞ்சிகுடி பிரதேச செயலக பிரிவின் களுவாஞ்சிகுடி வடக்கு, களுவாஞ்சிகுடி தெற்கு மற்றும் மாங்காடு ஆகிய கிராம சேவகப்பிரிவுகளில் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் தற்போதைய நிலை தொடர்பான ஆவணப்படமும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த அதிதிகள் மற்றும் பொதுமக்களுக்கு காண்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் சூழலியலாளருமான றியாஸ் அஹமட், உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதேசசபை செயலாளர் சா.அறிவழகன், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், எருவில் கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், முன்பிள்ளை பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## திருகோணமலையில்

# தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவதாக இம்ரான் எம்.பி குற்றச்சாட்டு

(தம்பலகாமம் குறூப் நிருபர்)



தமிழ்மொழி பேசுவோர் சுமார் 75 வீதம் வாழ்கின்ற திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மொழிக்குரிய அந்தஸ்து வழங்கப்படாமை குறித்து மிகவும் கவலையடைவதாக திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தில் தமிழை தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம், தமிழ் மக்கள் சுமார் 75 வீதத்திற்கும் மேல் வாழ்கின்றனர். அதேபோல ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திற்கு சமூகமளிக்கும் அதிகமான அதிகாரிகளும் தமிழ் மொழி பேசுவோராக உள்ளனர்.

இந்நிலையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் அதிகமான விடயங்கள் சிங்கள மொழியிலேயே முன்னெடுக்கப்படுகின்றன. சிங்கள தமிழ் உரைபெயர்ப்பாளர்கள் எவரும் நியமிக்கப்பட்டிருக்கவுமில்லை. இதனால் பல அதிகாரிகள் தமது கருத்துக்களை சரியாக முன்வைப்பதில் இடர்பாடுகளை அனுபவிப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் இருமொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. உரைபெயர்ப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு சமகாலத்தில் உரைபெயர்ப்புச் செய்யும் வசதிகள் செய்யப்பட்டன. இதனால் யாரும் தமது கருத்துக்களை தெளிவாகச் சொல்லக்கூடியதாகவும், கேட்கக் கூடியதாகவிருந்தது. தற்போது அந்த நிலை மாற்றமடைந்து காணப்படுகின்றது. திருகோணமலை மாவட்டம் தமிழ் மொழிபேசுவோர் அதிகமுள்ள மாவட்டம். இந்த மாவட்டத்திலேயே தமிழ்மொழி புறக்கணிப்படுவது குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன் என்றார்.

இதற்குப் பதிலளித்த அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி, இக் குறைபாட்டை நானும் உணர்கின்றேன். தவறு இடம்பெற்றுள்ளமை தெரிகின்றது. அடுத்து வரும் கூட்டங்களில் இதுபோன்ற குறைபாடுகள் வராது கவனித்துக் கொள்வேன் எனத் தெரிவித்தார்.

## பிளாஸ்டிக் பாவனை விழிப்புணர்வை ஏற்படுத்த

# பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கவுள்ள புனித மைக்கேல் கல்லூரி மாணவர்கள்

(புதிய காத்தான்குடி தினகரன், கல்லடி குறூப், மாளிகைக்காடு குறூப் நிருபர்கள்)





மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் இணைந்து பிளாஸ்டிக் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பாக்கு நீரிணை நீந்திக் கடந்து மீண்டுமொருமுறை சாதனையை நிலைநாட்டவுள்ளதாக கல்லூரி அதிபர் அன்ரன் பெனடிக் ஜோசப் தெரிவித்தார்.

இதுதொடர்பில் கடந்த 16ஆம் திகதி புனித மிக்கேல் கல்லூரியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

புனித மிக்கேல் கல்லூரியின் 150 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 23ஆம் திகதி புனித மைக்கேல் கல்லூரியின் சிரேஷ்ட சாரண மாணவர்கள் மூவர் இணைந்து இந்தியாவின் தனுஷ் கோடியிலிருந்து பாக்கு நீரிணை குறுகிய நேரத்திற்குள் கடந்து தலைமன்னாரை வந்தடைந்து மீண்டுமொருமுறை சாதனை நிலைநாட்டவுள்ளனர்.

பாக்கு நீரிணையை கடக்கவிருக்கும் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் மூன்று மாணவர்களுள், இருவர் சகோதரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிரேஷ்ட சாரணர்களான புளோரிங்டன் டயன்ஸ்ரித், புளோரிங்டன் டயன் பிறிடோ மற்றும் இருதயநாதன் கெல்வின் கிசோ ஆகியோரே பிளாஸ்டிக் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இச்சாதனையை நிலைநாட்டவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஊடக சந்திப்பில் பாடசாலை அதிபர் அன்ரன் பெனடிக் ஜோசப், மாவட்ட சாரணர் ஆணையாளர் விவேகானந்தா பிரதீபன், சாரண ஆசிரியர் இன்னாசி கிறிஸ்டி மற்றும் சாரண மாணவர்கள் உள்ளிட்ட பெற்றோரும் கலந்துகொண்டிருந்ததுடன், அதிபர் மற்றும் சாரண ஆணையாளரினால் இவர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டதுடன், கொடிச்சீலைகளும் வழங்கி வைக்கப்பட்டன.

அதேவேளை மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் பழைய மாணவரும் ஜனாதிபதி விருது பெற்ற சிரேஷ்ட சாரணருமான தவேந்திரன் மதுஷிகன் பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து ஏற்கனவே சாதனை படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மூதூர் உப்புக்காச்சிமடு கிராமத்தில் யானைகள் அட்டகாசம்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட உப்புக்காச்சிமடு கிராம மக்களின் குடியிருப்பு பிரதேசங்களுக்குள் நேற்றுமுன்தினம் காட்டு யானைகள் புகுந்து பயன்தரும் தென்னை, பலா, மா உள்ளிட்ட தோட்டப் பயிரினங்களை சேதப்படுத்தியுள்ளதாக கிராமமக்கள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர். மேலும் யானைகள், பண்வெட்டான், நன்னிக்காடுகளிலிருந்து இறால்குழி ஆற்றைக்கடந்து தினமும் இரவில் இப்பிரதேசத்தில் நடமாடுவதாகவும் இதனால் தாம் வசிக்கும் இடங்களில் நிம்மதியாக இருக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே யானைகளின் வருகை தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர்.

# தென்கிழக்கு பல்கலை பொதுமக்கள் பார்வைக்காக திறந்துவைப்பு!

ஒலுவில் விசேட நிருபர்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 27 வருட பூர்த்தியை சிறப்பிக்கும் முகமாக பல்கலைக்கழக ஒலுவில் வளாகம் எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் பொதுமக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்படவுள்ளதாக, உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

பல்கலைக்கழக ஸ்தாபகர் தினத்தை முன்னிட்டு 350 மில்லியன் ரூபா செலவில் பல்கலைக்கழக உத்தியோகத்தர்களுக்கான 4 மாடிகள் கொண்ட இரு வீட்டுத் தொகுதிகள் திறப்பு விழா, மர நடுகை, மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகள், குறுந்திரைப்பட வெளியீடு, புதிய கண்டுபிடிப்புகள், புத்தக கண்காட்சி மற்றும் விளையாட்டுப் போட்டி என்பன நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார். தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை சமூகமயப்படுத்தி மக்களுடன் இணைக்கும் வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாகவே பொது மக்கள் பார்வைக்கு திறந்துவிடப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பல்கலைகழகத்துக்கு வருகை தருகின்ற பொதுமக்கள் பல்கலைக்கழகத்தின் சகல பீடங்கள், நூலகம் மற்றும் அனைத்து இடங்களையும் பார்வையிட முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகம் பொதுமக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்படுவது வரலாற்றில் இது முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, ஸ்தாபகர் தினத்தை முன்னிட்டு பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள் உள்ளடக்கிய ஒரு அமைப்பினை உருவாக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக ஸ்தாபகர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரபின் நினைவுப் பேருரையும் நடைபெறவுள்ளது.



## சி.சி.டி.வி கெமராக்கள் ஊடாக

# கல்முனை வைத்தியசாலைகளின் நடவடிக்கைகள் தீவிர கண்காணிப்பு

(பாலமுனை விசேட நிருபர்)



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள 13 பிரதேச வைத்தியசாலைகளின் நடவடிக்கைகளை கண்காணிக்கும் பொருட்டு அந்த வைத்தியசாலைகளில் பொருத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி கெமராக்கள் வலையமைப்பு பிராந்திய பணிமனையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய வலையமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் (17) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் சுகாதார தகவல் முகாமைத்துவ பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஐ.எம்.முஜீபினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் பிரதிப் பணிப்பாளர் எம்.பி.அப்துல் வாஜித், பிரிவுத் தலைவர்கள், கணக்காளர் உள்ளிட்ட பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு மாகாண உள்ளூராட்சி சிற்றூழியர்கள் நிரந்தர நியமனம் கோரி ஆர்ப்பாட்டம்




(கிண்ணியா,ரொட்டவெவ குறூப், தம்பலகாமம் குறூப் நிருபர்கள்)

கிழக்கு மாகாண உள்ளூராட்சி சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க கோரி முதலமைச்சர் செயலகத்துக்கு முன்னால் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்கு மாகாணத்தில் நீண்டகாலமாக சிற்றூழியர்களாக கடமையாற்றும் உத்தியோகத்தர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த 150ற்கு மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர். இதன்போது 'வேண்டும் வேண்டும் நிரந்தர நியமனம் வேண்டும்' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருசிலர் முதலமைச்சர் செயலகத்தில் கடமையாற்றும் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டு மகஜர் ஒன்றை கையளித்தனர். இவர்கள் பிரதான வீதி ஊடாக ஆளுநர் அலுவலகத்தை நோக்கி நடைபவணியாக சென்றனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமிய வீதி அபிவிருத்தித்திட்டம் ஆரம்பம்

(ஏறாவூர் சுழற்சி,மட்டக்களப்பு குறூப்,புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமிய வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப்பிரிவுகளில் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் (17) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் நடைபெற்றது.

இதில் மாவட்ட பொறியியலாளர், பிரதேச செயலாளர்கள், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மாவட்டத்திலுள்ள கோறளைப் பற்று வடக்கு (வாகரை), கோறளைப் பற்று (வாழைச்சேனை), கோறளைப் பற்று தெற்கு (கிரான்) மற்றும் ஏறாவூர்ப் பற்று (செங்கலடி) ஆகிய நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் கிராமிய வீதிகள் இவ்அபிவிருத்தித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு தற்பொழுது வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# மன்னாரில் கடலட்டை பிடிக்க புதிய நடைமுறை பரிசீலிக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ்

**மன்னார் குறூப் நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் கடலட்டை பிடிக்கும் கடற்றொழிலாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய சட்டம் தொடர்பான கடித விவகாரத்தில் எவ்விவித உண்மையும் இல்லையென்பதுடன், இது சில ஊடகங்களினால் திட்டமிட்டு பரப்பப்படும் பிரசாரமென, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஆயினும், இந்த விவகாரம் தொடர்பாக தான் பரிசீலிப்பதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக தெரியவருவதாவது,

மன்னாரில் கடலட்டை பிடியில் ஈடுபடுபவர்கள், ஒருமுறை தொழிலுக்கு சென்றால், கடலட்டைகளை எண்ணிப் பிடிக்க வேண்டுமென்ற புதிய சட்டம் தொடர்பாக மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் செயலாளர் நாயகம் எஸ்.ஜே.கஹவத்த கடந்த வெள்ளியன்று (13) கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.



இந்த விவகாரம் தொடர்பாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"மன்னாரில் கடலட்டை பிடிப்பதற்கான Skin Diving அனுமதிப் பத்திரத்துடன் கடற்றொழிலுக்கு செல்லும் கடற்றொழிலாளர் ஒருவர் அதிகபட்சமாக 150 கடலட்டைகளை மாத்திரமே பிடிக்க முடியும். Scuba Diving அனுமதிப்பத்திரம் வைத்திருக்கும் கடற்றொழிலாளர் ஒருவர் 250 கடலட்டைகளை மாத்திரமே பிடிக்க முடியும். இந்த விவகாரத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்" என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாங்குளம் ரயில் நிலைய வசதிகளை விஸ்தரித்தால் மக்கள் நன்மையடைவர்

## முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர்

**ஓமந்தை விசேட நிருபர்**

மாங்குளம் ரயில் நிலையத்தில் ஆசன பதிவு மற்றும் கடுகதி ரயில் தரித்துச் செல்லும் வசதிகளை விஸ்தரிக்கும் பட்சத்தில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் மிகவும் நன்மையடைவார்களென, அம்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

பயணிகளின் நன்மை கருதி மாங்குளம் ரயில் நிலையத்தில் நூலகம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியை பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இந்நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்த போது,

"வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில், பெரிய மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் உள்ளதுடன், முல்லைத்தீவில் ஒரேயொரு ரயில் நிலையமாக மாங்குளம் ரயில் நிலையமே உள்ளது. அத்துடன், ஏனைய ரயில் நிலையங்களுடன் ஒப்பிடுகையில், வசதி மிகவும் குறைந்த ரயில் நிலையமாக மாங்குளம் ரயில் நிலையம் உள்ளது.

மாங்குளம் ரயில் நிலையத்தில் ஆசன பதிவை மேற்கொள்ளும் வசதி இல்லாமையினால், முல்லைத்தீவு மக்கள் ஆசன பதிவுக்காக கிளிநொச்சி அல்லது வவுனியாவுக்கு சென்று பதிவை மேற்கொள்ள வேண்டும். இதேவேளை, மாங்குளம் ரயில் நிலையத்தில் சாதாரண ரயில்கள் தரித்துச் செல்கின்ற போதிலும், கடுகதி ரயில்கள் தரித்துச் செல்லும் வசதியில்லை.

ஆகையினால், மாங்குளம் ரயில் நிலையத்தில் இந்த இரு வசதிகளையும் விஸ்தரிக்கும் பட்சத்தில் முல்லைத்தீவு மக்கள் மிகவும் நன்மையடைவார்கள்" என்றார்.

# கிளிநொச்சியில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

கிளிநொச்சியில் கேரள கஞ்சா போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் ஒருவர் பொலிஸாரினால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (17) மாலை கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பாக விசேட அதிரடிப்படையினரின் கிளிநொச்சி முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணேஷ்புரம் வீதியில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு, கேரள கஞ்சா சுமார் 5 கிலோகிராமுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், கஞ்சா விற்பனையினால் ஈட்டப்பட்டதாகக் கருதப்படும் 279,000 ரூபாவும் சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

3 பொதிகளாக பொதி செய்யப்பட்ட கஞ்சாவுடன் சந்தேக நபர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்ட போதே கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். மருதங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய சந்தேக நபரை மேலதிக விசாரணைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் விசேட அதிரடிப்படையினரின் கிளிநொச்சி முகாம் அதிகாரிகள் ஒப்படைத்துள்ளனர்.

# வடக்கின் உதயம்

## விசுவமடுவில் சிரட்டைக்கரி உற்பத்திக்கான சூளை அமைக்க அடிக்கல் நடுகை



**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு, விசுவமடு பிரதேசத்திலுள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் சிரட்டைக் கரி உற்பத்திக்குரிய சூளையொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (18) நடைபெற்றது.

அத்துடன், விளக்குமாறு மற்றும் தும்புத்தடி உற்பத்திகளை மேலும் அதிகரிக்கும் நோக்கில் அவற்றுக்கான இயந்திரங்கள் சிறு கைத்தொழில் சங்கங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது, தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

விசுவமடு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கட்டளை அதிகாரி லெப்டினன்ட் கேணல் சி.சோமபால தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றதுடன், இதில் பலர் கலந்துகொண்டனர்.

## சிறந்த முறையில் தோட்டம் அமைத்த மயிலணி சைவ பாடசாலைக்கு பணப்பரிசு



**கோப்பாய் குறூப் நிருபர்**

சிறந்த முறையில் தோட்டத்தை பாடசாலை வளாகத்தில் அமைத்த மயிலிணி சைவ வித்தியாலயம் 150,000 ரூபா பணப்பரிசைப் பெற்றது.

முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரியில் கடந்த வாரம் நடைபெற்ற விவசாயக் கண்காட்சியின் போதே, மயிலணி சைவ வித்தியாலயத்துக்கு இப்பணப்பரிசு கிடைத்தது.

சிறந்த முறையில் தோட்டத்தை பாடசாலை வளாகத்தில் அமைத்ததுடன், மாணவர்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகாட்டல் மேற்கொண்டமை உள்ளிட்ட விடயங்களை கவனத்திற்கொண்டு மயிலணி சைவ வித்தியாலயத்துக்கு பணவவுச்சர் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர் சங்க கூட்டம்





உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் கொழும்புக்கிளை கூட்டம், அதன் தலைவர் எஸ். தில்லா தலைமையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை (14) மாலை நடைபெற்றது. உைடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் முன்னாள் மாணவரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ஸ்ரீசற்குணராஜா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். இதன்போது, சங்கத்தின் நடப்பு வருடத்துக்கான புதிய தலைவராக ஸ்ரீராமநாதன் தெரிவு செய்யப்பட்டார். இதேவேளை, யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டமையை கௌரவித்து பேராசிரியர் எஸ்.ஸ்ரீசற்குணராஜாவை பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன், விருது வழங்கியும் கௌரவித்தனர்.

## நெடுந்தீவில் கைதான

# தமிழக கடற்றொழிலாளர் 12 பேருக்கு விளக்கமறியல்

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழக கடற்றொழிலாளர்கள் 12 பேரை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த கடற்றொழிலாளர்கள் 12 பேரையும் கடந்த சனிக்கிழமை (14) இரவு கைது செய்த கடற்படையினர், கடற்றொழிலாளர்களின் மூன்று படகுகளையும் கைப்பற்றினர்.

இதனைத் தொடர்ந்து, மயிலிட்டி துறைமுகத்துக்கு இவர்களை அழைத்து வந்ததுடன், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தினரிடம் இவர்களை கடற்படையினர் ஒப்படைத்தனர்.



இந்நிலையில், இவர்களை நீதிமன்றத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) முன்னிலைப்படுத்திய போதே, இந்த விளக்கமறியல் உத்தரவை நீதிமன்றம் வழங்கியுள்ளது.

# யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் பிறந்தநாள் கொண்டாடிய 7பேர் கைது

**யாழ். விசேட நிருபர்**

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் கடந்த வாரம் பிறந்தநாள் கொண்டாடிய குற்றச்சாட்டில் மேலும் ஐந்து பேரை நேற்று புதன்கிழமை (18) பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்கு 50 க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களில் 150 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் சென்றதுடன், அவர்களில் ஒருவரின் பிறந்தநாளை கேக் வெட்டி ஏனைய இளைஞர்கள் கொண்டாடியிருந்தனர். அத்துடன், இந்த பிறந்தநாள் கொண்டாட்டத்தை டிக்டொக் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களிலும் இவர்கள் பகிர்ந்திருந்தனர்.

பொது இடத்தில் நடைபெற்ற இந்த பிறந்தநாள் கொண்டாட்டம் வீதியில் சென்ற மற்றும் பேருந்து நிலையத்தில் இருந்தவர்களுக்கு இடையூறை ஏற்படுத்தியதுடன், ஒருவித அச்சத்தையும் உண்டு பண்ணியதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.



இந்நிலையில் சட்டவிரோதமாக கூட்டம் கூடி, பிறந்தநாளைக் கொண்டாடி, மக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இருவரை கடந்த சனிக்கிழமை (14) பொலிஸார் கைது செய்து, நீதவான் முன்னிலையில் முற்படுத்திய போது, அவ்விருவரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதன் பின்னர், நேற்றையதினம் ஐந்து பேரை கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

# சென். மேரிஸ் பாடசாலையில் ஆசிரியர் தின நிகழ்வு



**தலைமன்னார் விசேட நிருபர்**

பேசாலை சென். மேரிஸ் வித்தியாலயத்தில் ஆசிரியர் தினமும் சேவைநலன் பாராட்டு விழாவும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (17) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பெற்றோரின் பங்களிப்புடன் இவ்விழா நடத்தப்பட்டதுடன், இதில் மேற்படி பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் மன்னார் மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளிலும் ஆசிரியர் தினம் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகின்றன.

# தேசிய வாசிப்பு மாத போட்டிகள்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

தேசிய வாசிப்பு மாதத்தையிட்டு பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் சாவகச்சேரி பிரதேச சபையினுடைய வரணி பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படுகின்றன.

இன்று வியாழக்கிழமை (19) காலை 9.00 மணிக்கு தரம் 03 மாணவர்களுக்கு சொல்லாக்கப் போட்டியும் முற்பகல் 11.00 மணிக்கு தரம் 04 மாணவர்களுக்கு திருக்குறள் போட்டியும் நடைபெறுவதுடன், வரணி பொது நூலக மண்டபத்தில் இப்போட்டிகள்நடைபெறுமென,ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்று புதன்கிழமையும் (18) பாடசாலை மாணவர்களுக்கு பல்வேறு போட்டிகள் நடைபெற்றதாகவும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# மலையகத்தின் கல்வி, சமூகம், சுற்றுச்சூழல் அபிவிருத்தி நோக்கிய செயற்திட்டம் ஒரு நோக்கு

## காவேரி கலா மன்றம், கிளிநொச்சி றொட்ரிக் கழகம் திட்டங்களுக்கு பூரண பங்களிப்பு



காவேரி கலா மன்றம் மற்றும் கிளிநொச்சி நகர் றொட்ரிக் கழகத்தின் அனுசரணையுடன் 'குறிஞ்சி மலர்' என்னும் தொனிப்பொருளில் மலையகத்தில் கல்வி, சமூகம் சுற்றுச் சூழல் அபிவிருத்தி நோக்கிய செயற்றிட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு இரத்தினபுரி புனித ஜோக்கிம் தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் டி. எம். ஈ ரோய் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது விசேட அம்சமாக காவேரிக் கலா மன்றத்தினால் நிர்மாணிக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு வகுப்பறை கூடம் திறப்பு நிகழ்வும் மற்றும் இரத்தினபுரி புனித ஜோக்கிம் தமிழ் மகா வித்தியாலயத்தின் பெற்றோர் ஒருவரின் தோட்டத்தில் தேயிலை மரம் நடுதல் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஓய்வு பெற்ற நீதிபதி ஜெனிவர் சுமித், செயற்கை நுண்ணறிவு வகுப்பறை கூடத்தை மாணவர்களின் பாவனைக்காக திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்ட கிளிநொச்சி நகர் றொட்ரிக் கழகத்தின் தலைவி வனிதா சிவநேசன், இரத்தினபுரி புனித ஜோக்கிம் தமிழ் மகா வித்தியாலயத்தின் பெற்றோர் ஒருவரின் தோட்டத்தில் தேயிலை மரம் நடுதலை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி றொட்ரிக் கழகத்தின் சமூகப் பிரிவின் தவிசாளர் அதிபர் அ. பங்கையற் செல்வன், கிளிநொச்சி றொட்ரிக் கழகத்தின் பொருளாளர் ராமச்சந்திரன் ஜயசீலன், றொட்ரிக் கழகத்தின் செயலாளர் கஜேந்திரகுமார், ரதி கஜேந்திரகுமார் உள்ளிட்டவர்கள் பங்கேற்றனர்.

இரத்தினபுரி புனித ஜோக்கிம் தமிழ் மகா வித்தியாலய அதிபர் டி. எம். ஈ. ரோய் இந்நிகழ்வு குறித்து கருத்து தெரிவிக்கையில், புனித ஜோக்கிம் தமிழ் மகா வித்தியாலயமானது 1936 ஆம் ஆண்டு ஒரு தோட்டப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து 1977 ஆம் ஆண்டில் அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது. அவ்வாறு பாடசாலையின் முன்னேற்றம் அடைந்துவந்த நிலையிலே 2000 ஆம் ஆண்டளவில் க. பொ. த உயர் தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதோடு 2015 ஆம் ஆண்டில் உயர் தர கலைப்பிரிவும் ஆரம்பிக்கப்பட்டது. இப்பாடசாலையானது மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற பெற்றோர்களின் பிள்ளைகள் கல்வி கற்கின்ற ஒரு பாடசாலையாகும்.



இப்பாடசாலை கல்விச் செயற்பாடுகளிலும் இணைப்பாட விதான செயற்பாடுகள் உட்பட பாடசாலை அபிவிருத்திப் பணிகளிலும் முன்னேற்றம் கண்டு வருகின்றபோது, காவேரிக் கலா மன்றம் மற்றும் கிளிநொச்சி நகர் றொட்ரிக் கழகம் எமது பாடசாலையின் மீது கவனம் செலுத்தி பாடசாலையின் சில தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. அதன் அடிப்படையில் முதலாவதாக எமது பாடசாலை மாணவர்களுக்கு சிறந்த குடிநீரைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக அவர்களினால் முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டம் மிகவும் முக்கியமானதாகும்.

இச்செயற்றிட்டமானது ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு வேறாகவும் இடைநிலைப் பிரிவு மாணவர்களுக்கு வேறாகவும் இரண்டு பிரிவுகளாக அந்தக் குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இப்போது நிறைவடைந்துள்ளது. இச்சந்தர்ப்பத்தில் எமது பாடசாலைக்கு செயற்கை நுண்ணறிவுக் கற்கை கூடத்திற்கான உபகரணங்கள் மாணவர்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

எமது பாடசாலை இவ்வாறான ஓர் ஆரம்ப கட்ட நிலையில் இருந்து இப்பொழுது ஓர் உயர்ந்த நிலையை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு இந்த காவேரிக் கலாமன்றம், நலன்விரும்பிகள், கிளிநொச்சி றொட்ரிக் கழகம் உள்ளிட்ட அனைவரும் இதற்கு உதவி செய்து வருகின்றனர்.

இன்றைய நிகழ்வில் லண்டன் நாட்டில் உள்ள ஓய்வு பெற்ற நீதிபதி ஜெனிவர் சுமித் அவர்களின் கரங்களினால் செயற்கை நுண்ணறிவு கற்கை கூடம் திறந்து வைக்கப்பட்டது. காவேரிக் கலா மன்றத்தின் சமூக செயற்பாடு என்ற அடிப்படையில் இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர் ஒருவரின் பெற்றோருக்கு வருமானத்தை உயர்த்தும் முகமாக அவரது சொந்தக் காணியில் தேயிலைக் கன்றுகளைப் பயிரிடுவதற்கு காவேரிக் கலா மன்றமும் கிளிநொச்சி றொட்ரிக் கழகமும் இணைந்து அந்த மரக் கன்றுகளை பெற்றுக் கொடுப்பதற்கான பணிகளையும் செயற்படுத்துவதற்கான உதவிகளையும் செய்துள்ளன. இது நல்லதொரு செயற் திட்டமாகும்.

அந்த தேயிலைத் தோட்டக் காணி எமது பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர் பணம் கொடுத்து வாங்கிய சொந்தக் காணியாகும். அது ஒன்றரை ஏக்கர் காணி. இக் காணியினை அவர்கள் தோட்டத்தில் வேலை செய்து பெற்ற ஊதியத்தின் மூலம் சேகரித்த பணத்தினால் பெற்றுக் கொண்டதாகும். அவர்கள் தங்களுடைய பணத்தை சிறந்த முறையில் முதலீடு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

மேற்படி திட்டம் பாடசாலைக்கும் எமது சமூகத்திற்கும் பெரும் உதவியாக இருக்கப் போகின்றது. எதிர்காலத்தில் அதில் இருந்து கிடைக்கின்ற வருமானத்தின் மூலம் தங்களது குடும்பத்தையும் வளர்ச்சியடையச் செய்யவும் தங்களது பிள்ளைகளையும் நல்ல நிலையில் கல்வி கற்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்யவும் இத்திட்டம் சிறந்த பயனளிக்கும். அதேவேளையில் பெற்றோர் எதிர்வரும் காலங்களில் சிறந்த முறையில் பாடசாலைக்கும் பங்களிப்புச் செய்யக் கூடியதாகவும் அது வளர்ச்சி பெற்று காணப்படும்.



இந்த செயற்திட்டம் மிகவும் வரவேற்கத்தக்கது. எமது சமூகத்தில் இருக்கின்ற இன்னும் பலர் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள் இருந்தால் அவர்களுடைய பணத்தை சரியான முறையில் முதலீடு செய்து எதிர்வரும் காலங்களில் சிறந்த ஒரு பயனாளிகளாக வரக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளலாம். எனவே, இந்தப் பாடசாலை இந்தக் காவேரிக் கலா மன்றம், றொட்ரிக் கழகம் ஆகியன இணைந்து செயற்படுகின்ற பொழுது எதிர்காலத்தில் எமது மாணவர்கள் சிறந்த கல்விமான்களாக வருவதற்குரிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன. எனவே இவ்வாறான செயற்பாடுகள் பாடசாலைக்கு வந்து கிடைப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் மேற்படி உதவிய இரு அமைப்புகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், எங்கள் பாடசாலையில் கற்ற பிள்ளைகள் ஐந்து பேர் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று கொண்டிருக்கிறார்கள். 2017 ஆம் ஆண்டு முதலில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் முதல் 2018, 2019, என்று தொடர்ச்சியாக இப்படி பரீட்சைக்கு தோற்றியவர்களில் ஐந்து பேர் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

இப்படி இந்த மாணவர்களைக் கொண்டு அவர்களுடைய குடும்பத்தையும் வளப்படுத்தி எடுத்தால் எதிர்காலத்தில் இப்பிரதேசத்திலுள்ள மாணவர்கள் பெற்றோர்கள் பிள்ளைகள் இன்னுமின்னும் தோட்ட வேலைகளை எதிர்பார்த்து இருக்காமல் சுயமாகவே தோட்டங்களைச் செய்து அல்லது வேறு ஏதோ தொழில் துறைகளில் ஈடுபாடு கொண்டு சுபீட்சமான வாழ்க்கை முறையொன்றை அவர்கள் அமைத்துக் கொள்வார்



கள். இந்த இடத்தில் ஓர் அதிபராக மட்டும் இல்லாமல் எமது சமூகத்திற்கு கல்வியோடு காவேரிக் கலா மன்றம், றொட்ரிக் கழகம் போன்ற அமைப்புக்களின் ஊடாக ஏதாவது உதவிகளைப் பெற்றுக் கொடுத்து எமது பாடசாலையினையும் எமது பாடசாலை சமூகத்தையும் உயர்த்த வேண்டும் என்ற தேவைப்பாடு இருக்கிறது என்ற உணர்வுடன் செயற்பட்டுக் கொண்டு இருக்கின்றேன். நாம் இன்னும் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அந்த சூழலில் இருந்து நாங்கள் வெளியே வர வேண்டும்.

இன்னும் நாம் லயன் அறைகளிலேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இத்தகைய சூழல் மலையக மக்களின் சமூக வளர்ச்சிக்கு ஓர் ஆரோக்கியமானதாக இல்லை. இந்த நாட்டில் ஏனைய மக்கள் வாழும் நிலையைப் போன்று எமது மலையக சமூகமும் சம நிலையோடு வாழ வேண்டும். இவை என்னுடைய எதிர்பார்ப்பு ஆகும். இதற்காக உதவி செய்கின்ற காவேரிக் கலா மன்றம் கிளிநொச்சி றொட்ரிக் கழகம் ஆகியவற்றின் எதிர்பார்ப்புமாகும்.

செயற்கை நுண்ணறிவு கற்கை கூடத்தின் மூலம் இன்று பாடசாலை மாணவர்கள் நிறைய பயனடைந்து வருகிறார்கள். ஆசிரியர்கள் வராத சந்தர்ப்பத்தில் கூட ஈ தக்சலா, டி.பி. எடிகேசன் குருகுலம் போன்ற கல்வி தொடர்பான நிறைய இணையத்தளம் இருக்கின்றன. பிள்ளைகளின் பாடங்கள் தொடர்பான நிறைய



செயற்பாடுகளை உள்ளடக்கிய இணையளத்தளங்கள் உள்ளன. பாடசாலைக்கு ஆசிரியர் வராத சந்தர்ப்பத்தில் கூட மாணவர்களுக்கு அவருடைய அந்தப் பாடத்தை போதிக்கக் கூடியதாக இருக்கும். பாடசாலைக்கு ஆசிரியர் இல்லாவிட்டாலும் இன்று பிள்ளைகள் படித்துக் கொள்வதற்கான சூழல்கள் ஏற்பட்டுள்ளன. நவீன கல்வி முறையின் மூலம் பிள்ளைகள் கல்வி கற்பதில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர் என்று கூடக் கூறலாம்.

எந்நாளும் வகுப்பறைக்குச் சென்று கல்வி கற்பித்தலை மேற்கொள்ளும் போது கரும்பலகை. வெண்கட்டி. மார்க்கர் போன்றவற்றைக் கொண்டு கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்வதை விட இந்த மாதிரியான புதிய கல்வி நுட்பங்களைப் பாடசாலைக்கு கொண்டு வருவதன் மூலம் மாணவர்களுடைய கல்வியும் வளர்ச்சியடையும் அவர்களும் அதை விரும்பிப் படிப்பார்கள். ஒரு செயற்கை நுண்ணிறவு வகுப்பறை மட்டுமல்ல எல்லா வகுப்பறைகளிலும் செயற்கை நுண்ணிறவு வகுப்பறையாக மாற்றப்பட்டால் இன்னும் சிறப்பாக இருக்கும்.

ஒன்றை மட்டும் வைத்துக் கொண்டு எல்லாப் பிள்ளைகளும் படிக்க இயலாது. எதிர்காலத்தில் சகல வகுப்பறைகளிலும் செயற்கை நுண்ணறிவு வகுப்பறை வருமாக இருந்தால் அது மிகவும் வரவேற்கக் கூடியதாக இருக்கும்.

எமது பாடசாலையின் சுற்று வட்டாரம் மொத்தமாக இரண்டு ஏக்கர் 36 பேர்ச்சஸ் காணி இருக்கிறது. இந்தக் காணியில் இலங்கையிலுள்ள சகல விதமான பழ வகையிலான மரங்கள் நட்டியுள்ளோம். மா, ஜம்பு, நெல்லி, காமரங்காய், தோடை, சீதாப் பழம் இப்படி எல்லா வகையிலான பழ மரங்கள் எங்கள் பாடசாலைத் தோட்டத்தில் நட்டு இருக்கின்றோம்.

இப்பாடசாலைக்கு லண்டனில் இருந்து வருகை தந்த ஓய்வு பெற்ற நீதிபதி ஜெனிவர் சுமித் அவர்களது கையினாலும் ஒரு பலா மரத்தை நட்டியுள்ளோம். எமது பாடசாலையின் சுற்றாடல் மிகவும் அழகானது. பாடசாலை மாணவர்களைக் கவரும் வகையில் சுற்றாடல் அமைந்திருக்கிறது. அதில் மாணவர்களின் பயன்பாட்டுக்காக நிறைய பழ மரங்களும் இருக்கின்றன.

எமது பாடசாலையில் வகுப்பறைக் குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆரம்ப வகுப்பு முதல் உயர் தர வகுப்புக்களில் பிள்ளைகள் படிக்கின்றார்கள். தரம் 4 இல் இரு வகுப்புக்கள் உள்ளன. தரம் 5 இல் இரு வகுப்புக்கள் உள்ளன. தரம் 8 இல் இரு வகுப்புக்கள் உள்ளன. இப்படி வருகின்ற போது 2024 ஆம் ஆண்டில் சுமார் 5 வகுப்புக்கான வகுப்பறைப் பற்றாக் குறை காணப்படுகிறது. எமது பாடசாலையில் முன்னால் அமைந்துள்ள கட்டடம் 1936 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டடமாகும். அது தோட்டத்தின் கட்டடம். இன்னும் அப்படியே இருக்கிறது. அது இல்லாமல் அரசாங்கத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட பெரிய மூன்று கட்டட வளங்கள் இருக்கின்றன. விஞ்ஞான ஆய்வு கூடமும் அமைந்துள்ளன. எதிர்காலத்தில் பிள்ளைகள் நன்கு வசதியாக இருந்து கற்றுக் கொள்ள வேண்டுமாயின் அவர்களுக்கு வகுப்பறைக் கட்டட வசதிகள் வேண்டும்.

இருப்பினும், ஓர் ஒழுங்கான கணினி அறை இல்லை. அதனை மேற்கொள்வதற்கான உத்தியோகத்தர் இல்லை. பௌதீக வளங்களில் மிக முக்கியமாக வகுப்பறைக் கட்டடம் அவசியமாக இருக்கிறது. ஒரு வாசிகசாலை இல்லை. கணனி தகவல் தொழில் நுட்ப ஆய்வு கூடம் இல்லை. இவை போன்ற வளங்கள் கிடைக்கப் பெறுமாயின் மாணவர்களுடைய கல்வி செயற்பாடுகள் முன்னேற்றம் காணும்.

2022 ஆம் ஆண்டில் எமது பாடசாலையில் ஆசிரியர் வெற்றிடங்களாகக் காணப்பட்ட எல்லாப் பாடங்களுக்கும் வெற்றிடங்கள் பூர்த்தியாகியுள்ளன. உயர் தர வகுப்புக்கு மட்டும் இரு ஆசிரியர்கள் இல்லை. மற்றைய எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். எதிர்காலத்தில் எமது பாடசாலை நல்ல பெறுபேறுகளை பெற்றுத் தரும். சிறந்த ஆசிரியர் இருக்கின்றபடியால் எதிர்வருகின்ற ஐந்து வருடத்தில் நல்லதொரு முன்னேற்றத்தை எமது பாடசாலையின் மூலம் நாங்கள் எதிர்பார்க்கலாம்.

காவேரிக் கலா மன்றத்தின் வணபிதா யோசுவா அடிகளார் சிறந்த சிந்தனையாளர். சிறந்த சமூகப் பற்றுமிக்கவர். எந்தவொரு செயற்பாட்டையும் நன்கு திட்டமிட்டு செய்யக் கூடிய ஒருவராகக் காணப்படுகின்றார். அவர் எதை கொடுத்தாலும் அதற்கு முன் குறித்த அந்த சமூகத்திற்கு என்ன கிடைக்கும். அதனால் அவர்கள் என்ன பலனைப் பெறுவார்கள். அவர் அதை எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஒரு அடிப்படையிலான நீண்ட காலத் திட்டத்துடன் தான் ஈடுபடுவார். எமது பாடசாலைக்கு ஏற்கெனவே ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் தான் அவர் அறிமுகமானார். அண்மையில்தான் எமது பாடசாலைக்கு அவர் விஜயம் செய்தார். நிறையச் செயற்பாடுகளை சிறந்த திட்டத்தோடு செய்பவர் என்று கூறலாம். அவருடைய உதவியினால் எமது பாடசாலையின் எதிர்காலம் இன்னும் சிறப்பாக அமையுமென்று எதிர்பார்க்கின்றேன்.

**★ கிளிநொச்சி நகர் றொட்ரிக் கழகத்தின் தலைவி திருமதி வணிதா சிவநேசன் உரையாற்றும் போது;**

பின்தங்கிய பிரதேசத்தில் வாழும் பிள்ளைகள் எதிர்காலத்தில் சிறந்த முறையில் முன்னேற்றத்தைக் கண்டு கொள்ள வேண்டுமாயின் சிறந்த பாடசாலைகள் அமைந்திருத்தல் வேண்டும். அந்த வகையில் இங்கு சிறந்து பாடசாலை அமைந்துள்ளமை மிக முக்கியமான விடயம். இப்பாடசாலையில் கல்வி கற்கின்ற ஒவ்வொரு பிள்ளைகளும் நற்பெயரையுடைய நல்ல பிள்ளைகளாக வளர வேண்டும். மலையக சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக இருத்தல் வேண்டும். பெற்றோர்கள் இன்னும் தோட்டத்தின் லயன் அறைகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்ற எண்ணத்தை மறந்து இவர்கள் கல்வியில் முன்னேறி சமூகத்திற்கு பெரும் பங்காற்ற வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**★ கிளிநெச்சி நகர் றொட்ரிக் கழகத்தின் சமூக சேவைப் பிரிவின் தவிசாளர் அதிபர் அ. பங்கையற் செல்வன் உரையாற்றும் போது;**

இப்பாடசாலை மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவுக் கற்கை நெறி வகுப்பறை கிடைக்கப் பெற்றமை மிகவும் முக்கியமான அம்சமாகும். எதிர்காலத்தில் எமது பாடசாலைப் பிள்ளைகள் நிறையத் தேடிப் படிப்பதற்கான வசதி கடினமான நிலையிலுள்ள பிள்ளைகளுக்கு கிடைத்துள்ளமை மிகவும் பயனுள்ளதாக அமையப் போகின்றது. இதனைக் கொண்டு சகல மாணவர்களும் பயனடைய வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.



இக்பால் அலி



மூவின மக்களினதும் நல்லிணக்கத்தை மேம்படுத்தும் முகமாக முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை அண்மையில் தீகவாப்பிய ரஜ மகா விகாரதிபதி மஹஓய சோபித்த தேரரை சந்தித்து இனங்களுக்கிடையில் ஐக்கியத்தையும், புரிந்துணர்வுகளையும் ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளதுடன் மகஜரும் கையளிக்கப்பட்டது.
(படம் திராய்க்கேணி தினகரன் நிருபர்)



ஸ்ரீ துர்கா தேவியின் வழிபாடுகள் நேற்றுமுன்தினம் முதல் ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
(படம்; காரைதீவு குறூப் நிருபர்)

# அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் மனநல தினநிகழ்வு

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

நவீனகாலத்தில் அதிகளவானோர் உளநல பாதிப்புகளை சந்தித்துவருவதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டச் செயலக உளவளத்துணை பிரிவு ஏற்பாடு செய்த மனநல தின நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சர்வதேச ரீதியில் இன்று பேசப்படும் விடயமாக உளநல பாதிப்பு அல்லது மனஅழுத்தம் முக்கியத்துவம் பெறுகின்றது. தற்காலத்தில் அதிகமானவர்கள் உளநலனை

இழந்து, வாழ்க்கையை இழந்து பரிதவிக்கின்றனர். ஒரு மனிதன் எவ்வளவுதான் செல்வச் செழிப்புடன் வாழ்ந்தாலும் அவனது உள்ளம் பாதிக்கப்படாது சீராக இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் வாழ்வின் அர்த்தத்தை, மகிழ்ச்சியை உணர முடியும். உள்ளத்திற்கு அதிகம் அழுத்தம் கொடுக்காது தங்களது அன்றாட வாழ்வில் கிடைக்கும் வெற்றியையும், தோல்வியையும் சமனாக ஏற்றுக்கொள்ள வேண்டும். வாழ்வில் உளநலன் பாதிப்பற்ற சுகதேகியாக வாழ பழகிக் கொள்ள வேண்டும். ஆனால், தற்காலத்தில் அதிகமானவர்கள் உளநலன் பாதிக்கப்பட்டவர்களாக விளங்குகின்றனர். இதற்கு அவர்களது அன்றாட நடைமுறைகளும். பழக்கவழக்கங்களுமே காரணமாகும். இது கவலைக்குரிய விடயமாகும். பணம் சம்பாதிப்பதற்கு எத்தனையோ வழிமுறைகளை அறிந்து வைத்திருக்கும் மனிதன், உள்ளம் அல்லது மனம் அமைதி பெறுவதற்கான வழிமுறைகளை தெரியாதிருப்பது ஆச்சரியத்துக்குரியதாகும் என அவர் தெரிவித்தார். இந்நிகழ்வில், அக்கரைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் ராஷிட் யஹ்யா மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# இறக்காமம் காணிப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

**(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)**

இறக்காமம் பிரதேச செயலகப்பிரிவில் மிக நீண்டகாலமாக இருந்துவரும் காணி அனுமதிப்பத்திரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். றஸ்ஸானின் வழிகாட்டலில் துரிதகதியில் தீர்வு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில், இறக்காமம் – 08 மற்றும் வரிப்பத்தான்சேனை – 02 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் நீண்டகாலமாக குடியிருந்து வருபவர்களின் காணிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கக்கோரி பலரும் விண்ணப்பித்துள்ளனர். அதற்கமைய இது தொடர்பான கலந்துரையாடலொன்று பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். றஸ்ஸான் தலைமையில் கடந்த 16ஆம் திகதி பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், காணி உத்தியோகத்தர்களான என்.எல்.எம். மாஹிர், ஜீ.என்.பி சுரஞ்சி சிறிதாச, காணிப் பிரிவு உத்தியோகத்தர்களான காணி வெளிக்களப் போதனாசிரியர் எம்.பி. சாதிக், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை.எம்.சில்மி மற்றும் கிராம உத்தியோகத்தர்களான எம்.ஏ.சி. உஸ்மியா, எம்.சதீலா பர்வின் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## நெல்லூர் கிராமம்

# காட்டு யானைகள் உட்புகுந்து இரு வீடுகள் சேதம்

**(கல்லடி குறூப்நிருபர்)**

மட்டக்களப்பு ஆயித்தியமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆயித்தியமலை வடக்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நெல்லூர் கிராமத்திற்குள் உட்புகுந்த காட்டு யானைகள் அப்பகுதியிலுள்ள இரண்டு வீடுகளை முற்றாக சேதமாக்கியுள்ளன.

கிராமத்திற்குள் நேற்றுமுன்தினம் (17) அதிகாலை உட்புகுந்த நான்கு காட்டு யானைகள் கிராமத்திலுள்ள பயன்தரும் மரங்களை துவம்சம் செய்ததுடன், கிராமத்திலுள்ள இரண்டு வீடுகளையும் முற்றாக சேதப்படுத்தியுள்ளன.

## தொம்பே பிரதேச சபை

# 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல்

பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக, வழங்குநர்கள் மற்றும் கைத்தொழிற்துறை வேலைகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2023.10.19ஆம் திகதி முதல் 2023.11.20ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான வாரத்தின் அனைத்து வேலை நாட்களிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவிற்காக விண்ணப்பிக்கும் நிறுவனத்தின் அல்லது நபரின் சுய விபரங்களை உள்ளடக்கிய விண்ணப்பமொன்றை நீங்களே தயார் செய்து கொள்ள வேண்டும். இந்த அனைத்து விண்ணப்பங்களும் பதிவுக் கட்டணத்துடன், பதிவுத் தபாலில் 'செயலாளர், தொம்பே பிரதேச சபை, கிரிந்திவெல' என்ற முகவரிக்கு 2023.10.20ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். வழங்குநர் எத்தனை உருப்படிகளையும் வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ளலாம் என்பதுடன் உருப்படியொன்றிற்காக ரூ. 1500.00 (வரிகள் இன்றி) செலுத்துதல் வேண்டும். இதன்பொருட்டு காசுக் கட்டளை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை கிரிந்திவெலயில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து காசோலை மூலம் அல்லது ரொக்கப்பணமாகச் செலுத்துதல் வேண்டும். காசோலை மூலம் பணம் செலுத்தப்படுவதானால் 'தலைவர், தொம்பே பிரதேச சபை' என்ற பெயரில் காசோலை அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024' எனக் குறிப்பிட வேண்டும்.

**அட்டவணை இல. 01**

**(அ) வழங்கல்கள்**

01. அலுவலக உபகரணங்கள் (உருக்கு, பிளாஸ்டிக் மற்றும் மரத்திலான உபகரணங்கள்)
02. காகிதாதிகள்.
03. வீதி விளக்கு தொகுதி மற்றும் அனைத்து மின்சார பராமரிப்பு உபகரணங்கள்.
04. குப்பை வண்டி, சுகாதார உபகரணங்களை வழங்குதல்.
05. கட்டிடப் பொருட்கள் மற்றும் நிறப்பூச்சு வகைகள்.
06. வாகன திருத்தவேலைகள், தகர வேலை, நிறப்பூச்சு போன்றவை.
07. கைத்தொழில் உபகரணங்கள், வீதி உபகரணங்கள் மண்வெட்டி மற்றும் பட்டறை ஆயுதங்கள் வழங்குதல்
08. சீருடைத் துணிகள் மற்றும் காலணிகள்.
09. கொங்கிறீட் ஹியும் குழாய்கள் மற்றும் செப்டிக் தாங்கிகள்
10. அனைத்து வகையான தார் மற்றும் கோலாஸ்
11. ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், கணக்கிடும் இயந்திரம், கணனி இயந்திரம் போன்ற உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல்
12. கிருமிநாசினி பொருட்கள் வழங்குதல்
13. இலொக்ட்ரோணிக் உபகரணங்கள் வழங்குதல்
14. டயர், டியூப், டேபர் மற்றும் வாகன பற்றரி வகைகளை வழங்குதல்
15. விளையாட்டுத்துறை பொருட்கள் வழங்குதல்

**(ஆ) சேவைகள் வழங்குதல்**

01. நொத்தாரிஸ் மற்றும் சட்டத்தரணி சேவைகள்.
02. நில அளவை சேவை.
03. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
04. பட்டறை தொழிலாளிகளின் சேவை.
05. கலி பவுசர்/ நீர் பவுசரை வாடகைக்கு வழங்குதல்
06. தகனச்சாலை திருத்தவேலைகள்
07. வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள் (வாகனம் மற்றும் அலுவலகம்)
08. ஆவணங்களை அச்சிடும் வேலைகள்
09. குப்பை வண்டிகள், சுகாதார உபகரணங்களின் திருத்தவேலைகள்
10. மோட்டார் வாகனங்களின் திருத்தவேலைகள் மற்றும் குஷன் வேலைகள்
11. தட்டச்சு, ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திர திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
12. கணனி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ்
13. அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றல்.
14. மொழிபெயர்ப்புச் சேவைகளை வழங்குதல் (ஆங்கிலம்/ தமிழ்)

**(இ) ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல்.**

ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணம்.

| | | |
|---|---|---|
| 01. 100,000.00 ரூபாவிற்குக் குறைவான ஒப்பந்தங்கள் | ரூ. | 1500.00 |
| 02. 100,001.00 ரூபா முதல் 250,000.00 ரூபா வரை | ரூ. | 2000.00 |
| 03. 250,001.00 ரூபா முதல் 500,000.00 ரூபா வரை | ரூ. | 2500.00 |
| 04. 500,001.00 ரூபா முதல் 1,000,000.00 ரூபா வரை | ரூ. | 3000.00 |
| 05. 1,000,001.00 ரூபாவிற்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள் | ரூ. | 3500.00 |

**பொதுவான நிபந்தனைகள்**

01. முன்னைய வருடத்தில் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்துகொள்ளத் தகைமையற்றவர்கள் என்பதுடன் அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
02. பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பிக்கும் அனைத்து வழங்கல் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தமது வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குபவர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள், அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட வரி நிபந்தனைகளுக்கு மற்றும் சபை சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படல் வேண்டும்.
04. வழங்குநர்கள் குறைந்தபட்சம் 60 நாட்கள் கடன் வசதியை வழங்குதல் அவசியமாகும்.
05. தேவைப்படும் பட்சத்தில் பதிவேட்டிற்குப் புறம்பாகவும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை தொம்பே பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
06. ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு உருப்படிக்கும் வெவ்வேறாக விண்ணப்பித்து குறித்த பதிவுத் தொகையைச் செலுத்துதல் அவசியமாகும்.
07. மேலதிக விபரங்கள் தேவையெனில், 033-2269260 எனும் எமது பொது தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

2023.10.19

**டீ. அஜித் ரணசிங்க,
செயலாளர் மற்றும் தொம்பே பிரதேச சபையின்
அதிகாரம் வாய்ந்த வேலைகளை செயற்படுத்தும்
அதிகாரி.**

லங்கா சதொச LANKA SATHOSA

# கேள்வி அறிவித்தல்

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

## கூட்டுறவு மொத்தவிற்பனைத் தாபனத்திடம் உள்ள பயன்படுத்தப்பட்ட லொறி வண்டிகளை விற்பனை செய்தல்

விலைமனு இலக்கம் : LSL/PRO/09/09/Lorries-CWE/2023

கூட்டுறவு மொத்தவிற்பனைத் தாபனத்திடம் (சதொச) உள்ள பயன்படுத்தப்பட்ட ஓட்ட முடியுமான நிலையில் இருக்கும் லொரி வண்டிகளை வாங்குவதற்கு ஆர்வம் காட்டுகின்ற வர்த்தக நிறுவனங்கள் மற்றும் நபர்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

லொரி வண்டிகளின் விபரம் மற்றும் குறித்த கேள்வி விண்ணப்பங்களை லங்கா சதொசவின் உத்தியோகபூர்வ இணையதளமான www.lankasathosa.org இற்கு பிரவேசித்து தரவிறக்கம் செய்வது அல்லது கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு வந்து 2023 ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் மாதம் 01 ஆம் திகதி வரையான காலத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

**லங்கா சதொச லிமிடெட் தலைமை அலுவலகம்
03ஆவது மாடி, பெறுகைப் பிரிவு,
இலக்கம் 27,
சதொச பொதுச்செயலாளர் கட்டிடம்,
வொக்சோல் வீதி,
கொழும்பு 02.**

விற்பனைக்கு உள்ள லொரி வண்டிகள் 2023 ஒக்டோபர் மாதம் 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் இலக்கம் 105, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு வேலை நாட்களில் (மு.ப. 8.30 - பி.ப. 4.30 வரை) வந்து குறித்த துறைக்கு பொறுப்பான அதிகாரியின் முன்னிலையில் பரீட்சிக்க முடியும்.

விலைமனுதாரர்கள் ஒவ்வொரு லொரிக்காகவும் ரூப 3,000.00 (மீளளிக்கப்படாதது) கட்டணத்தை செலுத்த வேண்டும். செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நீல நிறத்திலான பிரதியை குறித்த கேள்விமனுவுடன் கீழுள்ளமுகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாத கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விமனுக்களை 2023 நவம்பர் மாதம் 01ஆம் திகதி மு.ப. 11.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுக்களை இடுகின்ற பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "LSL/PRO/09/09/Lorries-CWE/2023" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்பது 2023 நவம்பர் மாதம் 01 ஆம் திகதி மு.ப. 11.00க்கு முடிவுறுவதோடு அந்த சந்தர்ப்பத்திலேயே கேள்விமனுக்களை திறப்பது விலைமனுதாரர்கள் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு கீழுள்ள அதிகாரிகளை அழையுங்கள்.

ஹர்ஷஜித் - 070 1560720 (பரீட்சிப்பதற்கு)
திலினி - 070 1560428 (நிர்வாக செயற்பாடுகளுக்கு)

எந்த ஒரு காரணமும் கூறாது விலைமனுக்களை ஏற்பது/ நிராகரிக்கும் உரிமை தலைவர், லங்கா சதொச லிமிடெட் வசமானது.

தலைவர், லங்கா சதொச லிமிடட்,
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02, இலங்கை

# விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

## பெறுகை அறிவித்தல்

### விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் இணைந்த நிறுவனங்களில் சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரல் – 2023/2024

1. கொழும்பு 07, நிதஹஸ் மாவத்த, இல. 33 இல் அமைந்துள்ள விளையாட்டு கட்டிடத் தொகுதி
   - பழைய விடுதி, அதனைச் சூழவுள்ள வளாகம்.
   - விளையாட்டு சங்க கட்டிடம் அதனைச் சூழவுள்ள வளாகம்
   - டொரிங்டன் மைதானம் அதனைச் சூழவுள்ள வளாகம்
   - டொரிங்டன் மைதானத்தின் விளையாட்டரங்கம்
   - சக்தி மேம்பாட்டு மண்டபம் அதனைச் சூழவுள்ள வளாகம்
   - டொரிங்டன் உள்ளக விளையாட்டரங்கு அதனைச் சூழவுள்ள வளாகம்
2. இல. 100/10இல் அமைந்துள்ள ஹொர்ந்தி பார்வையாளர் அரங்க வாகன நிறுத்துமிடம் மற்றும் அதனைச் சூழவுள்ள வளாகம்.
3. இல. 100/08இல் அமைந்துள்ள ரீட் அவெனியூ விடுதி மற்றும் அதனைச் சூழவுள்ள வளாகம்.
4. பெலியத்த டி.ஏ. ராஜபக்ஷ விளையாட்டு கட்டிடத்தொகுதி.
5. மாத்தளை கொட்டவில மாவட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதி.
6. பொலன்னறுவை மாவட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதி
7. இரத்தினபுரி மாவட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதி
8. கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதி
9. களுத்துறை மாவட்ட விளையாட்டு கட்டிடத்தொகுதி - பண்டாரகம
10. மாத்தளை மாவட்ட விளையாட்டரங்கு
11. கம்பஹா மாவட்ட விளையாட்டரங்கு

ஆகிய இடங்களுக்கான சுத்திகரிப்புச் சேவையை பெற்றுக் கொள்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. விளையாட்டு அமைச்சு கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் காசாளரிடம் மீளளிக்கப்படாத ரூ.2500.00 தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை பெறுகைப் பிரிவிற்கு சமர்ப்பித்த பின்னர் 2023.10.19 முதல் 2023.11.07 வரை (மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை) அலுவலக நேரங்களில் குறித்த பெறுகை ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

03. சகல கேள்விதாரர்களும் மத்திய வங்கியின் அனுமதித்த எந்த வர்த்தக வங்கியிலிருந்தும் பணிப்பாளர் நாயகம், விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களப் பெயரில் பெற்றுக் கொண்ட ரூ.250,000.00 பெறுமதியான கேள்விப்பிணையொன்றை கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படல் மாதிரிக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.
இக் கேள்விப்பிணை 2023.11.08 முதல் 2024.02.06 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

04. குறித்த மாதிரிப் பத்திரத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விலைமனுக்கள் "மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி" என்று இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அக் கேள்விப் பத்திரங்கள் 2023.11.08 பி.ப 2.00 வரை ஏற்கப்படுவதுடன் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படும் கேள்விப்பத்திரங்கள் பணிப்பாளர் (பெறுகை), விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம், இல.09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு - 07 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கப்படும் கேள்விப் பத்திரங்கள் விளையாட்டு அமைச்சு கட்டிடத்தின் இரண்டாம் மாடியில் அமைந்துள்ள விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக்கோரல் 2023/2024" என்று குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படுவது 2023.11.08 பி.ப 2.00 ஆவதுடன், அன்றே உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

**பணிப்பாளர்,
விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்,
இல.09 பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு - 07
தொ.பே.இல: 0112697936
பெக்ஸ்: 0112695822
ஈமெயில்: info@dosd.gov.lk**

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

**கேள்வி இல.: 82/2023-11-09**

**75 எண்ணிக்கையான XDCAM FORMAT 23GB SINGLE LAYER DISCS மற்றும் 250 எண்ணிக்கையான XDCAM FORMAT 50GB DUAL LAYER DISCS என்பவற்றிற்கான பெறுகை**

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு XDCAM FORMAT 23GB SINGLE LAYER DISCS மற்றும் 250 எண்ணிக்கையான XDCAM FORMAT 50GB DUAL LAYER DISCS என்பவற்றின் பெறுகைக்காக இலங்கை, கொழும்பு7, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத்தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

உயர் தரத்திலான XDCAM Discs உற்பத்தியாளர்கள், தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் இக்கேள்வியில் பங்குபெற்றலாம். 2023-11-08ஆம் திகதி அல்லது அதற்கு முன் இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன உதவிப் பணிப்பாளருக்கு (பெறுகைகள்) எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ளலாம். மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 5000.00 ரூபாவை (ஐயாயிரம் ரூபா) இக்கூட்டுத்தாபன பிரதான கணக்காளரிடம் செலுத்துதல் வேண்டும். 2023-11-08ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராக அலுவலக நாட்களில் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையில் (வர்த்தக விடுமுறைகள் நீங்கலாக திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும்) கேள்வி ஆவணங்களின் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரின் (பெறுகைகள்) அலுவலகத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

கேள்வி ஆவணத்தில் நிர்ணயிக்கப்பட்டவாறு அனைத்துக் கேள்விகளுடனும் விலைமனுப் பிணையொன்று (வங்கி உத்தரவாதம்) இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

உற்பத்தியாளர்களின் சார்பாக இக்கேள்வியில் பங்குபெறுவதற்கு அதிகாரமளிக்கப்படுவதற்காக முதன்மையாளர்களினால் வழங்கப்பட்ட தரஅங்கீகார/அற்றோணித்தத்துவ கடிதமொன்றை சமர்ப்பிக்குமாறு முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

FOB விலையில் முகவர் தரகுப்பணம் ஏதாவது உள்ளடக்கப்பட்டிருப்பின், அத்தொகையானது தனியாக காட்டப்படல் வேண்டும்.

2023-11-09ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு இலங்கை, கொழும்பு-7, சுதந்திர சதுக்கம், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரின் அலுவலகத்தில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு அதன்பின் உடனடியாகவே திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை (தேவைப்படின்) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பிரதி பணிப்பாளர் நாயகம் (பொறியியல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி : + 94 112 580 136/ தொலைநகல் + 94 112 500373)

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு-07**
**இலங்கை.** (SLRC Website : http://www.rupavahini.lk)

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கமத்தொழில் அமைச்சு

## வ/ப இலங்கை உர நிறுவனம்

**வ/ப இலங்கை உர நிறுவனத்தின் ஹுனுப்பிட்டிய மத்திய களஞ்சிய கட்டிடத்தொகுதியில் உரத்தை இறக்குதல், ஏற்றுதல், கலவை செய்தல், உற்பத்தி செய்தல் மற்றும் ஏனைய தொழிலாளர் சேவைகளுக்கு தொழிலாளர்களை பெற்றுக்கொள்வதற்கான கேள்வி கோரல்**

**கேள்வி இல. 2023/24/CFC/HPT/LB/01**

வ/ப இலங்கை உரக் நிறுவனத்திற்குரித்தான வத்தளை, ஹுனுப்பிட்டி மத்திய களஞ்சியசாலை கட்டிடத் தொகுதி மற்றும் வத்தளை ஹுனுப்பிட்டியலிருந்து 10 சதுர கி.மீட்டருக்குள் அமைந்துள்ள இந்த நிறுவனத்தினால் பெயர் குறிப்பிடப்படும் வேறு களஞ்சியசாலைகளில் பின்வரும் தொழிலாளர் சேவைகளை வழங்குவதற்காக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு தொழிலாளர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பதிவு செய்யப்பட்ட கமத்தொழில் அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து வ/ப இலங்கை உர நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு தவிசாளரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | சேவை விபரங்கள் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரூபா சதம் | சேவை வழங்க வேண்டிய காலம் |
|---|---|---|---|
| 2023/24/CFC/HPT/LB/01 | வ/ப இலங்கை உர நிறுவனத்தின் ஹுனுப்பிட்டிய மத்திய களஞ்சிய கட்டிடத்தொகுதியில் உரத்தை இறக்குதல், ஏற்றுதல், கலவை செய்தல், உற்பத்தி செய்தல் மற்றும் ஏனைய தொழிலாளர் சேவைகளுக்கு தொழிலாளர்களை வழங்குதல் | 400,000.00 | 2023-12-16ஆம் திகதி முதல் 2024-12-15ஆம் திகதி வரை |

02. இக்கேள்விக் கோரல்கள் தேசிய போட்டி கேள்விக்கோரல் நடைமுறையின் கீழ் செயற்படுத்தப்படும்.

03. மேற்படி சேவையை வழங்குவதற்கு கேள்விதாரர்களினால் வழங்க வேண்டிய தகைமைகள் மற்றும் மூலப்பிரமாணங்கள்:
    - கடந்த ஐந்து வருட காலத்தினுள் குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்
      (இரசாயன அல்லது சேதன உரத்தை இறக்குதல், ஏற்றுதல், கலவை செய்தல் மற்றும் உற்பத்தி செய்தல் மற்றும் ஏனைய தொழிலாளர் சேவைகளை வழங்கியுள்ளமைக்கு)
    - கடந்த ஐந்து வருட காலத்தினுள் குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் தொழிலாளர்களின் பொருட்டு ஊழியர் சேமலாப நிதிக்கு / ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டியவற்றை உரிய முறையில் செலுத்தியிருத்தல்.

04. இக்கேள்விக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள், அறிவுறுத்தல்கள், கேள்வி மாதிரிகள், கேள்வி நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்களை உள்ளடக்கி சிங்கள மொழியில் அச்சிடப்பட்டுள்ள கேள்வி ஆவணத் தொகுதியொன்றை மீளளிக்கப்படாத 10,000.00 ரூபாவை வத்தளை, ஹுனுப்பிட்டியில் அமைந்துள்ள வ/ப இலங்கை உர நிறுவனத்தின் தலைமை அலுவலக நிதிப் பொறுப்பாளருக்கு காசாகச் செலுத்துவதன் பேரில் 2023-10-19ஆம் திகதி முதல் 2023-11-09ஆம் திகதி பி.ப. 3.30 மணி வரை வாரத்தின் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

05. இதில் ஆர்வம் காட்டும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் தேவையான விபரங்களை வ/ப இலங்கை உரக் நிறுவனத்தின் பதில் முகாமையாளர் (விநியோகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம்: 011-2930381 / 077-4441417). இதற்குரித்தான கேள்வி ஆவணங்களை பின்வரும் முகவரியில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. இரு நகல்களிலான கேள்விப்பத்திரங்களை ''மூலப் பிரதி'' (Original) மற்றும் ''நகல் பிரதி'' (Duplicate) என அதன் முதல் பக்கத்தில் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு தனியான கடித உறையிலிட்டு முத்திரை பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''கேள்வி இல. 2023/24/CFC/HPT/LB/01'' எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2023-11-10ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில்

    **தலைவர்,**
    **திணைக்கள பெறுகைக் குழு,**
    **பெறுகைப் பிரிவு,**
    **வ/ப உர நிறுவனம்,**
    **லக்பொஹொர ஸ்வர்ணஜயந்தி மாவத்தை,**
    **ஹுனுப்பிட்டிய, வத்தளை**

    எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் அம்முகவரியிலுள்ள பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். 2023-11-10ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். குறித்த திகதி மற்றும் நேரத்திற்கு பின் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். தபாலில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் தொலைந்து போதல் தொடர்பில் அமைச்சரவை பெறுகைக் குழு பொறுப்புக் கூறமாட்டாது.

07. 2023-11-02ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் வ/ப உர நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வ/ப உர நிறுவனம்,**
**லக்பொஹொர ஸ்வர்ணஜயந்தி மாவத்தை,**
**ஹுனுப்பிட்டிய, வத்தளை**
2023-10-19ஆம் திகதி.

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குதல்

### பிரதமர் அலுவலகம்

**பெறுகை இலக்கம்: PMO/FIN/01/16/10**

1. ஒரு வருட காலத்திற்கு பிரதமர் அலுவலக இடப்பரப்பிற்கு சுத்திகரிப்புச் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பிரதமர் அலுவலகத்தின் சார்பில் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

   அரச அல்லது தனியார் துறை நிறுவனங்களுக்கு 250 ஊழியர்களுக்கும் அதிகமானவர்களைக் கொண்ட சுத்திகரிப்புச் சேவையை வழங்கிய விலைமனுதாரர்கள் இதற்கு விண்ணப்பிப்பதற்கு தகுதி பெறுவர்.
2. விலைமனுக்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறையில் இடம் பெறும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023 நவம்பர் 08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பிரதமர் அலுவலகத்தின் கணக்கு பிரிவிற்கு 9,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் பிரதமர் அலுவலகத்தின் பிரதம கணக்காளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.
4. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023 நவம்பர் 09ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கொழும்பு-07, இல. 58, ஏனர்ஸ்ட் டி சில்வா மாவத்தை, பிரதமர் அலுவலகம், பிரதம கணக்காளருக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேற்கூறிய முகவரியில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் காலம் முடிவுறுத்தப்பட்டதன் பின் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
5. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம் 400,000.00 (நான்கு இலட்சம்) ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-07, இல. 58, ஏனர்ஸ்ட் டி சில்வா மாவத்தை, பிரதமர் அலுவலகம், பிரதம கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி/ தொலைநகல்: 0112370737 / 0112575317-18 நீடிப்பு - 182, 334

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதமர் அலுவலகம்,**
**இல. 58, ஏனர்ஸ்ட் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 07.**

2023 ஒக்டோபர் 19ஆம் திகதி.

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கை அமைச்சு**

**அபிவிருத்தி லொத்தர் சபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இரண்டு எண்ணிக்கை நவீன புத்தம் புதிய காற்றால் கலவை செய்யப்படும் லொத்தர் பந்து சீட்டிழுப்பு இயந்திரங்களை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்**

**விலைக்கோரல் இலக்கம்: DLB/PRO/2023/28**

நிகரான ஒப்பந்தங்களைக் கையாள்வதில் (நிகரான இயந்திரங்கள் அல்லது ஏனைய கணனி இணைப்பு மென்பொருளை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் இயந்திரங்கள்) குறைந்தபட்சம் மூன்று (03) வருடங்களில் அனுபவம் வாய்ந்த தகுதி மற்றும் தகைமை வாய்ந்த உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து இரண்டு எண்ணிக்கை நவீன புத்தம் புதிய காற்றால் கலவை செய்யப்படும் லொத்தர் பந்து சீட்டிழுப்பு இயந்திரங்களை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்கான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. (NCB)

03. இதற்கான விலைமனு ஆவணத் தொகுதியை 2023-10-19ஆம் திகதி முதல் 2023-11-23ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையிலான காலத்தில் கொழும்பு-02, இல. 356, டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. விலைமனு ஆவணங்களை கொழும்பு-02, இல. 356, டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவருக்கு முகவரியிடப்பட்ட வியாபாரக் கடிதத் தலைப்பிலான எழுத்துமூல வேண்டுகோள் ஒன்றின் பேரில் மீளளிக்கப்படாத 20,000.00 ரூபா (15% வெட் வரி உள்ளடங்கலாக) படிவக் கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் 2023-10-19ஆம் திகதி முதல் 2023-11-23ஆம் திகதி வரையில் திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை (பொது விடுமுறை தினங்கள் தவிர்த்து) மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையிலான காலத்தில் திகதி வரை கொழும்பு-02, இல. 356, டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யலாம்.

05. இது குறித்த விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (Pre-bid meeting) 2023-10-13ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு கொழும்பு-02, இல. 356, டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, அபிவிருத்தி லொத்தர் சபையில் இடம்பெறும்.

06. விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நிபந்தனையற்ற விலைமனுப் பிணை முறியொன்றை விலைமனுவுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

07. சகல விலைமனுதாரர்களும் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட பொது ஒப்பந்தப் பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணத் தொகுதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அவை சமர்ப்பிக்கப்படாவிட்டால் விலைமனு நிராகரிக்கப்பட்டவையாக கருதப்படும்.

08. விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களில் வேண்டப்பட்டுள்ள சகல தகவல்களையும் வழங்குதல் வேண்டும்.

09. நிபந்தனைகளின் பிரகாரம் விலைமனுதாரர்கள் நகல் பிரதியுடனான விலைமனுக்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மே/பா அபிவிருத்தி லொத்தர் சபை, இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02'' எனும் முகவரிக்கு 2023-11-24ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அம்முகவரியிலுள்ள பெறுகைப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் நேரில் கொண்டு வந்து உள்ளிடலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இரண்டு எண்ணிக்கை நவீன புத்தம் புதிய காற்றால் கலவை செய்யப்படும் லொத்தர் பந்து சீட்டிழுப்பு இயந்திரங்களை வடிவமைத்தல், வழங்குதல், விநியோகித்தல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும் மேலும் விலைக்கோரலின் பெயர் மற்றும் விலைக்கோரல் இலக்கத்தையும் குறிப்பிடுதல் வேண்டும்.

10. அனைத்து விலைமனுக்களும் 2023-11-24ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு மேலேயுள்ள முகவரியில் மேலதிகமான அறிவித்தலின்றி திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.

11. பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் எந்தவொரு அல்லது அனைத்து முன்வைப்புக்களையும் அல்லது ஒரு பகுதியை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கும் தேவைப்படின் மேலதிக தகவலை அழைப்பதற்கும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் மேற்கொள்வதற்கான ஏகபோக உரிமையை திணைக்கள பெறுகை குழுவானது தன்னகத்தே கொண்டுள்ளது.

12. மேலே தரப்பட்டுள்ள நேரம், திகதிகள் மற்றும் குறிப்பிட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடலாம். அத்துடன் அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்திலும் இதனை பார்வையிடலாம். (www.dlb.lk)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,**
**யூனியன் பிளேஸ், கொழும்பு 02.**
**தொலைபேசி: +94114824824, +94112424517**
**தொலைநகல்: +94112390923**
**www.dlb.lk**
2023-10-19

# குமண தேசிய சரணாலயத்தின் வருமானம் அதிகரிப்பு

**(மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

குமண தேசிய சரணாலயத்தின் வருமானம் மிக நீண்ட இடைவெளியின் பின்னர் 40 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளதாக வனவிலங்குகள் திணைக்களத்தின் பணிப்பாளர் சந்தன சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் செப்டெம்பர் மாதம் வரையிலும் 12,000 உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயணிகள் குமண சரணாலயத்திற்கு வருகை தந்துள்ளதாகவும், கடந்த 4 வருடங்களின் பின்னர் ரூ. 40 மில்லியன் வருமானமாக கிடைத்துள்ளதுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

குமண சரணாலயத்துக்கு வருகை தரும் உல்லாசப்பிரயாணிகளின் வசதிகருதி உள்வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளதுடன், பொது வசதிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

கொவிட் 19 தொற்று காலப்பகுதியிலிருந்து உல்லாசப் பயணிகளின் வருகை குறைவாகவிருந்த போதிலும் தற்போது உல்லாசப் பிரயாணிகளின் வருகை அதிகரித்திருப்பது மகிழ்ச்சியளிப்பதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரயில் மோதி இளைஞன் ஸ்தலத்திலேயே பலி

**(தம்பலகாமம் குறூப், கந்தளாய் தினகரன் நிருபர்)**



திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பகுதியில் இரு பிள்ளைகளின் தந்தையொருவர் ரயிலில் மோதுண்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் முள்ளிப்பொத்தானை பகுதியைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான தாவூது சலீம் என தெரியவருகின்றது. நேற்றுமுன்தினம் திருகோணமலையிலிருந்து கொழும்புக்கு செல்லும் ரயில் மோதியே இவர் உயிரிழந்துள்ளார். குடிபோதையில் மூவர் மது அருந்திவிட்டு வீடு திரும்பும் போது உயிரிழந்தவர் தண்டவாளத்தில் உறங்கியதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது. உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தோப்பூர் வைத்தியசாலைக்கு பொருட்கள் அன்பளிப்பு



**(தோப்பூர் குறூப் நிருபர்)**

"பாத்திமா பவுண்டேசன்" அமைப்பினால் தோப்பூர் பிரதேச வைத்தியசாலைக்கு இரண்டரை இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் அன்பளிப்பாக வைத்தியசாலை நிர்வாகத்திடம் நேற்றுமுன்தினம் (17) வழங்கிவைக்கப்பட்டது.

இதன்போது மூன்று நோயாளர் தள்ளுவண்டிகளும், 25 மின்குமிழ்கள் மற்றும் மூன்று மின்விசிறிகளும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியின் அதிபர் எஸ்.எம்.றஹீம் விடுத்த கோரிக்கைக்கமைய உடனடியாக மூன்று LED மின்குமிழ்கள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் பாத்திமா பவுண்டேசன் அமைப்பின் ஸ்தாபகர்களான பாத்திமா, அவரது கணவர் முகம்மது மாகீர் மற்றும் தோப்பூர் பிரதேச அமைப்பாளர் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எம்.றிபாஸ் அதன் உறுப்பினர்கள் நலன்விரும்பிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்கள் கௌரவிப்பு



இலங்கை கல்வி அபிவிருத்தி மன்றத்தின் (Education Development Forum) ஏற்பாட்டில் 2022ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையலையில் கொழும்பு புதிய நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கடந்த வருடம் (2022) புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திப் பெற்ற காவத்தை ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயத்தின் மாணவர்களான ஸ்ரீதராவ் சிவாணி ஸ்ரீ, தோமஸ் திரோணி ஜெனீப, சதானந்தன் கிரிசேங்கள் ஆகிய மூவரும் கௌரவிக்கப்பட்டனர்.

# இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

## போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| மாவிலயாறு கைலன் - கட்டம் 01 இற்கான மேம்படுத்தல்கள் (1600m) |
| மாவிலயாறு கைலன் - கட்டம் 02 (1 + 600 - 3 + 200m) இற்கான மேம்படுத்தல்கள் |
| மாவிலயாறு கைலன் - கட்டம் 03 (3 + 200 - 4 + 200m) இற்கான மேம்படுத்தல்கள் |
| 2ம் குறுக்கு, 3ம் குறுக்கு எழுச்சி கிராமம், பலாச்சோலை (1500m) இற்கான மேம்படுத்தல்கள் |
| கதிரேசன் வீதி (1000m), செங்கலடி இற்கான மேம்படுத்தல்கள் |
| மத்திய வீதி, தம்பலவீதி மாவடி வீதி, பாலமுனை, மண்டூர் பொதி - 01 (1000m) இற்கான மேம்படுத்தல்கள் |
| மத்திய வீதி, தம்பலவீதி மாவடி வீதி, பாலமுனை, மண்டூர் பொதி - 02 (800m) இற்கான மேம்படுத்தல்கள் |
| கோட்டைக் கல்லார் உள்ளக வீதி (கட்டம் - 01) இற்கான நிர்மாணம் |
| கோட்டைக் கல்லார் உள்ளக வீதி (கட்டம் - 02) இற்கான நிர்மாணம் |
| ரிஜிட் பேமன்ட் தேசிய வீதி, மண்டூர் இற்கான நிர்மாணம் |
| கொங்கிறீட் கால்வாய் ஆரம்பம் வடிகால் இல 402/1, முதல் வடிகால் இல, 402/2 CRWB வரை வீதியின் நிர்மாணம் |

தேசிய போட்டி கேள்வி முறைமையின் கீழ் மேற்படி வேலைக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் RDA மற்றும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk ஊடாக 2023.10.19 முதல் 2023.10.24 வரை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு
## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**நிர்மாணம், கொங்கிறீட் சிலிப்பர்களை அமைத்தல், அகழ்தல், குழாய்களைப் பதித்தல், இணைத்தல், பரீட்சித்தல் மற்றும் மீள் நிரப்புதல் உட்பட முத்துராஜவெல முனையத்தில் எரிபொருள் குழாய் வழியை நிர்மாணித்தல்**

**B/39/2023**

1. ''நிர்மாணம், கொங்கிறீட் சிலிப்பர்களை அமைத்தல், அகழ்தல், குழாய்களைப் பதித்தல், இணைத்தல், பரீட்சித்தல் மற்றும் மீள் நிரப்புதல் உட்பட முத்துராஜவெல முனையத்தில் எரிபொருள் குழாய் வழியை நிர்மாணித்தல்'' எனும் ஒப்பந்தத்திற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
   இவ்வேலையின் நிர்மாணக்காலம் ஒரு மாதமாகும்.
2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையில் மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர்/பெயரிடப்பட்டவர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் **ICTAD** நிறுவனத்தில் இயைபுடைய சிவில் வேலைகளுக்கு C 4 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவு மற்றும் இயைபுடைய இயந்திரவியல் வேலைகளுக்கு EM2 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் கொண்டிருத்தல் வேண்டும். வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைகளில் உள்ளடங்குபவை: இந்தக் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு விலைமனுதாரர்கள் / பெயரிடப்பட்ட உப ஒப்பந்தக்காரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் இயைபுடைய சிவில் வேலைகளுக்கு C 4 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவு மற்றும் இயைபுடைய இயந்திரவியல் வேலைகளுக்கு EM2 அல்லது அதற்கு மேற்பட்ட பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் பெற்றோலிய எண்ணெய் / வாயு என்பவற்றிற்குப் பயன்படுத்தப்படும் உருக்குக் குழாய்களின் திருத்தவேலைகள் / உருக்கியொட்டும் வேலைகளில் ஆகக் குறைந்தது ஒரு வேலையிலாவது அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமான 10,000.00 ரூபாவை (ரூ. 8.483.56 + 2.5% SSCL + 15% VAT) செலுத்தியதன் பின் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2023-11-09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/.
6. விலைமனுக்கள் 2023-11-10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும்.
7. ஏதேனும் தெளிவுபடுத்தல்களுக்கு தயவு செய்து 011-5855288 எனும் தொலைபேசியின் ஊடாக இயந்திரவியல் பொறியியலாளர் திரு. எம். அரவிந்தன் என்பவரைத் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1ஆம் தளம், இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு -09.**

# சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 16ன் கீழ் அறிவிப்பு
## மூதூர் மாவட்ட நீதி மன்றம்

1. ஆர் பி சூரியப்பெரும
   தவிசாளர்
   சேருவில மங்கள மஹா
   சைத்யவர்தன சங்கம்
   சேருவில
   மற்றும்
   இல.319/8, சாந்திவத்த
   சியம்பலாப்பே.
2. கலாநிதி ஜீ.பி மாதரஆராச்சி
   செயலாளர்
   சேருவில மங்கள மஹா
   சைத்யவர்தன சங்கம்
   சேருவில

**வழக்காளிகள்**

வழக்கிலக்கம்: - SPL 472-2023
தன்மை விஷேடம்
நடபடிமுறை :- சாதாரணம்
மதிப்பு :- ரூ. 10,000,000/-

**எதிர்**

1. அதி. வண தொடம்பஹல
   சந்திரசிறி மஹநாஹிமி ஸ்ரீ
   லங்கா அமரபுர மகா நிகாயே
   கல்யாணிவங்ச பகுதியின்
   மகா நிகாய
   ஹிமி
   கோத்தம தபோவனய
   முல்லேரியாவ, புதிய நகரம்
2. வண. கொட்டபொல
   அமரகித்தி தேரர் சேருவில
   பௌத்த நிலையம்,
   சாந்தி அறக்கட்டளை,
   பௌத்தாலோக மாவத்தை,
   கொழும்பு 07.
3. வண. அலுதேனியே சுபோதி
   தேரர் விகாராதிபதி,
   சேருவில மங்கள ரஜமகா
   விகாரை,
   சேருவில.

**எதிராளிகள்**

சேருவில மங்கள மஹா சைத்யவர்தன சங்க அனைத்து உறுப்பினர்களுக்கும் 15ம் திகதி வைகாசி மாதம் 2023ம் ஆண்டு மேற்கூறிய வழக்காளிகள் மூதூர் மாவட்ட நீதிமன்றத்தில் மேற்கூறிய 1-3 எதிராளிகளுக்கு எதிராக மேற்கூறிய வழக்கினைத் தொடர்ந்து பின்வரும் நிவாரணங்களை கோரியிருந்தார்கள்.

அ) சேருவில மங்கள ரஜமஹா விகாரையின் விகாராதிபதி பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு சேருவில மங்கள ரஜமஹா விகாரையின் சைத்தியவர்தன சங்கத்தின் சம்மதம் சிபாரிசு பெறுவது கட்டாயம் என்ற விகாரை பாரம்பரியம் இருக்கிறது என்ற கட்டளை வழங்குமாறும்

ஆ) வழக்காளிகள் உட்பட சேருவில மங்கள ரஜமஹா விகாரையின் சைத்தியவர்தன சங்கத்தின் அனுமதி மற்றும் /அல்லது ஒப்புதல் பெறாமல், அவ்விகாரையின் விகாராதிபதி தொடர்பாக நியமனம் செய்ய 1ஆம் எதிராளிக்கு சட்டப்பூர்வ உரிமை இல்லை என கட்டளை வழங்குமாறும்

இ) 2021.05.21 திகதி அல்லது அதனை அண்மித்த தினத்தில 1வது எதிராளி தேரரினால் 2வது எதிராளி தேரரினை சேருவில மங்கள ரஜமஹா விகாரையின் விகாராதிபதியாக பெயர்குறித்து நியமனம் செய்ததாகக் கூறப்படும் நியமனம் மற்றும் / அல்லது எவ்வகையான நியமனமும் ஆரம் பம் முதல் செல்லுபடியற்ற மற்றும் சட்ட வலிதற்ற மற்றும் சட்டத்தின் முன் அமுல்படுத்த முடியாத நியமனம் என்ற கட்டளை பிறப்பித்து தீர்ப்பு வழங்குமாறும்

ஈ) அவ் 2021.05.21 அல்லது அதனை அண்மித்த தினத்தில் செய்யப்பட்டதாகக் கூறப்படும் நியமனத்தின் மூலம் 2வது எதிராளி தேரருக்கு சேருவில மங்கள ரஜமஹா விகாரையின் விகாராபதி பதவிக்கு உரிமை கோர மற்றும்/அல்லது பிரதிநிதித்துவம் செய்ய மற்றும்/அல்லது முன்னிற்க மற்றும்/அல்லது விகாரையின் ஆட்சி மற்றும் நிருவாகத்தில் தலையிட முடியாது என தீர்ப்புக் கட்டளை வழங்குமாறும்

உ) சேருவில மங்கள ரஜமகா விகாரையின் மங்கள மகா சைத்யவர்தன சங்கத்தின் சிபாரிசு பெறாமல் மற்றும்/அல்லது நித்திய விகாரை சம்பிரதாயங்களுக்கு எதிராக விகாராதிபதி நியமிப்பது மற்றும்/ அல்லது விகாராதிபதி என பிரதிநிதித்துவம் செய்வதிலிருந்து 1ஆம் மற்றும் 2ஆம் எதிராளிகளை தடுக்கும் நிரந்தரத் தடை உத்தரவு வழங்குமாறும்

ஊ) இவ்வழக்கினை விசாரித்து இறுதித் தீர்மானம் எடுக்கும் வரை, சேருவில மங்கள ரஜமகா விகாரையின் விகாராதிபதி பதவி சம்பந்தமாக உரிமை முன் வைப்பதிலிருந்து மற்றும்/அல்லது பிரதிநிதுத்துவப் படுவதிலிருந்து மற்றும்/அல்லது முன்னிற்பதிலிருந்து மற்றும்/அல்லது அவ்விகாரையின் ஆட்சி மற்றும் நிருவாக சம்பந்தமாக இருக்கும் நிலையினை மாற்றுவதிலிருந்து 1வது மற்றும்/அல்லது 2வது எதிராளி தேரர்களை மற்றும்/அல்லது அவர்கள் மூலம் மற்றும் அவர்களின் கீழ் செயல்படுபவர்கள் முகவர்கள் வழிவருவோர் அனைவரையும் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவுக் கட்டளை வழங்குமாறும்

எ) அவ்வாறு இடைக்காலத் தடை உத்தரவுக் கட்டளை வழங்கும் வரை சேருவில மங்கள ரஜமகா விகாரையின் விகாராதிபதி பதவி சம்பந்தமாக உரிமை முன் வைப்பதிலிருந்து மற்றும/அல்லது பிரதிநிதுத்துவப்படுவதிலிருந்து மற்றும்/அல்லது முன்னிற்பதிலிருந்து மற்றும்/அல்லது அவ்விகாரையின் ஆட்சி மற்றும் நிருவாக சம்பந்தமாக இருக்கும் நிலையினை மாற்றுவதிலிருந்து 1வது மற்றும்/அல்லது 2வது எதிராளி தேரர்களை மற்றும்/அல்லது அவர்கள் மூலம் மற்றும் அவர்களின் கீழ் செயல்படுபவர்கள் முகவர்கள் வழிவருவோர் அனைவரையும் தடுக்கும் கட்டாணை கட்டளை ஆரம்பத்திலே வழங்குமாறும்

ஏ) இடைக்காலத் தடை உத்தரவுக் கட்டளை அறிவித்தல் வழங்குமாறும்

ஐ) சிவில் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 16 இன் படி அறிவித்தல் வழங்க அனுமதி வழங்குமாறும்

ஒ) வலைக்குச் செலவு மற்றும்

ஓ) கனம் மன்று கருதுகின்ற வேறு மற்றும் ஏனைய மேலதிக நிவாரணங்கள் பெற்றுத்தருமாறும்

**2023 ஒக்டோபர் 09ம் திகதி**

**வழக்காளிகளின் சட்டத்தரணி**

**"நீதிமன்றின் கட்டளைப்படி"**
**பதிவாளர்**

# பிழைதிருத்தம்

## பெறுகை அறிவித்தல்

### சமைக்காத/ சமைத்த உணவு வழங்குதல் – 2024
### ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்கு 2024.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.12.31ஆம் திகதி வரையுள்ள காலத்தில் சமைத்த உணவு வழங்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

மேற்படி தலைப்பில் கடந்த 2023.10.10ம் திகதி தினகரன் நாளிதழ் 11ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தில் பந்தி (V) மற்றும் பந்தி (IX) பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

**பந்தி - (V)**

C தரத்தில் அல்லது B தரத்தில் பிரதேச வைத்திய சாலையொன்றில் ஒரு வருட காலத்திற்கு சமைத்த உணவை வெற்றிகரமாக வழங்கியுள்ள அனுபவம் இருப்பின் A தர பிரதேச வைத்தியசாலைகளுக்கும் A அல்லது B தர பிரதேச வைத்தியசாலையொன்றில் ஒரு வருட காலத்திற்கு உணவை வெற்றிகரமாக வழங்கிய அனுபவம் இருப்பின் B தரத்திற்கு ஆதார வைத்தியசாலைகளுக்கும், B தரத்தில் ஆதார வைத்தியசாலையொன்றில் ஒரு வருட காலத்திற்கு சமைத்த உணவை வெற்றிகரமாக வழங்கிய அனுபவம் இருப்பின் A தரத்தில் ஆதார வைத்தியசாலைகளுக்கும் விண்ணப்பிப்பதற்குத் தகைமையுண்டு. C மற்றும் B தர பிரதேச வைத்தியசாலைகளுக்கு அனுபவம் தேவையில்லை.

**பந்தி (IX)**

ரூபா 5மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதி உடைய கேள்விக்காக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பொது ஒப்பந்த உடன்படிக்கையின் பிரதியொன்றை இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். அதனடிப்படையில் (திட்டத்தலாவ, மஹியங்கனை, வெலிமட, பிபில, சியம்பலான்டுவ, வெல்லவாய ஆதார வைத்தியசாலைகள் மற்றும் பள்ளர, பண்டாரவளை, புத்தள, லனுகல, ஊவா பரணகம, கந்தகெட்டிய, கிராந்துரு கோட்டை, கெந்தகொல்ல, மினும்பிட்டிய ஆகிய பிரதேச வைத்தியசாலைகளுக்கு பொது ஒப்பந்த உடன்படிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்) விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்,**
**இல. 30, ஆர்.எச். குணவர்தன மாவத்த,**
**பதுளை**

# பிழை திருத்தம்

## ஊவா மாகாண சபை

**ஊவா மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார மற்றும் சமூக நலன்புரி அமைச்சு**

## 2024ம் ஆண்டிற்காக வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023 ஒக்டோபர் 11 தினகரன் நாளிதழின் 11ம் பக்கத்தில் மேற்படி தலைப்பின் கீழ் பிரசுரமான விளம்பரத்தில்

"செயலாளர், சுகாதார அமைச்சு பெயரில் உள்ள கணக்கு இலக்கம் **269100198440347**" என திருத்தப்படல் வேண்டும் என்பதை தயவுடன் கவனிக்கவும். முன்பு பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய சகல விபரங்களும் மாற்றமின்றி காணப்படும்.

**அமைச்சு செயலாளர்/ பெறுகைக்குழு தலைவர்,**
**ஊவா மாகாண சபையின் சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகார மற்றும் சமூக நலன்புரி அமைச்சு,**
**ஆர்.எச். குணவர்தன மாவத்த, பதுளை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

## சூரிய ஒளிமின்னழுத்த (PV) அமைப்பின் வடிவமைப்பு, வழங்கல், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரித்தலுக்கான விலைமனு கோரல்

கூரையின் மேற்பரப்பில் இணைக்கப்பட்ட சூரிய கூரை அமைப்பில் வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தலுடன் வடிவமைப்புக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவினால் (DPC) விலைமனுக்கள் கோரப்படுகின்றன என்பதை இத்தால் உங்களுக்கு நாம் அறியத்தருகிறோம். பயன்பாட்டு வழங்குநராக இலங்கை மின்சார சபை உள்ளது. தேர்வுசெய்யப்படும் விலைமனுதாரர் இணக்கம் எட்டப்படும் திகதியில் இந்த அமைப்பை விரைவாக நிறுவுவதற்கு சிறந்த திறன், கையிருப்பு மற்றும் நிதி வலுத்தன்மையை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

தேர்வு செய்யப்படும் விலைமனுதாரர் அங்கீகார கடிதம் வழங்கப்பட்ட பின் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் (ROC) ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுதல் வேண்டும். Power injection method என்பது நிகர அளவீட்டு முறையாகும். விலைமனுதாரர்கள் அவசியம் தளத்திற்கு விஜயம் மேற்கொண்டு, இருக்கின்ற கூரை இடம், கூரை மீதான எடை, கூரையில் உள்ள வரிசைகளுக்கு இடையே வேலை செய்யும் பாதை மற்றும் வாடிக்கையாளருக்கு அதிகபட்ச பலன் கிடைத்தல் ஆகியவற்றை கருத்திற்கொண்டு இலங்கை மின்சார சபை வரம்பிற்குள் அதிகபட்ச AC திறனை தொழில்நுட்பரீதியில் நிறுவுவதற்கு தீர்மானித்தல் வேண்டும்.

அனைத்து PV அமைப்பு DC/AC விகிதம் 1:1.2 (DC மற்றும் AC திறன் விகிதமானது வரிசையின் DC மதிப்பிடப்பட்ட அளவின் விகிதம் தொடக்கம் இன்வெர்ட்டரின் AC மதிப்பிடப்பட்ட அளவு வரையாகும்)

**அட்டவணை: A**

| இல. | இடம் | முகவரி | திறன் (kWac) | இணைப்பு வகை |
|---|---|---|---|---|
| 01 | கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் | "சமாகம் மெதுர", இல. 400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 | 45 | நிகர அளவீடு (Net metering) |

மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா ஐயாயிரத்தை (ரூபா 5,000.00) செலுத்தி 2023 ஒக்டோபர் 19 ஆம் திகதி வரை கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, இல. 400, "சமாகம் மெதுர", கம்பனிகள் பதிவாளர் திணைக்கள, தலைமை கணக்காளரிடம் கிடைக்கப்பெறும் படிவங்களில் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, இல. 400, "சமாகம் மெதுர", கம்பனிகள் பதிவாளர் திணைக்கள, தலைமை கணக்காளரிடமிருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ.: 011-2689205) என்பதோடு 2023 ஒக்டோபர் 19 ஆம் திகதி தொடக்கம் 2023 நவம்பர் 02ஆம் திகதி வரை 0900 மணி தொடக்கம் 1500 மணி வரையான காலத்தில் விலைமனு ஆவணங்களை பரீட்சிப்பது மற்றும் பெறலாம்.

2023 ஜனவரி 23 ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும் (விலைமனுக்கள் மூடப்படும் திகதியில் இருந்து 77 நாட்கள்)

அனைத்து விலைமனுக்களும் 201,600 ரூபா விலைமனு பிணையை கொண்டதாகவும் அது 2024 பெப்ரவரி 06ஆம் திகதி வரை (விலைமனுக்கள் மூடப்படும் திகதியில் இருந்து 91 நாட்கள்) செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.

முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கணக்காளர், கணக்குப் பிரிவு, கம்பனிகள் பதிவாளர் திணைக்களம், "சமாகம் மெதுர", இல. 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுதல் வேண்டும்.

இந்தப் பணி 6 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.

விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி 2023 நவம்பர் 02 ஆம் திகதி 1400 மணி என்பதோடு அது நிறைவடைந்த பின் உடன் திறக்கப்படும்.

இந்த கேள்விமனுவுக்காக 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் கீழ் பதிவுச் சான்றிதழை (PCA) சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்களை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்க கோரப்படுகின்றனர்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, இல. 400, "சமாகம் மெதுர", கம்பனிகள் பதிவாளர் திணைக்கள, மாநாட்டு அறையில் 2023 நவம்பர் 02 ஆம் திகதி மு.ப. 9.00க்கு இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**
**கம்பனிகள் பதிவாளர் திணைக்கள,**
**"சமாகம் மெதுர",**
**இல. 400, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams




For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
+94 112429342
+94 112429343

# போதனா வைத்தியசாலை - குளியாப்பிட்டிய

## சுகாதார அமைச்சு

## 2024ஆம் வருடத்திற்கான பொருட்கள் / சேவைகள் வழங்குநர்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்கள், அப்புறப்படுத்தப்படும் பொருட்களை விற்பனை செய்வதற்காக பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு பொருட்கள், சேவைகள் வழங்குநர்கள் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்காக இலங்கைப் பிரஜைகள் / உற்பத்தியாளர்கள் /விநியோகஸ்தர்கள் / அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களில் பதிவு செய்துள்ள நிறுவனங்கள்/ கூட்டுறவு சங்கங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01 வழங்கல்கள்**

01. சகல வகையான காகிதாதிகள் (தொலைநகல் தாள், கணனி தாள், பேனை, பென்சில், புத்தகங்கள் போன்றன)
02. சகல வகையான அச்சுப் பொறிகள், தொலைநகல் / புகைப்படப் பிரதி இயந்திரங்களுக்கான டோனர், கார்ட்ரிச் மற்றம் மை / ரோணியோ மை
03. மர/உருக்கு / MDF / பிளாஸ்டிக் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள்
04. அவசர வேளைகளில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கான மருந்தகம் (குளியாப்பிட்டியவிற்கு அருகில்)
05. அவசர வேளைகளில் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகூட பரிசோதனைகள், கதிரியக்க பரிசோதனைகள் மற்றும் ஏனைய சேவைகளுக்கான நிறுவனங்கள் (குளியாப்பிட்டியவிற்கு அருகில்)
06. அனைத்துவித மின்சார உபகரணங்கள் (குளிர்சாதனப்பெட்டி, மின் கேத்தல், சலவை இயந்திரங்கள் போன்றன)
07. அனைத்துவிதமான இலத்திரனியல் உபகரணங்கள் (குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம் மற்றும் ஏனைய மின் உபகரணங்கள்)
08. கணனி இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்கள்/ தொலைநகல் இயந்திரங்கள்/ புகைப்படப் பிரதி இயந்திரங்கள்/ ரோணியோ இயந்திரங்கள் / CCTV இயந்திரங்கள் என்பன
09. வீடு மற்றும் வாகனங்களுக்கான வளிச்சீராக்கம்
10. அனைத்து வகையான கனரகப் பொருட்கள் (கட்டிடப் பொருட்கள், வயர், ஆளிகள் (சுவிச்) போன்ற மின்சார பொருட்கள், நீர்க்குழாய் மற்றும் துணைப்பாகங்கள், மலசலகூடம் மற்றும் துப்புரவேற்பாட்டு உபகரணங்கள், நிறப்பூச்சுகள் என்பன)
11. சக்கர நாற்காலி, ட்ரொலி, உணவு ட்ரொலி, சேலைன் தாங்கிகள், வைத்தியசாலை கட்டில்கள், அலுமினியம் மற்றும் வெள்ளியிரும்பு போன்றன
12. கருங்கல், கற்தூள்கள், செங்கல் மற்றும் மணல் போன்ற கட்டிடப் பொருட்கள் வழங்குதல்
13. வைத்தியசாலை துணிகள், தலையணைகள், நுளம்பு வலைகள், திரைச்சீலைகள் என்பன
14. சமையலறை உபகரணங்கள் (அலுமினியப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், மின்சார உபகரணங்கள், குப்பை வாளிகள் போன்றன)
15. சவர்க்காரம், சலவைத் தூள், மலசலகூட சுத்திகரிப்புத் திரவம், தூள் வகைகள், மொப், ஈர்க்கிள் தூரிகை மற்றும் தும்பு உற்பத்திகள் போன்ற பாவனைப் பொருட்கள்
16. குப்பைப் பைகள், பொலித்தீன் பைகள், வெள்ளைப் பொலித்தீன் மற்றும் பொலித்தீன்
17. டயர், டியுப், வாகன பட்டரிகள் மற்றும் உதிரிப்பாகங்கள்
18. மெத்தைகள் (எல்லா வகையானவை) மற்றும் ரெக்ஸின்
19. சப்பாத்து (சத்திரசிகிச்சையக பூட்ஸ்/ கென்வஸ்) செருப்புகள் ரெக்ஸின் துணி, இறப்பர் உற்பத்திகள்
20. சத்திரசிக்சையகத்திற்கான சுத்திகரிக்கப்பட்ட நீர் வழங்கல்
21. எல்லா வகையான அரிந்த பலகைகள் மற்றும் மர வகைகள்
22. அச்சு வேலைகள், பெயர்ப் பலகைகள், பதாகைகள், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகளைத் தயாரித்தல்
23. மருந்து இடும் உறைகளைத் தயாரித்து அச்சிடுதல்
24. உபசாரங்களுக்கான சமைத்த உணவுகள் மற்றும் ஏனைய பொருட்கள் (குளியாப்பிட்டிய நகருக்கு அண்மையிலுள்ள ஹோட்டல் மற்றும் உணவக உரிமையாளர்கள் மட்டும்)
25. சமையலறை மற்றும் ஏனைய பிரிவுகளுக்கான எரிவாயு வழங்குதல்
26. தேவையான வேளைகளில் வாடகை அடிப்படையில் அம்பியூலன்ஸ் / பஸ் / வேன்களை வழங்குதல்

**02 சேவைகள்**

27. அலுவலக உபகரணங்களின் சேவைகள்/திருத்தவேலைகள் (புகைப்படப் பிரதி இயந்திரம், ரோணியோ இயந்திரம், கணனி, தொலைநகல் இயந்திரம்)
28. வைத்தியசாலை அம்பியூலன்ஸ் உட்பட எல்லா வகையான மோட்டார் வாகனங்களுக்கான சேர்விஸ்கள்
29. வைத்தியசாலை அம்பியூலன்ஸ் உட்பட எல்லா வகையான மோட்டார் வாகன திருத்தவேலைகள்
30. மரம்/உருக்குத் தளபாடங்கள் திருத்தவேலைகள் (பிரம்பு கதிரை இழைத்தல், குஷன் இடுதல் உள்ளடங்களாக)
31. இரும்பு கட்டில்கள், நோயாளர் காவிகள், சக்கர நாற்காலிகள், சேலைன் தாங்கிகள் என்பனவற்றின் திருத்தவேலைகள்
32. நிறுக்கும் தராசுகள் மற்றும் சமையலறை உபகரணங்களின் திருத்தவேலைகள்
33. சாக்கடை முறைமைகளுக்கு இயைபான மோட்டார் மற்றும் நீாப் பம்பிகளின் திருத்தவேலைகள்
34. வீடு மற்றும் வாகன வளிச்சீராக்கி திருத்தவேலைகள்/குளிர்சாதனப்பெட்டி திருத்தவேலைகள்
35. ஊழியர்களுக்கான அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
36. உள்ளக தொலைபேசி முறைமையை பராமரித்தல்
37. அலுமினியத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் சிறிய அளவிலான பகுதிபிரிப்பு வேலைகள்

**03. அப்புறப்படுத்தப்படும் பொருட்களை விற்பனை செய்தல்**

38. அப்புறப்படுத்தப்படும் பொருட்களை விற்பனை செய்தல் (கண்ணாடிகள், பிளாஸ்டிக் போத்தல்கள் / வெற்று சேலைன் போத்தல்கள் / காகித அட்டைகள் / காகிதங்கள் / சமையலறையிலிருந்து அப்புறப்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களும்)
39. அப்புறப்படுத்தப்படும் உணவுக் கழிவுகள் / சமையலறையிலிருந்து அகற்றப்படும் அனைத்தும்
40. உரிமையாளர் அற்ற சடலங்கள் மற்றும் வைத்தியசாலையின் சடல அறையிலிருந்து மற்றும் நோயியல் பரிசோதனைக் கூடத்திலிருந்து அப்புறப்படுத்தப்படும் உடற் பாகங்களை அப்புறப்படுத்துதல்

**04. கட்டிட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு வேலைகள்**

41. கட்டிடத் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்குரித்தான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கு இலங்கை நிர்மாணம் மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பதிவு ICTAD/CIDA-C9/EM-05 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தைக் கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (இதன் பொருட்டு வேறு விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும்.)

### 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம்

1. நிறுனத்தின் உத்தியோகபூர்வ பெயர் மற்றும் முகவரி:.................................................
2. தனிநபர் அல்லது கூட்டு வியாபாரமானால் உரிமையாளர்களின் பெயர்:.................................................
3. தொலைபேசி இலக்கம்:.................................................
   II தொலைநகல் இலக்கம்:.................................................
   III மின்னஞ்சல் முகவரி:.................................................
4. வெட் பதிவு செய்திருந்தால் வெட் இலக்கம்: .................................................
   (சான்றிதழின் பிரதியை இணைத்தல் வேண்டும்)
5. வழங்கும் உருப்படியின் இலக்கம்:.................................................
6. வியாபாரம் அல்லது பெயர் பதிவிலக்கம்:.................................................
   (சான்றுபடுத்திய பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
7. பணம் செலுத்திய விதம்
   i. வழங்கப்பட்ட பற்றுசீட்டு இலக்கம்:.................................................
   ii. வங்கியில் இடப்பட்ட பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது ( ).................................................

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என இத்தால் சான்றுபகர்கின்றேன். ஏதாவது பொய்யான தகவல்கள் வழங்கியிருந்தால் பதிவு நிராகரிக்கப்பட்டு இரத்துச் செய்யப்படும் என்பதை நானறிவேன். இதற்காக வியாபாரப் பதிவுச் சான்றிதழின் உண்மைப் பிரதி மற்றும் VAT பதிவுச் சான்றிதழின் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளன.

.........................................    .................................................

**விண்ணப்பதாரரின் கையொப்பம்**    திகதி

**வியாபாரப் பதிவிலக்கம் மற்றும் முத்திரை**

**நிபந்தனைகள்**

01. ஒவ்வொரு பொருளுக்கும் பின்வரும் வகையிலான மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாக குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலை காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அல்லது குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் பெயரில் குளியாப்பிட்டிய இலங்கை வங்கிக் கிளையில் 7040194 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்துப் பெற்றுக்கொண்டப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
02. விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வைத்தியசாலைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்பதுடன் மேற்குறிப்பிடப்பட்ட மாதிரிக்கு அமைவாக A4 அளவான தாளில் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கலாம். பணம் செலுத்தியதற்கான ஆவணங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் மாதிரிக்கு அமைவாக அல்லாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப் படிவத்துடன் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)
03.

| பொருட்கள் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|
| 1. இல. 1 முதல் 40 வரையான பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக ஒரு உருப்படிக்கு | ரூபா 500.00 வீதம் |
| 2. இல. 41 கட்டிட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கு | ரூபா 1000.00 |

04. சகல விண்ணப்பங்களும் 2023-11-20ஆம் திகதிக்கு முன் தலைவர், பிரதேச பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குளியாப்பிட்டிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லாவிடின் இவ் வைத்தியசாலையின் கணக்காளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். ‘‘வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024 – போதனா வைத்தியசாலை குளியாப்பிட்டி - உருப்படி இல.....’’ எனக் கடித உறையில் இடப் பக்க மேல் மூலையில் கட்டாயமாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
05. பொதுவாக பதிவுபெற்ற வழங்குநர்களிடமிருந்தும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் விலை மனுக்கள் கோரப்படுவதுடன், வேறு வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களிடம் விலை மனுக்கள் கோரப்படுதல், கொள்வனவு செய்தல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர் / பணிப்பாளர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குளியாப்பிட்டிய.**

**விசாரணைகள்: 037-2281261 நீடிப்பு 295**

# கொத்மலை பிரதேச சபை - பூண்டுலோயா

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

01. 2024ஆம் வருடத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்களிடமிருந்தும் மற்றும் நிர்மாண வேலைகளுக்காக ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. விண்ணப்பப் படிவங்களை 2023-12-31ஆம் திகதி அல்லது அதற்கு முன் செயலாளர், கொத்மலை பிரதேச சபை, பூண்டுலோயா எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் - 2024’’ எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.
03. வியாபாரத்தின் பதிவிற்கு இயைபான சான்றிதழ்களின் பிரதிகளை (சகல விபரங்கள் சகிதம்) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
04. பதிவுக் கட்டணத்தை ‘‘செயலாளர், கொத்மலை பிரதேச சபை’’ எனும் பெயரில் காசுக் கட்டளை மூலம் அல்லது காசோலை மூலம் அல்லது பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அலுவலகத்திற்கு வருகை தந்து அல்லது kothmaleps@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு வேண்டுகோள் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

| தொ. இல. | வழங்கல் / சேவை | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | சகல அலுவலக உபகரணங்கள், காகிதாதிகள் மற்றும் பாவனைப் பொருட்கள் வழங்குதல் | 1500.00 |
| 02 | அலுவலக உபகரணங்கள் (மரம் / உருக்கு/ பிளாஸ்டிக்) அலுமாரி, கதிரை, கெபினட் உட்பட்ட உற்பத்திகளை வழங்குதல் | 1500.00 |
| 03 | சகல விதமான அச்சுவேலைகளை மேற்கொள்ளல் | 1000.00 |
| 04 | உணவு பானங்கள் வழங்குதல் | 1000.00 |
| 05 | ஒலிபெருக்கி உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல் | 750.00 |
| 06 | கணனிகள், கணனி துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் (டோனர், CD/DVD/ரிபன் போன்றன) வழங்குதல் | 1000.00 |
| 07 | இலத்திரனியல் மற்றும் மின்சார உபகரணங்கள் வழங்குதல் (வீதிகளை ஒளிமயமாக்குவதற்குத் தேவையான சகல உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்) | 500.00 |
| 08 | தட்டச்சு இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம் மற்றும் ரோணியோ இயந்திரங்கள் வழங்குதல் | 1000.00 |
| 09 | இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பெயர்ப் பலகைகள், அறிவித்தல் பலகைகள் மற்றும் பதாகைகள் | 1000.00 |
| 10 | துப்புரவேற்பாட்டுப் பொருட்கள் மற்றும் பண்டங்கள் (மலசலகூடம் சுத்திகரிக்கும் பொருட்கள், தும்புத்தடி, ஈர்க்கிள், தூரிகைகள், மொப், குழாய், குப்பை வண்டிகள், பிரம்புக் கூடைகள், வீல் பெரோ, மலசலகூடத் தூரிகைகள், வாளிகள், மண்வெட்டி, ரேக்கை, வீச்சுக் கத்தி, தலைக்கவசம், காலணி, கையுறைகள், பாதுகாப்பு இடுப்புப் பட்டி) | 1000.00 |
| 11 | வாகனங்களுக்கான டயர், டியூப் மற்றும் பெற்றரிகள் | 1000.00 |
| 12 | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல் (டீசல் / பெட்ரல் உட்பட) | 1000.00 |
| 13 | துணிகள், சீருடைக்குத் தேவையான துணிகள், மேசை விரிப்புகள், திரைச்சீலைகள் | 500.00 |
| 14 | கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகள் வழங்குதல் (ஹியூம் குழாய்கள், மாடிப்படி கைப்பிடி, கொங்கிறீட் தூண்கள், சீமெந்து கல், ப∴பலோ தாங்கி) | 750.00 |
| 15 | நிர்மாணப் பொருட்கள் வழங்குதல் (கல், மணல், சிறுகற்கள், செங்கல், தார், சட்டரிங், கம்பி பிரிமிக்ஸ் முதலியன) | 750.00 |
| 16 | கிருமிநாசினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் (இழையான் கொல்லி) | 1000.00 |
| 17 | தொழில்நுட்ப உபகரணங்கள் வழங்குதல் (மரம் வெட்டும் இயந்திரம், மரம் இழுக்கும் இயந்திரம், கயிறு, புல் வெட்டும் இயந்திரம், தையல் இயந்திரம், மின்னியல் உபகரணங்கள், டயர் மற்றும் டியூப் திருத்தவேலை உபகரணங்கள்) | 1000.00 |
| 18 | சமையலறை உபகரணங்கள் (பாரிய அளவிலான பிடிச்சட்டிகள், பீங்கான், கண்ணாடிக் குவளைகள், எரிவாயு அடுப்பு போன்றன) | 750.00 |
| 19 | வீச்சுக் கத்தி, அரிவாள், மண்வெட்டி, முள்ளு, ரேக்கை போன்ற உபகரணங்கள் வழங்குதல் | 750.00 |
| 20 | நீர்க்குழாய்கள் மற்றும் அதுசார்ந்த துணைப்பாகங்கள், நீர்த்தாங்கி வழங்குதல் | 750.00 |
| 21 | அரிந்த மரம் வழங்குதல் (பலகை, பராலை, ரீப்பை முதலியன) | 750.00 |
| 22 | சீருடைகளைத் தைத்தல் | 750.00 |
| | சேவைகள் | |
| 23 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் | 1000.00 |
| 24 | வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளின் திருத்தவேலைகள் | 500.00 |
| 25 | அலுவலக இயந்திராதிகளின் திருத்தவேலைகள் மற்றம் சேர்விஸ்கள் (கணனி, அச்சுப் பொறிகள், டுப்ளோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம் மற்றும் தட்டச்சுப் பொறிகள்) | 500.00 |
| 26 | கணனி ஆலோசனைச் சேவைகள் | 500.00 |
| 27 | மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள் | 500.00 |
| 28 | சுகாதார உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களின் திருத்தவேலைகள், உருக்கியொட்டும் வேலைகள், மதில் மற்றும் படலை மறைப்பு திருத்தவேலைகள் | 1000.00 |
| 29 | நொத்தாரிஸ் மற்றும் சட்டத்தரணி சேவைகள் | 1000.00 |
| 30 | நில அளவை சேவைகள் | 1000.00 |
| 31 | கலி வண்டி சேவைகள் | 1000.00 |
| 32 | நீர் பம்பிகளின் திருத்தவேலைகள் | 500.00 |
| 33 | அபாயகரமான மரங்களை வெட்டி வீழ்த்துதல் | 500.00 |
| 34 | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் கட்டிட திட்டப்படங்களை வரைதல் | 1000.00 |
| | நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் | |
| 35 | 50000.00 ரூபா வரை | 500.00 |
| 36 | 50001.00 ரூபா முதல் 100000.00 ரூபா வரை | 1000.00 |
| 37 | 100001.00 ரூபா முதல் 500000.00 ரூபா வரை | 1500.00 |
| 38 | 500001.00 ரூபா முதல் 1000000.00 ரூபா வரை | 2000.00 |
| 39 | 1000001.00 ரூபா முதல் 2000000.00 ரூபா வரை | 2500.00 |
| 40 | 2000000.00 ரூபாவிற்கு மேல் | 3500.00 |

**பொது நிபந்தனைகள்**

01. தேவையான சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தவிர்ந்த ஏனைய வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களது சேவையைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
02. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் விலைகளை சமர்ப்பித்தல் அல்லது குறித்த நேரத்தில் கட்டளைகளை வழங்கத் தவறுதல் மற்றும் விலைக்கோரும் நிபந்தனைகளுக்கு அமைவாக செயற்படாத வழங்குநர்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி வழங்கல் நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்படுவர்.
03. சபைக்கு வழங்கும் சேவைக்கு முற்பணம் வழங்கப்பட மாட்டாது.
04. குறைந்த பட்சம் 60 நாட்களுக்கான கடன் வசதி வழங்கப்படல் வேண்டும்.
05. நிர்மாணம் மற்றும் ஒப்பந்தக்காரர்களாக பதிவு செய்துகொள்ளும்போது இக்டாட் நிறுவனத்தின் அல்லது மத்திய மாகாண சபையின் பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் சொத்துப் பிரகடனத்தின் பிரதியொன்றை விண்ணப்பத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். கொத்மலை அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட ஒப்பந்தக்காரர்கள் நிதி மற்றும் நிர்மாண வேலை தொடர்பான அனுபவத்திற்கான சான்றிதழ்களைச் சமர்ப்பித்து பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.
06. வெட் வரி மற்றும் புரள்வு வரிக்காக பதிவு செய்திருந்தால் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. வழங்கல் நடவடிக்கைகளின் போது பிரதேச சபைச் சட்டம், நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அரசாங்கத்தினால் அவ்வப்போது விடுக்கப்படும் சுற்றுநிருப அறிவுரைகளின் பிரகாரம், பிரதேச சபையினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்குதல் வேண்டும்.

**எச்.எம்.ஜீ. அஜித் புஷ்பகுமார,**
**செயலாளர்,**
**கொத்மலை பிரதேச சபை,**
**பூண்டுலோயா.**
2023-10-16.


For classified advertisements and for replies

received in response to advertisements published under Lake House box numbers

+94 112429342
+94 112429343





## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**106 கார்கள் விற்பனைக்கு**

JZ-8056 HYUNDAI ACCENT, 2001, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிளஸி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 066867

**107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு**

CBC-9699 TOYOTA VITZ, 2018, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிளஸி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 066864

### வேலைவாய்ப்பு

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

ஒரு பேக்கரி பாஸ் தேவை. (அவன் (OVEN WORK) வேலை) 0711661588. 066893

### காணி/தோட்டம்

**620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு**

புத்தளத்தில் சொத்து விற்பனைக்கு. புத்தளம் நகரில் புத்தளம் ஆதார வைத்தியசாலைக்கு அடுத்துள்ள இணைந்த பாதையில் 60 பேர்ச் காணியுடன் கட்டிடம் விற்பனைக்கு. பிரதான வீதிக்கு 200 மீட்டர். வர்த்தக நோக்கங்கள் மற்றும் வங்கிகளுக்குப் பொருத்தமானது. 0773097803. 066884






# கேள்வி அறிவித்தல்

## கலேவெல பிரதேச சபை

### 2024ஆம் வருடத்தில் இறைச்சிக் கடைகளின் வியாபார உரிமை, வாரச் சந்தைகளில் வரிகளைச் சேகரிக்கும் வியாபார உரிமை, பொது மலசலகூடங்களில் சேவைக் கட்டணங்களை அறவிடும் விற்பனை உரிமையை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் இறைச்சியை விற்பனை செய்யும் வியாபார உரிமை, வாரச் சந்தைகளில் வரிகளைச் சேகரிக்கும் வியாபார உரிமை, பொது மலசலகூடங்களில் சேவைக் கட்டணங்களை அறவிடும் உரிமையை 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்காக என்னால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

01. கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம்: 2023-10-31ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை
02. கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம்: 2023-11-01ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை
03. கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் திகதி மற்றும் நேரம்: கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து

கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரர் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் முன்னைய குத்தகைதாரர்கள் தாங்கள் செலுத்த வேண்டிய வரிகளை நிலுவையின்றி செலுத்தியிலிருந்தால் மாத்திரமே கேள்வி மாதிரிப் படிவங்கள் வழங்கப்படும். வரி நிலுவையுள்ள குத்தகைதாரர்களுக்கு கேள்வி மாதிரிப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

**கேள்விதாரர்களுக்கான நிபந்தனைகள்:**

01. கேள்வி மாதிரிப் படிவங்களை 2023-10-31ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் குறித்த கட்டணத்தை இந்த அலுவலகத்திற்குச் செலுத்தி கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இயைபுடைய கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஒவ்வொரு ஆதனத்திற்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. சகல கேள்வி மாதிரிப் படிவங்களும் இரு நகல்களில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்விரு பிரதிகளையும் வெவ்வேறாக 2 உறைகளில் இட்டு ‘‘மூலப் பிரதி’’ மற்றும் ‘‘நகல் பிரதி’’ எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் தனியொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘கலேவெல பிரதேச சபை 2024ஆம் வருடத்தில் விற்பனை குத்தகை உரிமையை பெற்றுக்கொள்ளல்:...........................’’ (குறித்த இடத்தின் பெயர்) எனக் குறிப்பிடுதல் வேண்டும்.
03. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்காக உங்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையை 12ஆல் வகுத்து 12 சமமான தவணைகளில் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் ஒரே தடவையில் 03 மாதங்களுக்கான குத்தகை தொகைக்குச் சமமான தொகையை சபையில் வைப்புச் செய்து உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும். மேலும் மாதாந்த குத்தகைத் தொகையை மாதத்தின் 10ஆம் திகதிக்கு முன் செலுத்துதல் வேண்டும்.
04. குத்தகைதாரரினால் கோரப்படும் கேள்வித் தொகைக்கு 10% முத்திரைக் கட்டணம் அறவிடப்படும்.
05. இதற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அல்லது பிரதேச சபையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக அவ்வப்போது விதிக்கப்படும் வரிகளைச் செலுத்துவதற்கும், வரித் தொகையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கும் குத்தகைதாரர் இணங்குதல் வேண்டும்.
06. கேள்விப் படிவங்களை தபாலில் அனுப்புவதானால் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் ‘‘செயலாளர், பிரதேச சபை, கலேவெல’’ எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அவ்வாறல்லாவிடில் 2023-11-01ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அந்த நேரத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.
07. இந்த அறிவித்தலுக்கு இயைபான கேள்வி ஒன்றை அல்லது பலவற்றை அல்லது அனைத்து கேள்விகளையும் காரணம் காட்டாமல் நிராகரிக்கும் அதிகாரத்தை பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன், இது தொடர்பில் கலேவெல பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
08. கேள்விகள் திறக்கப்படும் நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.
09. கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொண்டு கேள்விகளைச் சமர்ப்பிக்காதிருத்தல் அல்லது கேள்வியை ஏற்றுக்கொண்டு குறித்த தொகையைச் செலுத்தி உடன்படிக்கையில் கைச்சாத்திடத் தவறுபவர்கள் அல்லது ஆகக் குறைந்த கேள்வித் தொகைக்குக் குறைவாக கேள்விகளைச் சமர்ப்பிப்பவர்கள் அல்லது குறித்த நேரத்திற்குப் பின்னர் கேள்விகளைச் சமர்ப்பிப்பவர்களின் வைப்புத் தொகை மீளளிக்கப்படமாட்டாது.
10. கேள்வி மாதிரிப் படிவங்களில் மாற்றங்களைச் செய்வதானால் கேள்விதாரர் அதற்கு தமது சிற்றொப்பத்தை இட்டு உறுதி செய்தல் வேண்டும். இலக்கத்தில் மற்றும் எழுத்தில் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகைகளுக்கிடையில் வித்தியாசம் இருந்தால் எழுத்தில் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகை சரியானதெனக் கவனத்திற் கொள்ளப்படும்.
11. கேள்விதாரரின் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றை கேள்வி மாதிரிப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும் என்பதுடன் கேள்வி மாதிரிப் படிவத்துடன் வழங்கப்படும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டதாக கையொப்பமிட்டு கேள்விப் படிவத்தின் மூலப் பிரதியுடன் இணைத்தல் வேண்டும்.
12. குறித்த இடங்களுக்கான மின் கட்டணங்கள் / நீர்க் கட்டணங்கள் குத்தகைதாரரால் செலுத்தப்படல் வேண்டும்.
13. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் வருகை தந்து அல்லது கலேவெல பிரதேச சபைச் செயலாளரின் 066 2289275 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

**கே. அபேரத்ன,**
**செயலாளர்,**
**கலேவெல பிரதேச சபை.**

2023-10-06ஆம் திகதி கலேவெல பிரதேச சபை அலுவலகத்தில்.

**அட்டவணை 1**

**இறைச்சிக் கடைகள்**

| தொ. இல. | இறைச்சிக் கடைகளின் பெயர் | 2024ஆம் வருடத்திற்கான உத்தேச ஆகக் குறைந்த கேள்வி ரூபா 2023ஆம் வருடத்தின் கேள்வித் தொகை | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | புலத்தவெல மாட்டிறைச்சிக் கடை | 944,500.00 | 10,000.00 | 1,500.00 |
| 02 | தபடகஹவத்த மாட்டிறைச்சிக் கடை | 225,000.00 | 10,000.00 | 1,500.00 |
| 03 | கனாதன மாட்டிறைச்சிக் கடை | 170,000.00 | 10,000.00 | 1,500.00 |
| 04 | வஹகோட்டே மாட்டிறைச்சிக் கடை | 110,000.00 | 10,000.00 | 1,500.00 |
| 05 | வேரகலவத்த மாட்டிறைச்சிக் கடை | 135,000.00 | 10,000.00 | 1,500.00 |
| 06 | மாதிபொல மாட்டிறைச்சிக் கடை | 46,800.00 | 5,000.00 | 1,500.00 |
| 07 | கனாதன பன்றியிறைச்சிக் கடை | 46,600.00 | 5,000.00 | 1,500.00 |
| 08 | ரங்வெட்டியாவ மாட்டிறைச்சிக் கடை | 105,000.00 | 10,000.00 | 1,500.00 |

**வாரச்சந்தைகள்**

| தொ. இல. | வாரச்சந்தையின் பெயர் | 2024ஆம் வருடத்திற்கான உத்தேச ஆகக் குறைந்த கேள்வி ரூபா | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கலேவெல சனிக்கிழமை வாரச்சந்தை | 850,500.00 | 10,000.00 | 1,500.00 |
| 02 | மக்குளுகஸ்வெவ வெள்ளிக்கிழமை வாரச்சந்தை | 120,500.00 | 10,000.00 | 1,500.00 |
| 03 | மாதிபொல வியாழக்கிழமை வாரச்சந்தை | 5,000.00 | 1,000.00 | 1,500.00 |

**பொது மலசலகூடங்கள்**

| தொ. இல. | பொது மலசலகூடங்களின் பெயர் | 2024ஆம் வருடத்திற்கான ஆகக் குறைந்த உத்தேச கேள்வி ரூபா | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்புத் தொகை ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 01 | கலேவெல பொது மலசலகூடம் | 255,000.00 | 10,000.00 | 1,500.00 |
| 02 | கலேவெல புதிய பஸ் நிலைய பொது மலசலகூடம் | | | |
| 03 | கலேவெல பட்டின சபை சந்தைக் கட்டிடத் தொகுதி மலசலகூடம் | | | |

**கவனிக்க வேண்டியது:**

1. இறைச்சிக் கடைகளின் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரரினால் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட திட்ட வரைப்படத்திற்கிணங்க கட்டிடமொன்றை தமது சொந்த செலவில் நிர்மாணித்துக் கொள்ளல் வேண்டும்.
2. வைப்புச் செய்யப்படும் மூன்று மாத வைப்புத் தொகையை 2025 ஜனவரி மாதத்தில் மீளச் செலுத்துவற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**கே. அபேரத்ன,**
**செயலாளர்,**
**கலேவெல பிரதேச சபை.**

2023-10-06ஆம் திகதி **கலேவெல பிரதேச சபை அலுவலகத்தில்.**

# பெறுகை அறிவித்தல்

## அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம - இலங்கை

2024ம் ஆண்டிற்காக பராமரிப்பு மற்றும் நிர்மாண ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வைத்தியசாலைகளில் சேருகின்ற உக்கி போகக் கூடிய கழிவுப் பொருட்கள்/ கலப்பு கழிவுப் பொருட்கள் (தொற்றாத) அகற்றுவதற்காக ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான கேள்வி அழைப்பு

மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2023.11.03 மு.ப. 10.00 வரை கேள்விகள் ஏற்கப்படும். கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் திறக்கப்படுவதுடன் அதற்காக கேள்விதாரரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

மேற்படி முகவரியில் நிறுவனப் பிரிவில் 2023.11.02 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 2.30 இற்கு இடைப்பட்ட காலத்திற்குள் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்கு கேள்விதாரர்கள் தமது வேண்டுதல் கடிதம், தகைமைகளை உறுதி செய்யும் சான்றுகள் மற்றும் கேள்விக் கட்டணத்தை செலுத்துதல் சம்பந்தமாக அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளரால் விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | வேலை | தகைமை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|
| 01. | 2024ம் ஆண்டிற்காக மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை சார்பாக நிர்மாண மற்றும் பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் | C09, C08 அல்லது C07, EM05 அல்லது அதற்கு மேல் SP05 அல்லது அதற்கு மேல் | ரூ. 2500.00 |
| 02 | 2024ம் ஆண்டிற்காக மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் சேருகின்ற உக்கிப் போகின்ற கழிவுப் பொருட்கள்/ கலப்பு கழிவுப் பொருட்கள் (தொற்றாத) அகற்றுதல் சார்பாக ஒப்பந்தக்காரரை நியமித்துக் கொள்ளல் | குறைந்தபட்சம் அரச வைத்தியசாலையொன்றில் 03 வருடம் குப்பைகள் அகற்றுதல் பற்றிய அனுபவம் இருத்தல் வேண்டும் | ரூ. 500.00 |

மேலதிக விபரங்களுக்கு பணிப்பாளர் அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம என்ற முகவரியில் விசாரிக்கலாம். தொ. பே. இலக்கம் 011-2840233 எந்தக் கட்டணமும் இன்றியே கேள்வி ஆவணங்களைப் பரீட்சிக்கலாம். கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச கேள்விச் சபை,**
**அபேக்ஷா வைத்தியசாலை,**
**மஹரகம.**

# புத்தளம் நகர சபை

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 2024

2024ஆம் ஆண்டிற்கு கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பொருட்களை விநியோகிக்க, சேவைகளை வழங்க ஆர்வமுள்ள தனியார் தாபனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பங்களைத் தாங்கிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ‘2024ஆம் வருடம் வழங்குநர்களைப் பதிவு செய்தல்’ எனும் விடயம் எழுதப்பட வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 2023.12.31ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் வந்தடைய வேண்டும்.

குறித்த தினத்தின் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பாக இறுதித்தீர்மானம் செயலாளருக்குரியது.

**பொருட்கள் மற்றும் பதிவுக் கட்டணம் (1 முத்திரைக் கட்டணம்) சேர்க்கப்பட்டுள்ளது.**

| | | |
|---|---|---|
| 01. | காகிதாதிகள் | 2020.00 |
| 02. | அலுவலக உபகரணங்கள் (தட்டச்சு இயந்திரம், கணனி இயந்திரம், கூட்டல் இயந்திரம் போன்ற திருத்தலுக்கு தேவையான பொருட்கள்) | 2020.00 |
| 03. | தளபாடங்கள் விநியோகமும் திருத்தமும் | 2020.00 |
| 04. | அச்சிடுதல் | 2020.00 |
| 05. | மின்சார உபகரணங்கள், தெருவிளக்குகள் | 2020.00 |
| 06. | தண்ணீர் குழாய் இணைப்புகள் | 2020.00 |
| 07. | வாகன அனுமதிக் தகடு (சைக்கிள், வண்டி) | 2020.00 |
| 08. | கட்டிடப் பொருட்கள் | 2020.00 |
| 09. | பாதை நிர்மாண மூலப் பொருட்கள் | 2020.00 |
| 10. | பாதை நிர்மாணப் பொருட்கள் (அளவிடும் கருவிகள்) | 2020.00 |
| 11. | வாகன உதிரிப்பாகங்கள் | 2020.00 |
| 12. | வாசிகசாலைப் புத்தகங்கள் | 2020.00 |
| 13. | கனரக இயந்திரங்கள் கூலிக்கு அமர்த்தல் (பெகோ, டோசர், கென்டர், ட்ரெக்டர், அதிர்வு இயந்திரம்) | 2020.00 |
| 14. | கெப் வண்டி, வேன் வண்டி, மோட்டார் வண்டி வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் | 2020.00 |
| 15. | சிறுவர் பூங்காவிற்கான விளையாட்டுப் பொருட்கள் வழங்கல் | 2020.00 |
| 16. | தட்டச்சு இயந்திரம், ரோணியோ இயந்திரம், கணனி மற்றும் உதிரிப்பாகங்கள், பிரிண்டர் இயந்திரங்களை திருத்துதல், டோனர் மற்றும் ரிப்பன் வகைகள் | 2020.00 |
| 17. | வேலைத்தள உபகரணங்கள் (சவள், ரேக்கை மண்வெட்டி, வீச்சு கத்தி போன்ற) | 2020.00 |
| 18. | சுகாதார சேவை பொருட்கள் (விளக்குமார், பிரஷ், சவர்க்காரம், ஹார்பிக், லய்சோல் போன்ற) | 2020.00 |
| 19. | ஒலிபெருக்கிக் கருவிகள் வழங்கல் | 2020.00 |
| 20. | ஒலிபெருக்கிப் பொருட்கள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் | 2020.00 |
| 21. | வாகன டயர் மற்றும் டியூப் பெற்றுக்கொள்ளல் | 2020.00 |
| 22. | வாகனத் திருத்தம் (கனரக மற்றும் மென் வாகனங்கள்) | 2020.00 |
| 23. | வாகனம் சேர்விஸ் பண்ணுதல் | 2020.00 |
| 24. | வெல்டிங் பகுதிக்குத் தேவையான பொருட்கள் விநியோகித்தல் | 2020.00 |
| 25. | உடற்பயிற்சி நிலையங்களுக்குத் தேவையான பொருட்கள் விநியோகித்தல் | 2020.00 |
| 26. | தச்சு வேலைக்காக தேவையான மூலப்பொருட்கள் விநியோகித்தல் (மரம் மற்றும் பரால) | 2020.00 |
| 27. | தச்சு வேலைக்கான பொருட்கள் விநியோகித்தல் | 2020.00 |
| 28. | கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் விநியோகித்தல் | 2020.00 |
| 29. | சீருடை மற்றும் சீருடை தயாரித்தல் | 2020.00 |
| 30. | பூங்காவை அழகுபடுத்தும் பொருட்கள் வழங்கல் (பூச்சாடி, சீமெந்து வாங்கு, அல்லது பய்பர் மிருகங்கள் போன்ற) | 2020.00 |
| 31. | மொழிபெயர்ப்புச் சேவை | 2020.00 |
| 32. | தீயணைக்கும் இயந்திரம் விநியோகித்தல் மற்றும் மீள் நிரப்பல் | 2020.00 |
| 33. | குப்பைத்தொட்டி விநியோகித்தல் | 2020.00 |
| 34. | CCTV கெமரா விநியோகித்தல் மற்றும் சேவைகள் வழங்குதல் | 2020.00 |
| 35. | அறிவித்தல் பலகை தயாரித்தல் | 2020.00 |
| 36. | நில அளவையாளர் சேவை | 2020.00 |
| 37. | நிபுணத்துவச் சேவைகளை வழங்குதல் (ஆலோசனை சேவை, இன்ஜினியர் சேவை போன்ற) | 2020.00 |
| 38. | LED டிஜிட்டல் போர்ட் தயாரித்தல் | 2020.00 |
| 39. | அலங்காரப் பொருட்கள் விநியோகித்தல் (பிளாஸ்டிக் பூக்கள், பூக்கள், ஆபரணங்கள்) | 2020.00 |
| 40. | A/C வழங்கல் மற்றும் திருத்துதல் | 2020.00 |
| 41. | இரும்புப் பொருட்கள் மற்றம் ஏனைய அலுவலக உபகரணங்கள் | 2020.00 |
| 42. | விளையாட்டுப் பொருட்கள் விநியோகித்தல் | 2020.00 |
| 43. | மழைக்கவச உடை மற்றும் பாதுகாப்பு கவச உடை விநியோகித்தல் | 2020.00 |
| 44. | பாலர் பாடசாலை பிள்ளைகளுக்காக பாடசாலை உபகரணங்கள் விநியோகித்தல் | 2020.00 |
| 45. | வைபவங்களுக்கான கூடாரங்கள் விநியோகித்தல் (வாடகை) | 2020.00 |
| 46. | வைபவங்களுக்காக வழங்கப்படுகின்ற பரிசுப் பொருட்கள் விநியோகித்தல் | 2020.00 |
| 47. | வன்பொருள் உபகரணம் | 2020.00 |
| 48. | ஒப்பந்தங்களைப் பதிவு செய்தல் (CIDA நிறுவனத்தின் அனுமதிப்பத்திரம் பெற்றவர்கள் மட்டும்) | 5050.00 |

பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களைத் தவிர மேலதிக தகுதிகள் உள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கோரல் கொள்வனவு செய்யும் உரிமை நகர சபைக்கு உரித்தானது.

விலை கோரப்படும் போது அதனை முன்வைப்பது அல்லது கட்டளை செய்யும் வேளையில் அவற்றை வழங்க முடியாமல் போகும், வழங்கப்படும் முன்மாதிரிக்கமைய வழங்காதவர்களின் பதிவுகளை அறிவுறுத்தலின் பின்பு இரத்துச் செய்யப்படும்.

வெவ்வேறு விடயங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் அவற்றிற்கான வேறுவேறு விண்ணப்பங்களுக்குரிய கட்டணத்தை செலுத்தி அதன் பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

**பதிவு செய்வதற்கான விண்ணப்பப் பத்திரத்தில் கீழ்வரும் விடயங்கள் உள்ளடங்க வேண்டும்.**

1. பெயர், பதிவு செய்யப்படும் முகவரி, தொலைபேசி மற்றும் பெக்ஸ் இலக்கம், மின்னஞ்சல் முகவரி
2. பதிவு செய்வதற்கு விரும்பும் வழங்குதல் மற்றும் சேவை (தங்களுடைய நிறுவனத்தில் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளை மட்டும் குறிப்பிடுக.)
3. வியாபார நிலை (முகவர்களா? பங்காளிகளா? வரையறுக்கப்பட்ட நிறுவனங்களா?)
4. வியாபாரப் பதிவு இலக்கம்
5. பொருட்கள் போக்குவரத்து பற்றிய விபரம்
6. வழங்கப்படும் கடன் வசதி (நாட்களின் எண்ணிக்கை - குறைந்தது 30 நாட்களாக)
7. சமர்ப்பிக்கப்பட்ட ஏலங்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

கட்டணங்களை காசுக்கட்டளை அல்லது பணமாக செலுத்த வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**மேலதிக விபரங்களுக்கு:**

❖ தொ.இல. : 032-2265275/ 0322266187
❖ பெக்ஸ் இல: 032-2266786

**எல்.பீ.ஜீ. ப்ரீதிகா**
**செயலாளர்,**
**புத்தளம் நகர சபை,**
**நகர சபை அலுவலகம்,**
2023.10.02




## யெமனை சமன் செய்தது இலங்கை கால்பந்து அணி



பிஃபா உலகக் கிண்ணம் மற்றும் ஆசிய கிண்ணத்திற்கான தகுதிகாண் சுற்றில் யெமனுக்கு எதிரான இரண்டாவது கட்ட போட்டியை இலங்கை கால்பந்து அணி 1–1 என சமநிலை செய்தது.

சவூதி அரேபியாவில் கடந்த வாரம் நடந்த முதல் கட்டப் போட்டியில் 0–3 என தோல்வியை சந்தித்த இலங்கை அணி நேற்று முன்தினம் (17) கொழும்பு, குதிரைப்பந்தய திடல் மைதானத்தில் நடைபெற்ற இரண்டாவது கட்டப் போட்டியில் சிறப்பாக செயற்பட்டது.

போட்டியின் நான்காவது நிமிடத்திலேயே யெமன் அணி கோல் பெற்றபோதும் இலங்கை வீரர்கள் எதிரணிக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்தனர். இதன்மூலம் 89 ஆவது நிமிடத்தில் அணித் தலைவர் சரித்த ரத்னாயக்க பதில் கோல் புகுத்தி போட்டியை சமன் செய்தார்.

எனினும் இரண்டு கட்டப் போட்டிகளிலும் 4–1 கோல்களால் முன்னிலை பெற்ற யெமன் அணி இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றது.

## பாக். அணியினருக்கு சுகயீனம்

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளர் சஹீன் ஷா அப்ரிடி உட்பட சில வீரர்களுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அணி நிர்வாகம் அறிவித்துள்ளது. அணியின் வீரர்கள் சிலருக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, தற்போது வீரர்களின் உடல்நிலை சரியாகி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில், “எமது அணியின் சில வீரர்களுக்கு சுகயீனம் ஏற்பட்டிருந்ததுடன், இதில் சிலர் முழுமையாக குணமடைந்துள்ளனர். தற்போது குணமடைந்து வரும் சில வீரர்கள் வைத்தியர்களின் கண்காணிப்பில் உள்ளனர்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணியின் முன்னணி வீரரான சஹீன் ஷா அப்ரிடி உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருப்பதுடன், அப்துல்லாஹ் சபீக், மொஹமட் ரிஸ்வான், சல்மான் ஆகா அலி, மொஹமட் ஹாரிஸ் மற்றும் ஷமான் கான் ஆகியோரும் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.



வீரர்களுக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ள போதும் இது வைரஸ் தொற்று மற்றும் நோய் இல்லை என பாகிஸ்தான் அணியின் வைத்தியர்கள் உறுதிசெய்துள்ளனர். இதேவேளை சுகயீனத்துக்கு ஆளாகியுள்ள வீரர்கள் அடுத்து நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டிக்கு முன்னர் முழுமையாக குணமடைந்துவிடுவர் என பாகிஸ்தான் அணி நிர்வாகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி நாளை (20) நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய ரசிகர்கள் மீது பாகிஸ்தான் முறையீடு



அஹமதாபாத் நரேந்திர மோடி அரங்கில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான உலகக் கிண்ண போட்டியில் பாகிஸ்தான் வீரர்களை நோக்கி ரசிகர்களின் நடத்தை குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலிடம் முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த சனிக்கிழமை (14) நடந்த இந்தப் போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுகளால் இலகு வெற்றியீட்டியது. போட்டியை காண அரங்கில் சுமார் 100,000 ரசிகர்கள் திரண்டனர். இதில் ஒருசில பாகிஸ்தான் ரசிகர்கள் தவிர அதிக பெரும்பான்மையாக இந்திய ரசிகர்களே இருந்தனர்.

இதில் சமூக ஊடகத்தில் பரவிய வீடியோக்கள் அடிப்படையில் குறிப்பிட்ட சில சம்பவங்களை வைத்தே பாகிஸ்தான் முறையிட்டுள்ளது. இதில் நாணய சுழற்சியில் பாக். அணித் தலைவர் மீது அதிருப்தி கூச்சல் எழுப்பப்பட்டதோடு, ஆட்டமிழந்து செல்லும் மொஹமட் ரிஸ்வான் மீது “ஜெய் ஸ்ரீராம்” கோசம் எழுப்பப்பட்டிருந்தது. களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த ஹசன் அலி மீதும் இவ்வாறான கோசம் எழுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் சர்வதேச கிரிக்கெட்டுக்கான ஐ.சி.சியின் பாகுபாட்டு எதிர்ப்பு கொள்கையின் 11ஆவது பிரிவின் கீழ் பாகிஸ்தான் முறையிட்டுள்ளது.

# சர்வதேச செய்திகள்

# காசா மருத்துவமனை தாக்குதலை அடுத்து அரபுலகெங்கும் பெரும் ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு

## இஸ்ரேல் சென்ற பைடனின் இராஜதந்திர முயற்சிகளும் ஸ்தம்பிதம்

காசா மருத்துமனை மீதான தாக்குதல் முஸ்லிம் உலகெங்கும் பெரும் கோபத்தை ஏற்படுத்தி இருக்கும் நிலையில் நேற்று இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இஸ்ரேலுக்கான ஆதரவை உறுதி செய்ததோடு, எந்த ஆதாரத்தையும் வெளிப்படுத்தாது மருத்துமனை தாக்குதல் இஸ்ரேல் அன்றி வேறு தரப்பால் நடத்தப்பட்டது என்று குறிப்பிட்டார்.

அல் அஹ்லி அல் அரபி மருத்துமனை மீது நேற்று முன்தினம் (17) நடத்தப்பட்ட வான் தாக்குதல் 12 நாட்களுக்கு மேல் நீடிக்கும் காசா மீதான தொடர் தாக்குதலின் பயங்கர நிகழ்வாக இருந்தது. இதில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்ட நிலையில் பைடனின் பிராந்தியத்திற்கான அவசர விஜயத்திலும் குழப்பத்தை ஏற்படுத்தியது.



இந்தத் தாக்குதலை அடுத்து அமெரிக்க ஜனாதிபதியுடனான சந்திப்பை அரபுத் தலைவர்கள் ரத்துச் செய்தனர்.

சுமார் 500 பேர் கொல்லப்பட்ட இந்த தாக்குதலின் பின்னணியில் இஸ்ரேல் இருப்பதாக பலஸ்தீன அதிகாரிகள் குற்றம்சாட்டினர். எனினும் இதனை மறுக்கும் இஸ்ரேல், பலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத் போராளிகள் வீசிய ரொக்கெட் குண்டு ஒன்றே தவறி மருத்துவமனை மீது விழுந்ததான கூற்றை நிறுவ முயன்று வருகிறது.

இந்நிலையில் நேற்று இஸ்ரேலை வந்தடைந்த அமெரிக்க ஜனாதிபதியை இஸ்ரேலிய பிரதமர் பென்ஜமின் நெதன்யாகு கட்டித்தழுவி வரவேற்றார். தென்யாகுவை அருகில் வைத்து பேசிய பைடன்: காசா மருத்துவமனையில் இடம்பெற்ற வெடிப்பு பெரும் கவலையையும் கோபத்தையும் தருகிறது. நான் பார்த்ததன் அடிப்படையில், நீங்களன்றி (நெதன்யாகு) மற்ற தரப்பு மூலமே இது நடத்தப்பட்டிருக்கிறது” என்றார்.

பைடனின் மத்திய கிழக்கு விஜயம் ஓர் அமைதி முயற்சியாகவே இருந்தது. அவர் ஜோர்தான், எகிப்து மற்றும் பலஸ்தீன அதிகாரசபை தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு ஒன்றுக்காக அம்மான் செல்ல திட்டமிட்டிருந்தார். எனினும் மருத்துவமனை தாக்குதலை அடுத்து அந்த மாநாட்டை அரபுத் தரப்பினர் ரத்துச் செய்தனர்.

இந்நிலையில் அமெரிக்காவின் உறுதியான ஆதரவுக்கு நெதன்யாகு, பைடனிடம் நன்றியை தெரிவித்துக்கொண்டார். “இஸ்ரேலிய தேசத்தை பாதுகாப்பதற்காக இறைவன் உங்களுக்கு அருள் பாலிக்கட்டும்” என்று நெதன்யாகு குறிப்பிட்டார்.

எனினும் மருத்துவமனை தாக்குதலை அடுத்து இஸ்ரேல் மீது குற்றம் சுமத்தும் அரபுலகம் அதற்கு கடும் கோபத்தை வெளியிட்டு வருகிறது. இதற்கு எதிராக லெபனான், ஜோர்தான், லிபியா, யெமன், துனீசியா, துருக்கி, மொரோக்கோ, ஈரான் மற்றும் இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள மேற்குக் கரையிலும் பெரும் ஆர்ப்பட்டங்கள் வெடித்தன.

இதில் 2020 ஆம் ஆண்டு இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்திய ஐக்கிய அரபு இராச்சியம், பஹ்ரைன் மற்றும் மொரோக்கோ இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேலை கடுமையாகக் கண்டித்தன. அதேபோன்று இஸ்ரேலோடு உறவை ஏற்படுத்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு அண்மையில் அதனை இடை நிறுத்திய சவூதி அரேபியா, இந்தத் தாக்குதல் “இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படை செய்த கொடூரமான குற்றம்” என்று குறிப்பிட்டது.



இஸ்ரேலின் இந்தத் தாக்குதல் வேண்டுமென்று நடத்தப்பட்டது என்றும் சர்வதேச சட்டத்தை தெளிவாக மீறி இருப்பதாகவும் எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசி குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸ் அமைப்புடன் நெருக்கமான உறவை கொண்டிருக்கும் கட்டார் இதனை “கொடூரமான படுகொலை” என்று சாடியதோடு, “இந்த மோசமான சம்பவத்திற்கு இஸ்ரேல் பொறுப்பேற்க வேண்டும்” என்று ஜோர்தான் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல் மீது குற்றம் சாட்டிய இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, இது ஒரு போர் குற்றம் என்றும் மனித குலத்திற்கு எதிரான செயல் என்றும் திட்டமிட்ட அரச பயங்கரவாதம் என்றும் தெரிவித்தது.



அரபு லீக் தலைவர் அஹமது அப்துல் கெயித், இந்த பேரவலத்தை உடன் நிறுத்த வேண்டும் என்று உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார். “மருத்துவமனை ஒன்றில் பாதுகாப்பற்றிருக்கும் மனிதர்கள் மீது தாக்குவதற்கு எத்தனை கொடூரமான மனம் வேண்டும்?” என்று முன்னர் ட்விட்டர் என்று அறியப்பட்ட எக்ஸ் சமூகதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலை அடுத்து லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேலுக்கு எதிராக “கோபத்தின் தினத்தை” நேற்று அறிவித்தது. லெபனானின் அமெரிக்க மற்றும் பிரான்ஸ் தூதரகங்களுக்கு நூற்றுக்கணக்கானோர் பேரணி நடத்தியதோடு பாதுகாப்பு படையினருடன் மோதலில் ஈடுபட்டனர்.

திரிபோலி மற்றும் பிற லிபிய நகரங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் பலஸ்தீன கொடிகளை ஏந்தியபடி, காசா மக்களுக்கு ஆதரவாக கோசங்களை எழுப்பியபடி ஒன்று திரண்டனர். ஈரானின் தலைநகரான டெஹ்ரானில் உள்ள பிரிட்டிஷ், பிரெஞ்சு தூதரகங்களுக்கு வெளியிலும், துருக்கி மற்றும் ஜோர்தானில் உள்ள இஸ்ரேலிய தூதரகங்களுக்கு வெளியிலும் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்றுதிரண்டனர்.

இதேவேளை மருத்துமனை மீதான தாக்குதலை அடுத்து மேற்குக் கரையில் ஏற்பட்ட பாரிய ஆர்ப்பாட்டத்தில் பலஸ்தீன அதிகாரசபையின் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸுக்கு எதிராக மக்கள் கோசம் எழுப்பியதோடு பலஸ்தீன பாதுகாப்பு தரப்பினருடன் மோதலில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் இஸ்ரேல் சிவப்பு கோட்டை தாண்டி இருப்பதாக சாடிய மஹ்மூத் அப்பாஸ், மருத்துவமனை மீதான தாக்குதல் கொடூரமாக படுகொலை என்றும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார். உயிரிழந்தவர்களுக்காக அவர் மூன்று நாள் துக்க தினத்தையும் அறிவித்துள்ளார்.

மருத்துமனை மீதான இந்தத் தாக்குதலுக்கு உலகெங்கும் இருந்து பெரும் கண்டனங்கள் வெளியாகியுள்ளன.

**குவிந்து கிடக்கும் சிதறிய உடல்கள்**

கடந்த செவ்வாய் இரவு (17) அல் அஹ்லி அரபு மருத்துவமனையில் இருந்து வெளிவந்த படங்கள் பெரும் குழப்பத்தின் காட்சிகளைக் காட்டுகின்றன. இரத்தம் தோய்ந்த, உடல் சேதமான மக்கள் இருளில் ஸ்ட்ரெச்சர்களில் கொண்டு செல்லப்படுகின்றனர். இடிபாடுகள் நிறைந்த தெருவில் உடல்களும் சிதைந்த வாகனங்களும் கிடக்கின்றன.

ஏவுகணை ஒன்று அப்பகுதியைத் தாக்குவதையும் அதைத்தொடர்ந்து அங்கு குண்டுவெடிப்பு நடப்பதையும் ஒரு வீடியோ காட்டுகிறது.

“எல்லை கடந்த மருத்துவர்கள்“ என்ற மனிதாபிமான உதவி அமைப்பைச் சேர்ந்த பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் காசன் அபு சித்தா, இந்தச் சம்பவத்தைப் பற்றிக் கூறுகையில், தாம் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்தபோது, ஒரு பெரிய வெடிப்பு ஏற்பட்டது என்றும், அறுவை சிகிச்சை அறையின் மேற்கூரை இடிந்து விழுந்தது என்றும் கூறினார். இந்தச் சம்பவத்தை ‘ஒரு படுகொலை’ என்று அவர் விபரித்தார்.

மீட்பாளர்கள் இரத்தம் தோய்ந்த இடிபாடுகளை அகற்றி வருகின்றனர். இதில் 300 பேர் வரை உயிரிழந்திருப்பதாக காசா சிவில் பாதுகாப்பு தலைவர் ஒருவர் குறிப்பிட்டபோதும், சுகாதார தரப்பு 500 பேர் வரை உயிரிழந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளது. எனினும் மீட்பாளர்கள் தொடர்ந்து சடலங்களை மீட்டு வருவதாக பலஸ்தீன அமைச்சரவை பேச்சாளர் அஷ்ரப் அல் குத்ரா தெரிவித்துள்ளார்.

“மக்கள் ‘எம்மை காப்பாற்றுங்கள்’, ‘எம்மை காப்பாற்றுங்கள்’ என்று கூச்சலிட்டபடி சத்திரசிகிச்சை பிரிவுக்கு ஓடுகிறார்கள். மருத்துவமனைக்குள் இருந்தவர்களே காயமடைந்திருக்கிறார்கள்” என்று அந்த மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர் பதல் நயிம் தெரிவித்தார்.

“மருத்துவமனை முழுவதும் இறந்த, சிதறடிக்கப்பட்ட சடலங்களே உள்ளன. எம்மால் முடிந்தவரை மக்களின் உயிரைக் காக்க நாம் முயன்றபோதும் மருத்துவ பணியாளர்களை விடவும் அந்த எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது. அவர்கள் உயிருடன் இருப்பதை எம்மால் பார்க்க முடிந்தபோதும் அவர்களுக்கு உதவ எம்மால் முடியவில்லை. அவர்கள் உயிர்த்தியாகம் செய்துவிட்டார்கள்” என்றும் அவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனை தாக்குதலுக்கு மத்தியில் காசா மீதான இஸ்ரேலின் வான் தாக்குதல்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. மருத்துமனை தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரேலின் வான் தாக்குதல்களில் காசாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 3,300 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 10,859 பேர் காயமடைந்துள்ளனர். கடந்த 12 நாட்களுக்குள் காசாவின் உயிரிழப்பு எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டு 51 நாட்கள் நீடித்த இஸ்ரேல்–காசா மோதலில் கொல்லப்பட்ட மொத்த பலஸ்தீனர்களின் எண்ணிக்கையை விஞ்சியுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் பலஸ்தீன போராளிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கடையில் இடம்பெறும் மோதல்களில் மேலும் 62 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு 1,250 பேர் காயமடைந்துள்ளனர்.

அங்கு இஸ்ரேலிய சுற்றுவளைப்பு தேடுதல்களில் நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை காசாவில் பொதுமக்களுக்கு எதிரான போருக்கு இஸ்ரேலுக்கு ஆதரவு அளிக்கும் அமெரிக்கா மற்றும் அனைத்து மேற்குலக நாடுகளும் பொறுப்பேற்க வேண்டும் என்று ஹமாஸ் அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது. லெபனானில் நேற்று செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்திய ஹமாஸ் அதிகாரி ஒருவரான ஒசாமா ஹம்தான் இதனைத் தெரிவித்தார்.

காசாவுக்கான உதவிகள் அனுமதிக்கப்படாத நிலையில் அங்கு மனிதாபிமான நெருக்கடி ஒன்று ஏற்பட்டுள்ளது. இஸ்ரேல் ஏற்கனவே காசாவில் மின்சாரம், நீர், எரிபொருள் மற்றும் உணவு விநியோகத்தை துண்டித்து முழு முற்றுகையை அமுல்படுத்தியுள்ளது.

இஸ்ரேல் தவிர்த்து காசாவுக்கான ஒரே வாயிலான இருக்கும் எகிப்துடனான ராபா எல்லைக் கடவையில் எகிப்துப் பக்கமாக உதவிப் பொருட்களை ஏற்றிய நூற்றுக்கும் அதிகமான லொரிகள் காத்துள்ளன. இஸ்ரேலின் தொடர்ச்சியான வான் தாக்குதலுக்கு இடையே உதவி விநியோகத்தை மேற்கொள்ள முடியாதிருப்பதாக எகிப்து குறிப்பிட்டுள்ளது.

காசாவின் நிலைமை கட்டுப்பாட்டை இழந்து சுழல்வதாக உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதனொம் கெப்ரியேசுஸ் எச்சரித்துள்ளார். கடந்த நான்கு நாட்களாக உலக சுகாதார அமைப்பின் மருத்துவ விநியோகங்கள் எல்லையில் சிக்கி இருப்பதாகவும் இந்த மருத்துவ உதவிகளை அனுப்ப நாம் காத்திருக்கும் ஒவ்வொரு விநாடியும் உயிர்கள் பறிபோவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பலஸ்தீனர்களை ஏற்க எகிப்து மறுப்பு

**காசா மீதான இஸ்ரேலிய போரினால் பாதிக்கப்பட்ட பலஸ்தீனர்களை எகிப்தை ஏற்கும்படி கோருவதற்கு பதில் அவர்களை நெகேவ் பாலைவனத்திற்கு அனுப்பலாம் என்று எகிப்து ஜனாதிபதி அப்தல் பத்தா அல் சிசி தெரிவித்துள்ளார்.**

**“இஸ்ரேலில் நெகேவ் பாலைவனம் உள்ளது. காசாவில் தாம் விரும்பும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் வரை பலஸ்தீனர்களை நெகேவ் பாலைவனத்திற்கு அனுப்ப முடியும். பின்னர் அவர்களால் காசாவுக்கு திரும்ப முடியும்” என்று ஜெர்மனி தலைவர் ஒலேப் ஸ்கோல்ஸ் உடன் கெய்ரோவில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பில் வைத்து சிசி தெரிவித்தார்.**



**இதன்போது எகிப்தின் சினாய் தீபகற்பத்தில் பலஸ்தீனர்களுக்கு அடைக்கலம் வழங்குவதற்கு சிசி எதிர்ப்பை வெளியிட்டார்.**

**“பலஸ்தீனகர்கள் எகிப்துக்கு அனுப்பப்பட்டால், இஸ்ரேல் ஆரம்பித்திருக்கும் இராணுவ நடவடிக்கைக்கு பல ஆண்டுகள் எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு ஏற்பட்டால் எகிப்து அதன் விளைவுகளை தொடர்ந்து அனுபவிக்க வேண்டி ஏற்படும் என்பதோடு சினாய் இஸ்ரேலுக்கு எதிரான தளமாக மாறிவிடும். அப்போது எகிப்து பயங்கரவாதத்திற்கான தளமாக அடையாளப்படுத்தப்பட்டுவிடும்” என்றார் சிசி.**

**காசா மீதான முழு முற்றுகை பலஸ்தீனர்களை சினாய்க்கு அனுப்பும் திட்டம் என்றும் அவர் சாடினார்.**

**ஏற்கனவே பெரும்பான்மையான பலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட்ட நிலையில் வெளிநாடுகளில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 19ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# கொத்மலை பிரதேச சபை

## 2024ஆம் வருடத்தில் பிரதேச சபைக்குரித்தான கடை அறைகள்/ விற்பனைக் கூடங்கள்/மீன் தட்டுகள்/காணி /பொது மலசலகூடங்கள் மற்றும் வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்குதல்

1. 2024 ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலத்திற்கு கொத்மலை பிரதேச சபைக்குரித்தான பின்வரும் கடை அறைகள் / விற்பனைக் கூடங்கள் / மீன் தட்டுகள் / காணி / பொது மலசலகூடங்கள் மற்றும் வியாபார உரிமைகளை குத்தகைக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதால் இதில் ஆர்வம் காட்டும் தரப்பினரிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விற்பனை நிலையத்தின் தன்மை | ஆகக் குறைந்த விலைக் கோரல் தொகை ரூபா | கட்டணம் மற்றும் வைப்பு | |
|---|---|---|---|---|
| | | | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் ரூபா | மீளளிக்கப் படும் விலைக் கோரல் பாதுகாப்புப் பிணை ரூபா |
| 1 | பூண்டுலோயா மாட்டிறைச்சிக் கடை | 2,300,000.00 | 2,000.00 | 230,000.00 |
| 2 | ஹப்புகஸ்தலாவ மாட்டிறைச்சி விற்பனை உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 400,000.00 | 1,000.00 | 40,000.00 |
| 3 | பூண்டுலோயா ஆட்டிறைச்சிக் கடை | 157,800.00 | 1,000.00 | 15,780.00 |
| 4 | ஹெல்பொட / தவலன்தென்ன மாட்டிறைச்சி விற்பனை உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 220,000.00 | 1,000.00 | 22,000.00 |
| 5 | பூண்டுலோயா மீன் கடை 01 | 857,550.00 | 2,000.00 | 85,755.00 |
| 6 | பூண்டுலோயா மீன் கடை 02 | 726,000.00 | 2,000.00 | 72,600.00 |
| 7 | ஹப்புகஸ்தலாவ மீன் விற்பனை உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 115,000.00 | 1,000.00 | 11,500.00 |
| 8 | தவலன்தென்ன மீன் தட்டை குத்தகைக்கு வழங்குதல் | 136,900.00 | 1,000.00 | 13,690.00 |
| 9 | கெட்டபூலா மீன் விற்பனை உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 42,900.00 | 1,000.00 | 4,290.00 |
| 10 | கொரக்கஓய மீன் விற்பனை உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 40,.000.00 | 1,000.00 | 4,000.00 |
| 11 | உடபனே காணி | 7,600.00 | 200.00 | 760.00 |
| 12 | ஹப்புகஸ்தலாவ பொது மலசலகூடம் | 12,000.00 | 200.00 | 1,200.00 |
| 13 | பூண்டுலோயா பொது மலசலகூடம் | 60,000.00 | 200.00 | 6,000.00 |
| 14 | தவலன்தென்ன பொது மலசலகூடம் | 18,000.00 | 200.00 | 1,800.00 |
| 15 | புதிய நகர பொது மலசலகூடம் | 24,000.00 | 200.00 | 2,400.00 |
| 16 | பாலுவத்த பொது மலசலகூடம் | 6,000.00 | 200.00 | 600.00 |
| 17 | பூண்டுலோயா வாரச்சந்தை சிற்றுண்டிச்சாலை | 102,000.00 | 500.00 | 10,200.00 |
| 18 | ரம்பொட புதிய விற்பனை நிலைய கடை அறை 01 | 60,000.00 | 500.00 | 6,000.00 |
| 19 | ரம்பொட புதிய விற்பனை நிலைய கடை அறை 02 | 60,000.00 | 500.00 | 6,000.00 |
| 20 | ரம்பொட புதிய விற்பனை நிலைய கடை அறை 03 | 60,000.00 | 500.00 | 6,000.00 |
| 21 | பூண்டுலோயா பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள கடை அறை | 60,000.00 | 500.00 | 6,000.00 |

2. விலைக்கோரல் விண்ணப்பங்கள் வழங்குதல் மற்றும் ஏற்றுக்கொள்ளல்
   அ. 2023-10-19ஆம் திகதி முதல் 2023-11-09ஆம் திகதி வரையான வார நாட்களில் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத படிவக் கட்டணத்தைச் செலுத்தி கொத்மலை பிரதேச சபையின் பூண்டுலோயா பிரதான அலுவலகத்தின் முன்னரங்கு அலுவலகத்திற்கு வருகை தந்து விலைக்கோரல் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
   ஆ. 2023-11-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பிரதேச சபைச் செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள விலைக்கோரல் பெட்டியில் உள்ளிட்டு முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஒப்படைக்கலாம். விலைமனுக்களை தபாலில் சமர்ப்பிப்பதானால் மேற்கூறிய நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
   இ. விலைக்கோரல் விண்ணப்பப் படிவங்களுடன் விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள், விதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடங்கிய படிவமொன்று வழங்கப்படும்.
3. விலைக்கோரல் விண்ணப்பங்கள் திறக்கப்படுதல்
   அ. 2023-11-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொத்மலை பிரதேச சபையில் விலைக்கோரல் விண்ணப்பங்கள் திறக்கப்படும்.
   ஆ. விலைமனுதாரர்கள் அல்லது அவரின் எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் விலைக்கோரல் விண்ணப்பங்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.
   இ. தெரிவு செய்யப்பட்ட குத்தகைதாரர் இறைச்சிக் கடைக்காக இறைச்சிக்காக அனுமதிக்கப்பட்ட மாடு வெட்டும் இடமொன்றை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
4. மேலதிக விபரங்களை அறிந்துகொள்ளல்
   அ. வாரநாட்களில் அலுவலக நேரத்தினுள் 0512233227 எனும் தொலைபேசி இலக்கத்தில் அல்லது பிரதேச சபையின் பூண்டுலோயா பிரதான அலுவலகத்தின் முன்னரங்கு அலுவலகத்தில் இது தொடர்பான மேலதிக விபரங்களை விசாரித்தறியலாம்.
   ஆ. எந்தவொரு கடை அறை/விற்பனைக்கூடம்/மீன் தட்டு/காணி அல்லது பொது மலசலகூடத்தின் நிலைமையைக் பரீட்சித்துப் பார்ப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

**2023-10-16ஆம் திகதி**
**கொத்மலை பிரதேச சபை அலுவலகத்தில்**

**எச்.எம்.ஜீ. அஜித் புஷ்பகுமார,**
**செயலாளர்,**
**கொத்மலை பிரதேச சபை.**

# கட்டுநாயக்க - சீதுவ நகர சபை

## பெறுகை அறிவித்தல்

2024ம் ஆண்டிற்காக இறைச்சிக்கடை/வாரசந்தை/தினச்சந்தை மற்றும் கட்டுநாயக்க பொதுச்சந்தை அருகில் கடை அறைகளின், விற்பனை உரிமையை குத்தகைக்கு விடல்.

01. 2024.01.01 முதல் 2024.12.31 வரை இங்கு கீழே குறிப்பிடப்படும் அட்டவணையில் தரப்பட்டுள்ள இறைச்சிக்கடை, சந்தை மற்றும் கட்டுநாயக்க பொதுச்சந்தை அருகில் கடை அறைகளை குத்தகைக்கு விடுவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. குறித்த விண்ணப்பங்களை 2023.11.01 பி.ப.3.00 வரை தமது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பித்த பின்னர் இவ் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன், பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2024.11.02 பி.ப.2.00 வரை என்னால் ஏற்கப்படும்.

02. கேள்விகள் இரு பிரதிகளுடன் விநியோகிக்கப்படுவதுடன், அக்கேள்விப் பத்திரங்களை பூர்த்தி செய்து மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக பொறியிட்டு கடித உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு "செயலாளர் மற்றும் சபையின் அதிகார செயற்பாடுகளை செயற்படுத்தும் அதிகாரி கட்டுநாயக்க - சீதுவ நகர சபை, சீதுவ" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் தம்மால் விண்ணப்பிக்கும் கேள்வி உருப்படி பற்றி தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

03. விலைமனுக்கள் திறத்தல் 2023.11.02 பி.ப.2.05 இற்கு நகரசபை அலுவலகத்தில் நடைபெறுவதுடன், விண்ணப்பதாரிக்கு அல்லது விண்ணப்பதாரி சார்பாக அவரது எழுத்துமூல அனுமதிபெற்ற பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

04. அங்கீகரிக்கப்பட்ட குத்தகைதாரரால் விலைமனுக்களில் குறிப்பிடப்படும் தொகையில் நான்கில் ஒன்று (1/4) ஐ எழுத்து மூல அறிவித்தல் விடுத்து 07 நாட்களுக்குள் இவ் அலுவலகத்திற்கு காசாக வைப்புச் செய்து குத்தகை உடன்படிக்கையொன்றுக்கு உட்படல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு தவறும் குத்தகைதாரரின் விலைமனுக்கள் இரத்துச் செய்யப்படுவதுடன் குறித்த வைப்புத்தொகை சபைக்கு உரியதாக்கப்படும்.

05. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களில் ஏதேனும் விலைமனுக்கள் அல்லது சகல விலைமனுக்களையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் சபைக்கு உரியது. கடந்த ஆண்டுகளில் பெறுகை விடயங்கள் சம்பந்தமாக அபகீர்த்தியானோர் பட்டியலில் உட்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படமாட்டாது. மேலும், விலைமனு விண்ணப்பங்கள் பெற்றுகொண்டு விலைமனுக்களை சமர்ப்பிக்காத நபர்களின் குறித்த வைப்புத்தொகையும் சபைக்கு உரியதாக்கப்படும்.

06. தாம் விண்ணப்பிக்கும் தொகைக்கு மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்ட குத்தகைதாரர் அத்தொகையுடன் சம்பந்தப்பட்ட முத்திரை கட்டணத்தொகையையும் செலுத்துதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கம் மூலம் அலுவலக நேரங்களில் விசாரித்து அறியலாம்.
தொ.பே. இலக்கம் - 0112253575.
கலப்பு வருமானம்

**2023.10.17**

**கட்டுநாயக்க - சீதுவ நகர சபை**
**சீதுவ**

**எஸ்.ஏ.கே.என்.இந்திரஜித்**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம்**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**கட்டுநாயக்க - சீதுவ நகரசபை**

**அட்டவணை**

| தொடர் இல | கேள்வித்தன்மை | கேள்வி வைப்புத் தொகை | கேள்வி படிவக் கட்டணம் | 2024 ஆம் ஆண்டின் குறைந்தபட்ச கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | கட்டுநாயக்க பொதுச்சந்தை மாட்டிறைச்சி கடை விற்பனை உரிமையை குத்தகைக்கு விடல் | ரூ.10,000.00 | ரூ.250.00 | ரூ.1,500,000.00 |
| 2 | முலங்கமுவ ஞாயிறு சந்தை வளாகத்தின் மாட்டிறைச்சி கடை விற்பனை உரிமையை குத்தகைக்கு விடல் | ரூ.3000.00 | ரூ.250.00 | ரூ.200,500.00 |
| 3 | முலங்கமுவ ஞாயிறு வாரச்சந்தை விற்பனை உரிமையை குத்தகைக்கு விடல் | ரூ.5000.00 | ரூ.250.00 | ரூ.865,500.00 |
| 4 | சீதுவ வியாழன் வாரச்சந்தை விற்பனை உரிமையை குத்தகைக்கு விடல் | ரூ.5000.00 | ரூ.250.00 | ரூ.748,500.00 |
| 5 | எவரிவத்த தினச்சந்தை விற்பனை உரிமையை குத்தகைக்கு விடல் | ரூ.20,000.00 | ரூ.250.00 | ரூ.3,717,300.00 |
| 6 | கட்டுநாயக்க பொது சந்தை அருகில் கடை அறை இல - 01 | ரூ.3000.00 | ரூ.250.00 | ரூ.180,600.00 |
| 7 | கட்டுநாயக்க பொது சந்தை அருகில் கடை அறை இல - 02 | ரூ.3000.00 | ரூ.250.00 | ரூ.168,000.00 |

**2023.10.17**

**கட்டுநாயக்க - சீதுவ நகர சபை**
**சீதுவ**

**எஸ்.ஏ.கே.என்.இந்திரஜித்**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம்**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**கட்டுநாயக்க - சீதுவ நகரசபை**

# விலை மனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல. பொருட்களது விபரம் - தொகை | விலைமனுகோரல் முடிவுத் திகதி | விலை மனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/128** வாடகைக்கு வான் மின் அத்தியட்சகர் (விநியோக கட்டுமான பிரிவு)- அம்பாறை (இரண்டு வருட காலம்) | 01-11-2023 ம் திகதி பி.ப.2.00 மணி | விநியோக கட்டுமான பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை 063-2222440 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666/026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன் கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவுதிகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்து மூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்து மூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவுத் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**

**வளமான வாழ்விற்கு மின்சாரம்**

**விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON BOC Lake House Branch
Acc. No. 000000377

## வென்னப்புவ பிரதேச சபை

### வரிக்கட்டண சொத்து மதிப்பீட்டுப் பட்டியலை பகிரங்கப்படுத்தல் – 2024 வென்னப்புவ முன்னேற்ற கிராம பிரதேசம்

வென்னப்புவ பிரதேச சபையினால் வென்னப்புவ முன்னேற்ற கிராம பிரதேசத்தின் வரிக்கட்டண சொத்துக்களை புதிதாக ஆய்வு செய்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அந்த புதிய மதிப்பீட்டின் பிரகாரம் விதிக்கப்படும் வரிக்கட்டணங்களை 2024.01.01 முதல் உங்களால் செலுத்தப்படல் வேண்டும். இதனோடு சம்பந்தப்பட்ட அறிவித்தல் உங்களுக்கு வழங்கப்படும். குறித்த மதிப்பீட்டுப் பட்டியல் அலுவலக நேரங்களில் பிரதேச சபை தலைமையகத்தில் பரீட்சித்துப் பார்க்க முடியும் என இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**பிரதேச சபை அலுவலகம்**
**வென்னப்புவ**
**2023.10.18**

**செயலாளர்**
**வென்னப்புவ பிரதேச சபை**

## அறிவித்தல்

2007ம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் விதிகளுக்கமைய கீழே குறிப்பிடப்படும் கம்பனியின் பெயர் மாற்றப்படுகின்றது.

பழைய பெயர்:
**ஸ்மோல் எக்ஸ் (பிவிடி) எல்டிடீ**

பதிவு இல: **PV 103797**

பதிவு முகவரி:
**இல.32, பார்க்வீதி, கொழும்பு - 05**

புதிய பெயர்:
**டிஎக்ஸ்டிவை டிஜிட்டல் (பிவிடி) எல்டிடீ கோர்பரேட் டொக்டர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்**

**கம்பனி செயலாளர்**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## இலங்கை துறைமுக அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/02/PT/6499(MAR) | Complete Fresh Water Cooler for Yanmar 6HAL2 -HTN Generator Engines of Tug Gotaimbara | 30,000.00 | 1,000.00 | 30-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6526(EL) | 35 Nos. 400W Day Light Led Light Fittings for JCT | 75,000.00 | 1,000.00 | 30-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/06/PT/6528(MP) | 14 Nos. Main Hoist Wire Ropes ( 25MM X 485M ) for Mitsui STS Cranes at JCT 3 & 4 | 210,000.00 | 3,500.00 | 30-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/03/PT/6530(MP) | 375M Main and Auxiliary Hoist Wire Rope for Kato KA – 900 (CR 28 ) Mobile Crane | 35,000.00 | 1,000.00 | 30-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/05/PT/6532(MP) | Spares for Cummins QSK – 15 Engines of RTG Cranes | 30,000.00 | 1,000.00 | 30-11-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/02/PT/6514(MAR) | Spares for Kawasaki KST – 180 F/A Rexpeller Units of M/T Airawana | 150,000.00 | 3,500.00 | 05-12-2023 மு.ப. 10.00 மணி |
| CES/FP/04/PT/6531(EL) | Cage CPU for ZPMC Crane Elevators | 20,000.00 | 1,000.00 | 05-12-2023 மு.ப. 10.00 மணி |
| CMS/LP/23/PT/16/029 | 19 NosIPad | 100,000.00 | 3,500.00 | 09-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/24/03 | 02 Nos. 600 Ton Jacks for STS Cranes Lifting up with AN Electric Drive Pump | 120,000.00 | 3,500.00 | 09-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/08/061 | Marine Paints and Thinners for Pilot Launch No - 12 | 40,000.00 | 1,000.00 | 09-11-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/16/058 | ZN – AL Roofing Sheet and ZN – AL Cladding Sheet | 17,000.00 | 1,000.000 | 10-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/17/062 | 100 Ton Asphalt Concrete Wearing Coarse without Transport | 25,000.00 | 1,000.00 | 10-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/08/062 | Spares for Kato KA 900 ; CR 28 Mobile Crane | 18,000.00 | 1,000.00 | 10-11-2023 பி.ப. 1.30 மணி |
| CES/LP/23/PT/16/059 | 2100 Liter Cat DEO 15W 40 Oil for Caterpillar C32 Engine | 37,000.00 | 1,000.00 | 13-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/08/064 | 1000 Nos. Florescent Lamp -2 FT ( LED ) and 2000 Nos. Florescent Lamp – 4 FT ( LED ) | 34,200.00 | 1,000.00 | 13-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/08/065 | 15000 Nos. Duster Cloth Grey -24|” X 24” | 30,000.00 | 1,000.00 | 13-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/16/064 | Soft Copper Tube | 24,000.00 | 1,000.00 | 14-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/08/066 | 15000 Nos. Duster Cloth Grey – 24” X 24” | 30,000.00 | 1,000.00 | 14-11-2023 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/08/067 | 05 Nos. Air Compressor –A 9061303315 | 45,000.00 | 1,000.00 | 14-11-2023 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஒக்டோபர் 20ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
